www.alhasanath.lk

# அல்ஹஸனாத்

الحسنات إسلامية شهرية تصدرها الجماعة الإسلامية السريلانكية

மலர்: 43 இதழ்: 03 மார்ச் 2017 ஜு.ஆகிர் 1438



## இலங்கையர்கள் இல்லாத இலங்கை!

## ஆன்மாவை அச்சுறுத்தும் அலட்சியம்!


Annual Subscription
Sri Lanka: 850.00
India, Pakistan, Maldives, Singapore, Malaysia: 2550.00
Middle East: 2600.00 Australia, Japan, South Korea: 3300.00
England, New Zealand: 4000.00 United America, Canada: 4700.00

ISLAMIC MONTHLY இஸ்லாமிய இலட்சியக் குரல் 60/-


symbol of quality
DOMBAWELA BREEDER FARM
PRODUCER & DISTRIBUTER OF BROILER, LAYER DAY OLD CHICKS
புறொயிலர், லேயர் கோழிக்குஞ்சுகள் உற்பத்தியாளரும், விநியோகஸ்தரும்
CONTACT:
MR.A.R.M. FAZEEL
NO 57, DOMBAWELA, MAHAWELA, MATALE, SRI LANKA
MOBILE NO: 0777765645, 0772621101
E-MAIL: fazeelarm@gmail.com


SimSim
Cellular Service
Mobile Phone பழுதுபார்த்தல்
Unlock பண்ணுதல்
மென்பொருள் தீர்வுகள்
அசல் உதிரிப்பாகங்கள்
100%
Permanent
100%
Sim Unlock
உத்தியோகபூர்வ iPhone களுக்கான
Factory Unlock சேவைகள்
2G, 3G, 3GS, 4, 4S, 5
You break it we fix it.
நம்பிக்கையான
சேவை நிலையம்
உங்கள்
Mobile Phone ஐ
Unlock பண்ணுதல்
Mobile
உதிரிப்பாகங்கள்
IMEI - Based permanent sim unlock for all iPhone and
iPad models, all basebands and firmware covered
Lowest Price - price match guarantee
Official Apple iTunes Unlock -warranty
Don't need to bring your phone to us. Unlock your phones from your home
We have well trained technicians
Fix your Phone while you wait! Call us NOW for Guaranteed repairs.
106/22, Leader Complex, 1st Cross Street,
Colombo 11. | T: +94 11 2448884
E: simsimsellular@gmail.com
Branch: 59-B2, Wikrama Plaza, 1st Cross Street,
Colombo 11 | T: 011 2331232 M: 077 4155555
E: simsimcellular@gmail.com| W: www.simsim.lk
Branch:
38/A, Shopping Complex,
Negombo.
T: +94 31 2235747


بسم الله الرحمن الرحيم





# இனவாதக் குமுறல்கள்: மக்களை ஏமாற்றும் ட்ரம்ப் மாபியா!

15-18



அஷ்ஷெய்க் தாஹிர் எம். நிஹால்
அல்குர்ஆன் விளக்கம்
**அல்குர்ஆனின் நிழலில் நட்பு**
04-06

அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி)
அல்ஹதீஸ் விளக்கம்
**மோசடிக்கார அதிகாரிகள் தங்குமிடம் நரகமே!**
07-10

உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர்
தஃவா களம்
**இலங்கையர்கள் இல்லாத இலங்கை!**
11-14

19-21
**இலங்கை முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கியுள்ள சவால்கள்!**

அந்நிஸா
**உங்கள் பிள்ளையின் ஈமானை புதுப்பித்துக் கொள்ளுங்கள்!**
24-25

**உம்மு ஹராம் பின்த் மில்ஹான் (ரழியல்லாஹு அன்ஹா)**
26-27

30-33 **ஆன்மாவை அச்சுறுத்தும் அலட்சியம்!**



## அல்ஹஸனாத்
இஸ்லாமிய இலட்சியக் குரல்

**பிரதம ஆசிரியர்:**
உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர்

**ஆசிரியர்:**
அஷ்ஷெய்க் ஜெம்ஸித் அஸீஸ்

**விளம்பர முகாமையாளர்:**
எம்.எச்.எம். ரிஸ்வான்

**தளக்கோலம்:**
எம்.எஸ்.எம். ஸினான்

மலர்: 43 இதழ்: 03
2017 மார்ச் ஜு.ஆகிர் 1438

ISSN: 1391 - 460X

வெளியீடு:
இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி




**Contact:**
Sri Lanka Jama'athe Islami
77, Sri Vajiragnana Mw,
Colombo- 00900, Sri lanka
Tel: +94112689324
Fax: +94112686030
Web: www.alhasanath.lk
Email: alhasanath@gmail.com



**விலை விபரம்:**

உள்நாடு: தனிப் பிரதி: ரூபா 60.00 | வருட சந்தா: ரூபா 850.00 | ஆறு மாதம்: ரூபா 425.00
வெளிநாடு: இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, சிங்கப்பூர், மலேசியா: 2550.00 | மத்திய கிழக்கு நாடுகள்: 2600.00 |
அவுஸ்திரேலியா, ஜப்பான், தென் கொரியா: 3300.00 | இங்கிலாந்து, நியூசிலாந்து: 4000.00 |
ஐக்கிய அமெரிக்கா, கனடா: 4700.00


வெளிவந்துவிட்டது..
Islamic Book House இன் புதிய வெளியீடுகள்!
"தரம் ஒன்று முதல் உயர்தரம் வரைக்கான
உசாத்துணை நூல்கள்"
இஸ்லாமிக் புக் ஹவுஸின் புத்தகங்கள்..
நியாயமான விலைகளில் தரமானவைகள்.
முன் எப்போதும் இல்லாத வகையில் பொருத்தமான, கவர்ச்சியான முன் அட்டைகளைத் தாங்கியவைகள்.
அனுபவம்மிக்க, பிரசித்தி பெற்ற தகுதிவாய்ந்த, ஆசிரியர்களால் எழுதப்பட்டவைகள்.
புதிய பாடத்திட்டத்திற்கு (2016-2017) அமைவாக உருவாக்கப்பட்டவைகள்.
தலை நகரை அடுத்து வாழும் மாணவர்களின் மேம்பாடு, நலன் கருதி இலங்கையில் உள்ள அனைத்து இடங்களிலும் இலகுவாகப் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன
www.ibh.lk வலைதளத்தின் ஊடாக Online Order மூலம் புத்தகங்களை பெற்றுக்கொள்ள வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளது.
தபால் மூலமும் (VPP) பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
YOU RING! WE BRING!
FREE HOME DELIVERY SERVICE
City Limits Only / Conditions Apply
அம்மு
தரம் 1
தமிழ் வழி
தரம் 2
தரம் 3
தரம் 4
தத்து
தரம் 1,2
கணிதம்
தரம் 5
அம்மு 3
தமிழ் மொழி
கணிதம் தரம் 1
சுற்றாடல் சுகந்தம்
தரம் 4,5
ஞான ஒளி
தரம் 4
கணிதம் விஞ்ஞானம்
சுற்றாடல்
பூங்கா
Designed by Mufaris JM
For your complete and competitive books & stationery shopping experiences..
IBH
ISLAMIC BOOK HOUSE
77, Dematagoda, Road, Colombo 09, Sri Lanka.
Tel: 2684851, 2669197, Fax: 0112688102 Hot Line 011 5 925 935
E-Mail ibhinfo77@gmail.com Web: www.ibh.lk



# சமூக நீதி உறுதிப்படுத்தப்பட்ட சூழல் வேண்டும்!

சமூக நீதி என்பது தனி மனிதனுக்கும் சமூகத்துக்குமிடையிலான நடுநிலையானதும் நீதியானதுமான இடைத் தொடர்பு என விக்கிபிடியா கலைக்களஞ்சியம் கூறுகின்றது. தனி மனிதன் சமூகத்துக்கும் சமூகம் தனி மனிதனுக்கும் ஆற்ற வேண்டிய கடமைகள் பற்றி இஸ்லாம் விரிவாக பேசியுள்ளது. ''தனி மனிதனுக்கு உணவில்லையேல் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்'' என்று பாரதியார் பாடினார். ''ஒரு நாய் பட்டினியால் இறந்தாலும் அதற்கு நான் அல்லாஹ்விடம் வகை கூற வேண்டும்'' என்று கலீபா உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இன்று சமூக நீதி என்பது மிகக் குறுகிய நோக்கில் உபயோகிக்கப்படும் ஓர் எண்ணக்கருவாக மாறி விட்டது. உதாரணத்துக்கு நமது நாட்டில் இன்று நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களை எடுத்து நோக்கலாம். ஹம்மாந்தோட்டை மாவட்டத்தின் காணிகளை சீனாவிடமிருந்து பாதுகாக்கும் முயற்சி நாட்டுப்பற்றை வெளிக்காட்டும் முற்போக்கு முயற்சியாக காண்பிக்கப்பட்டாலும் அதன் பின்னணியில் இருப்பது அரசியல்வாதிகளின் இனவாத நிகழ்ச்சி நிரலாகும். வில்பத்துவைப் பாதுகாக்கும் போராட்டத்துக்குப் பின்னால் உள்ள உண்மை முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதமாகும். மேல் நீதிமன்ற நீதிபதியாக அண்மையில் நியமிக்கப்பட்ட ராமநாதன் கண்ணன் தொடர்பிலான எதிர்ப்பு நீதித்துறையைப் பாதுகாக்கும் போராட்டமாக அன்றி இனவாதம் கலந்ததாகவே தெரிகிறது.

கோப்பாபிலவு மக்கள் கடந்த ஒரு மாத காலமாக தமது நிலத்தை மீட்கும் அறப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை இந்த நாட்டின் சிங்கள செய்திப் பத்திரிகைகளுக்கு ஒரு செய்தியாகவே தென்படவில்லை. முப்படையினருக்கு நிலம் வேண்டும்தானே என்ற கணக்கில் பலர் கருத்து வெளியிடுகின்றனர். தமது பாரம்பரிய குடியிருப்புக்களிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்களுக்கு நீதி வழங்குவதில் அரசாங்கமும் ஆமை வேகத்திலேயே செயற்படுகின்றது. மன்னாரிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் மீளக் குடியேற தமது நிலத்தைத் தேடும்போது அது தேசிய வனமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு வர்த்தமானி அறிவித்தலும் விடுக்கப்பட்ட நிலையில் அவர்களது போராட்டம் தொடர்கிறது. அதனை மன்னார் முஸ்லிம்களும் முஸ்லிம் அரசியல்வாதிகளும் மேற்கொள்ளும் அத்துமீறலாகச் சித்திரிப்பதற்கு சிங்களத் தேசிய ஊடகங்கள் பெருமுயற்சி எடுக்கின்றன.

2015 ஜனவரி எட்டாம் திகதி மக்கள் ஒன்றிணைந்தமையின் முக்கிய குறிக்கோள் சமூக நீதியை நிலைநாட்டுவதுதான். சமூக நீதியை நிலை நாட்ட வேண்டிய பலம் வாய்ந்த ஒரே நிறுவனம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம்தான். ஆனால், அதனை நிலைநாட்டும் கடமையை கைவிட்ட நிலையே தெரிகிறது. இனவாத, மதவாத சக்திகள் எழுச்சி பெறுவது மட்டுமன்றி, அவர்களது நிலைப்பாடுகள் நியாயப்படுத்தப்படும் ஒரு சூழல் உருவாகி வருகின்றது. இனங்களுக்கிடையிலான முரண்பாட்டையும் மத வெறுப்புச் சூழலையும் தோற்றுவிக்கும் முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க அரசாங்கம் காத்திரமான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. சிறுபான்மை சமூகங்களான தமிழ், முஸ்லிம் அரசியல் தலைமைகளுக்கு கீழ் உள்ள நிறுவனங்களும் சமூக நீதியை நிலைநாட்டும் கடமையில் இருந்து விலகிச் செல்வதனையே நிகழ்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

இந்த நிலையில், சமூகத்தின் மீதுள்ள கடமைகள் பற்றி தனி மனிதர்கள் சிந்திப்பது போன்றே தனி மனிதன் மீதுள்ள கடமைகள், உரிமைகள் பற்றி சமூகமும் சிந்திக்க வேண்டும். கல்வி, சுகாதாரம், அரசியல், பொருளாதாரம், நீதி வழங்குதல் முதலான அனைத்திலும் பாரபட்சமற்ற சூழல் உறுதிப்படுத்தப்படும்போதுதான் உண்மையான சமூக நீதி கிடைக்கும். அதனை இந்த நாட்டில் ஏற்படுத்த நாம் என்ன செய்யலாம்; நாம் சார்ந்த சமூகம் என்ன செய்யலாம்; நாம் சார்ந்த நிறுவனம் அல்லது இயக்கம் அல்லது அமைப்பு என்ன செய்யலாம் என்று சிந்தித்து செயற்படுவோமாக!

அஷ்ஷெய்க் தாஹிர் எம். நிஹால் (அஸ்ஹரி) அதிபர், கதீஜதுல் குப்றா மகளிர் கல்லூரி, வடதெனிய, வெலம்பொட

# அல்குர்ஆனின் நிழலில்

# நட்பு

"அவர்கள் உணராத நிலையில் திடீரென்று யுக முடிவு நேரம் அவர்களிடம் வருவதைத் தவிர வேறு எதையும் அவர்கள் எதிர்பார்க்கிறார்களா? அந்த நாள் வந்து விடும் பொழுது, இறையச்சத்துடன் வாழ்ந்தவர்கள் தவிர உற்ற நண்பர்கள் அந்நாளில் ஒருவருக்கொருவர் பகைவர்களாக இருப்பார்கள். 'என் அடியார்களே! இன்று உங்களுக்கு எந்தப் பயமும் இல்லை. கவலைப்படவும் மாட்டீர்கள்! மகிழ்விக்கப்படுவீர்கள். நீங்களும் உங்கள் மனைவியரும் சுவர்க்கத்தில் நுழையுங்கள்!' (என்று அவர்களுக்குக் கூறப்படும்.)" (43: 66-70)

நட்பு, தோழமை நல்லவனை கெட்டவனாகவும் கெட்டவனை நல்லவனாகவும் மாற்றுவதில் பெரும் பங்காற்றுகின்றது. நட்பு ஒரு மனிதனை நபிமார்களுடன் சுவனத்திற்கு அல்லது பாவிகள் நயவஞ்சகர்கள் மற்றும் நிராகரிப்பவர்களுடன் நரகத்திற்குக் கொண்டு சேர்க்கக் கூடிய தொடர்பாகவும் அமையும் வாய்ப்புண்டு.

"ஒரு மனிதன் தனது நண்பனின் மார்க்கத்தில் (கொள்கையில்) தான் இருப்பான். எனவே, எவருடன் நட்புக் கொள்வது என்பதில் ஒவ்வொருவரும் கவனம் செலுத்தட்டும்'' என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியுள்ளார்கள். (நூல்: அபூதாவூத், திர்மிதி)

"உனது நண்பன் யாரென நீ கூறினால், நீ யார் என நான் கூறுவேன்'' என்பது சீனப் பழமொழியாகும்.

அல்குர்ஆனில் அல்முஃமினூன், அல்முனாபிகூன், அல்காபிரூன் எனப் பெயரிடப்பட்டு மூன்று அத்தியாயங்கள் இறக்கி வைக்கப்பட்டுள்ளன. நல்லவர்களுடன் சேர்ந்திருப்பதையும் தீயவர்களை விட்டும் தூரமாகியிருப்பதையும் போதிக்கும் அத்தியாயங்களாக இவை அமைந்திருக்கின்றன.

நல்ல நண்பர்களின் பண்புகள் பற்றிய தெளிவை அல்குர்ஆனில் பின்வரும் வசனங்களில் கண்டு கொள்ள முடியும். அவையாவன:

01. உளத்தூய்மையுடன் அல்லாஹ்வின் நினைவில் நிலைத்திருப்பதோடு அதற்காக ஒருவருக்கொருவர் உதவி செய்தல்.

"தமது இறைவனின் திருமுகத்தை நாடி காலையிலும் மாலையிலும் தமது இறைவனைப் பிரார்த்திக்கும் மக்களுடன் உம்மைக் கட்டுப்படுத்திக் கொள்வீராக! இவ்வுலக வாழ்க்கையின் கவர்ச்சியை நாடி அவர்களை விட்டும் உமது கண்களைத் திருப்பி விடாதீர்! நம்மை நினைப்பதை விட்டும் எவனது சிந்தனையை நாம் மறக்கடிக்கச் செய்து விட்டோமோ, அவனுக்குக் கட்டுப்படாதீர்! அவன் தனது மனோ இச்சையைப் பின்பற்றுகிறான். அவனது காரியம் வரம்பு மீறுவதாக உள்ளது." (18: 28)

இவ்வசனத்திற்கு விளக்கமளிக்கும் இமாம் இப்னு கஸீர் (ரஹிமஹுல்லாஹ்) "அல்லாஹு தஆலாவைக் காலையிலும் மாலையிலும் நினைவுகூர்ந்து அவனை சதாவும் புகழ்ந்து, துதி செய்பவர்களுடன் நீர் அமர்வீராக! அவர்கள் ஏழைகளாக,



**அல்குர்ஆனில் அல்முஃமினூன், அல்முனாபிகூன், அல்காபிரூன் எனப் பெயரிடப்பட்டு மூன்று அத்தியாயங்கள் இறக்கி வைக்கப்பட்டுள்ளன. நல்லவர்களுடன் சேர்ந்திருப்ப தையும் தீயவர்களை விட்டும் தூரமாகியிருப்பதையும் போதிக்கும் அத்தியாயங்களாக இவை அமைந்திருக்கின்றன.**

செல்வந்தர்களாக, பலமுள்ளவர்களாக, பலவீனமானவர்களாக இருப்பினும் சரியே'' எனக் குறிப்பிடுகின்றார்.

*02. அச்சம், நெருக்கடிகளின்போதும் மார்க்கத்தில் உறுதியாக இருத்தல்.*

இதற்கு உதாரணமாக ஹிஜ்ரத்தின் போது 'தவ்ர்' குகையில் மறைந்திருந்த சந்தர்ப்பத்தில் அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) ''எதிரிகள் எம்மைக் கண்டு கொள்வார்கள்'' என தனது அச்சத்தை வெளிப்படுத்தியபோது நபி (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தனது நண்பனை உறுதிப்படுத்திய வார்த்தைகள் புனித அல்குர்ஆனில் பின்வருமாறு பதிவாகியுள்ளது:

**''அவ்விருவரும் அக்குகையில் இருந்த போதும், 'நீர் கவலைப்படா தீர்! அல்லாஹ் நம்முடன் இருக்கி றான்' என்று அவர் தமது தோழரிடம் கூறியபோதும் அவருக்கு அல்லாஹ் உதவியிருக்கிறான். தனது அமை தியை அவர் மீது இறக்கினான். நீங் கள் பார்க்காத படைகளின் மூலம் அவரைப் பலப்படுத்தினான். (தன் னை) மறுப்போரின் கொள்கையைத் தாழ்ந்ததாக அவன் ஆக்கினான். அல்லாஹ்வின் கொள்கையே உயர்ந்தது. அல்லாஹ் மிகைத்த வன்; ஞானமிக்கவன்.'' (9: 40)**

*03. தோழனிடமிருந்து அறிவைக் கற்றுக் கொள்வது, அதில் பணிவை கடைப்பிடிப்பது*

இதற்கு சான்றாக மூஸா (அலைஹிஸ் ஸலாம்), ஹிழ்ர் (அலைஹிஸ்ஸலாம்) ஆகிய இருவருடைய சம்பவத்தை எடுத் துக் கொள்ள முடியும். **''உமக்குக் கற்றுத் தரப்பட்டவற்றில் நல்லதை நீர் எனக்குக் கற்றுத் தருவதற்காக நான் உம்மைப் பின்தொடரலாமா?' என்று அவரிடம் மூஸா கேட்டார். 'என்னிடம் பொறுமையாக இருக்க உமக்கு இயலாது. உமக்குத் தெரியாத விஷயத்தில் உம்மால் எவ்வாறு பொறுமையாக இருக்க இயலும்?' என்று (அந்த அடியார்) கூறினார். 'அல்லாஹ் நாடினால் என்னைப் பொறுமையாளனாகக் காண்பீர்! உமது எந்தக் கட்டளைக்கும் மாறு செய்ய மாட்டேன்' என்று (மூஸா) கூறினார்.'' (18: 66-69)**

*04. ஒருவருக்கொருவர் அன்பும் கருணையும் பாராட்டுதல்*

**''முஹம்மது அல்லாஹ்வின் தூதராவார். அவருடன் இருப்போர் (ஏக இறைவனை) மறுப்போர் மீது கடுமையாகவும், தமக்கிடையே இரக்கம் மிகுந்தும் இருக்கின்றனர்.'' (48: 29)**

*05. பொறாமை கொள்ளாதிருத்தல்*

அன்ஸாரிகள் முஹாஜிர்கள் மீது கொண்டிருந்த தோழமையை அல்லா ஹுத் தஆலா பின்வருமாறு போற்றிப் புகழ்கின்றான்:

**''அவர்களுக்கு முன்பே நம்பிக் கையையும் இவ்வூரையும் தமதாக்கிக் கொண்டோருக்கும் (உரியது). ஹிஜ்ரத் செய்து தம்மிடம் வருவோரை அவர் கள் நேசிக்கின்றனர். அவர்களுக்குக் கொடுக்கப்படுவது குறித்து தமது உள்ளங்களில் காழ்ப்புணர்வு கொள்ள மாட்டார்கள். தமக்கு வறுமை இருந்த போதும் தம்மை விட (அவர்களுக்கு) முன்னுரிமை அளிக்கின்றனர். தன்னிடமுள்ள கஞ்சத்தனத்திலிருந்து காக்கப்படு வோரே வெற்றி பெற்றோர்.'' (59:9)**

*06. பிரார்த்தனைகளின்போது மறவாது தோழர்களைச் சேர்த்துக் கொள்ளல்*

இதற்கு மூஸா (அலைஹிஸ்ஸலாம்) தனது சகோதரன் ஹாரூனுக்காக செய்த பிரார்த்தனைகளை உதாரணமாகக் கொள்ள முடியும். **''என் இறைவா! என்னையும் என் சகோதரரையும் மன்னிப்பாயாக! எங்களை உனது அருளில் நுழைப்பாயாக! நீ கருணை யாளர்களில் மிகவும் கருணையாளன்' என்று (மூஸா) கூறினார்.'' (7: 151)**

இவ்வாறு நல்ல நண்பர்களின் பண்புகள் தெளிவுபடுத்தப்பட்டுள் ளது போன்று தீய நண்பர்களின் பண் புகளும் அல்குர்ஆனில் தெளிவுபடுத் தப்பட்டுள்ளன. அவையாவன:

*01. அல்லாஹுத் தஆலாவை நினைவுகூர்வதில் பொடுபோக்கு, பிறரை இது விடயத்தில் வழி தவறச் செய்தல்.* இதனால் மறுமையில் ஏற்படும் விளைவை அல்லாஹுத் தஆலா பின்வருமாறு விளக்குகின்றான்:

**''அநீதி இழைத்தவன் (கவலைப் பட்டு) தனது கைகளைக் கடிக்கும் நாளில் 'இத்தூதருடன் நான் ஒரு தொடர்பை ஏற்படுத்தியிருக்கலாமே'' என்று கூறுவான். இன்னாரை நான் உற்ற நண்பனாக ஆக்காமல் இருந்தி ருக்கக் கூடாதா? அறிவுரை எனக்குக் கிடைத்த பின்பும் அதை விட்டு என்னை அவன் கெடுத்து விட்டான்.**

ஷைத்தான் மனிதனுக்குத் துரோகம் செய்பவனாகவே இருக்கிறான்' (என்றும் கூறுவான்.)'' (25: 27-29)

02. உலகப்பற்றினால் மறுமை வாழ்வைப் பொருட்படுத்தாமை

இரண்டு மனிதர்களை அவர்களுக்கு உதாரணமாகக் கூறுவீராக! அவர்களில் ஒருவருக்கு இரண்டு திராட்சைத் தோட்டங்களை ஏற்படுத்தினோம். பேரீச்ச மரங்களைக் கொண்டு அவ்விரண்டையும் சூழச் செய்தோம். அவ்விரண்டுக்கும் இடையே பயிர்களையும் ஏற்படுத்தினோம். அவ்விரு தோட்டங்களும் தனது பலன்களைச் சிறிதும் குறையின்றி அளித்து வந்தது. அவ்விரண்டுக்கும் இடையே ஆற்றை ஓடச் செய்தோம். மற்ற கனிகளும் இருந்தன. அவன் தனது தோழரிடம் உரையாடும் போது 'நான் உன்னை விட அதிகச் செல்வம் படைத்தவன். ஆள் பலம் மிக்கவன்' என்று கூறினான்.'' (18: 32-34)

03. உலக வாழ்வை அலங்கரித்து மறுமை வாழ்வை மறக்கச் செய்தல்

''மேலும் நாம் அவர்களுக்கு (ஷைத்தான்களிலிருந்து) தோழர்களை இணைத்து விட்டோம். இவர்களுக்கு முன்னேயும் பின்னேயும் உள்ளதை அவர்கள் அழகாக்கிக் காட்டுகின்றனர். எனவே, இவர்களுக்கு முன் சென்று விட்ட ஜின்களிலும் மனிதர்களிலும் உள்ள (தீய) கூட்டங்களுடன் சேர்த்து இவர்களுக்கு எதிராகவும் கட்டளை (வேதனையின் வாக்கு) உறுதியாகி விட்டது. இவர்கள் நஷ்டமடைந்தவர்களாக ஆகி விட்டனர்.'' (41:25)

04. பாவச் செயல்களை அலங்கரித்து அதன்பால் தூண்டி விடல்

''அவர்கள் (ஷைத்தான்கள்), தமது சகோதரர்களை வழிகேட்டில் இழுத்துச் செல்வார்கள். பின்னர் (அதில்) எந்தக் குறையும் வைக்க மாட்டார்கள்.'' (7: 202)

05. நன்மை செய்வதற்குத் தடையாக இருத்தல்

''உங்களில் தடை செய்வோரையும் 'எங்களிடம் வந்து விடுங்கள்!' என்று தமது சகோதரர்களுக்குக் கூறியோரையும் அல்லாஹ் அறிவான். அவர்கள் குறைவாகவே தவிர போர்க்களத்திற்கு வர மாட்டார்கள்.'' (3: 18)

06. அல்லாஹுத் தஆலாவின் விடயத்தில் அலட்சியப் போக்கைக் கடைப்பிடித்தல்

''உங்கள் செவியும் பார்வைகளும் உங்கள் தோல்களும் உங்களுக்கு எதிராக சாட்சியம் அளிக்காமலிருக்க (அவற்றுக்குத் தெரியாமல்) நீங்கள் மறைத்ததில்லை. நீங்கள் செய்தவற்றில் அதிகமானவற்றை அல்லாஹ் அறிய மாட்டான் என்று நினைத்தீர்கள்.'' (41: 22)

இவ்வசனம் இறக்கி வைக்கப்பட்ட சந்தர்ப்பம் பற்றிய தெளிவை இமாம் புகாரி பின்வருமாறு பதிவு செய்துள்ளார். அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத்(ரழியல்லாஹு அன்ஹு) அறிவித்தார்.

இறையில்லம் (கஃபாவிற்கு) அருகில் 'குறைஷியரில் இருவரும் ஸகீஃபியரில் ஒருவரும்' அல்லது 'ஸகீஃபியரில் இருவரும் குறைஷியரில் ஒருவரும்' (ஆக மூவர் ஓரிடத்தில்) ஒன்று கூடினர். அவர்களின் வயிறுகளில் கொழுப்பு நிறைய இருந்தது. இதயங்களில் சிந்தனை குறைவாக இருந்தது. அவர்களில் ஒருவர், 'நாம் பேசுவதை அல்லாஹ் கேட்கிறான் என்று நீங்கள் கருதுகிறீர்களா?'' என்று கேட்டார். மற்றொருவர், 'நாம் சப்தமாகப் பேசினால் அவன் கேட்கிறான். நாம் இரகசியமாகப் பேசினால் அவன் கேட்பதில்லை' என்று பதிலளித்தார். (அவர்களில்) இன்னும் ஒருவர், 'நாம் சப்தமிட்டுப் பேசும்போது அவன் கேட்பானெனில், நாம் இரகசியமாகப் பேசும்போதும் அவன் கேட்கத்தான் செய்வான்' என்று கூறினார். அப்போது அல்லாஹ், '(உலகில் நீங்கள் குற்றங்கள் புரிந்தபோது) உங்கள் காதுகளும் கண்களும் தோல்களும் உங்களுக்கெதிராகச் சாட்சியமளிக்கும் என்பதை அஞ்சிக் கூட (குற்றங்களிலிருந்து) தவிர்ந்து கொள்பவர்களாக நீங்கள் இருக்கவில்லை' எனும் வசனங்களை (41: 22-24) அருளினான்.

07. அசத்தியத்தில் உறுதியாக இருத்தல்

''(இவரை விட்டும்) சென்று விடுங்கள்! உங்கள் கடவுள்கள் விஷயத்தில் உறுதியாக இருங்கள்! இது ஏதோ எதிர்பார்ப்பில் கூறப்படும் விஷயமாக உள்ளது, என்று அவர்களில் பிரமுகர்கள் கூறினர்.'' (38: 6)

இவை நட்பு பற்றி அல்குர்ஆன் முன்வைத்துள்ள கருத்துக்களில் ஒரு சிறு பகுதியாகும். நட்பு தனி மனிதனில் செலுத்தும் தாக்கத்தை விட ஒரு சமூகத்தில் செலுத்தும் தாக்கம் பாரதூரமானது என்பதனால் சமூகத்தில் அனைத்து அங்கத்தவர்களும் இந்த விடயம் குறித்துக் கூடிய கவனம் செலுத்துவது அவசியமாகும். ■

**''ஒரு மனிதன் தனது நண்பனின் மார்க்கத்தில் (கொள்கையில்) தான் இருப்பான். எனவே, எவருடன் நட்புக் கொள்வது என்பதில் ஒவ்வொருவரும் கவனம் செலுத்தட்டும்''**

மஃகில் இப்னு யஸார் (ரழியல்லாஹுஅன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைதூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சொல்ல நான் செவிமடுத்தேன்: "அல்லாஹ் ஓர் அடியானுக்கு குடிமக்களை பரிபாலனம் செய்கின்ற பொறுப்பை வழங்கியதன் பின்னர் அவர்களுக்கு மோசடி செய்த நிலையில் அவர் ஒரு நாள் மரணித்து விட்டால் அவருக்கு அல்லாஹ் சுவனத்தை ஹராமாக்கி விடுவான்."

(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹு முஸ்லிம்)

அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி)
விரிவுரையாளர், இஸ்லாஹிய்யா மகளிர் அரபுக் கல்லூரி, புத்தளம்

# மோசடிக்கார அதிகாரிகள் தங்குமிடம் நரகமே!

"நான் ஓர் அரச உத்தியோகத்தர் எனக்கு அரசாங்கம் வேதனம் தருகின்றது. நான் கடமையை நிறைவேற்றுகின்றேன்" என்ற கடமை உணர்வை விட "நான் ஒரு முஸ்லிம். எனது பதவியும் பட்டமும் அமானிதமாகும். இது குறித்து இறை நீதி மன்றில் எனக்கு எதிராக குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்டால் எனது நிலை என்ன?" என்ற மனோநிலையே மேலோங்கி இருக்க வேண்டும்.



இந்த ஹதீஸ் மோசடிக்கார நிர்வாகிகள் குறித்து எச்சரிக்கின்றது. ஓர் அடியானின் சுவன வாழ்வை தீர்மானிப்பதில் அவனது நிர்வாகப் பொறுப்புக்கும் அதிகாரத்திற்கும் தனியானதோர் இடம் இருக்கின்றது என்பதையும் மேற்படி ஹதீஸ் தெரிவிக்கின்றது.

இப்பிரபஞ்சத்தைப் படைத்து நிர்வகிக்கும் அல்லாஹ் அளவற்ற அருளாளன்; நிகரற்ற அன்பாளன். அவனது நிர்வாகம் அளவிலா அருளையும் நிகரில்லா அன்பையும் அடித்தளமாகக் கொண்டுள்ளது. "அவன் தன் மீது அருளை விதியாக்கிக் கொண்டான்." (ஸூரா அல்அன்ஆம்: 12)

அல்லாஹ் இவ்வுலகில் மனிதர்கள் அமைதியாக வாழ்வதையே பெரிதும் விரும்புகின்றான். தனது ஆட்சியதிகாரத்தில் ஒரு பகுதியை மனிதர்களில் சிலருக்கு வழங்கி முழு மனித சமுதாயமும் சாந்தி சமாதானத்துடன் வாழ்வதற்கான சட்டதிட்டங்களையும் வகுத்தளித்துள்ளான். பொதுமக்களைப் பரிபாலனம் செய்வதற்காக அவர்களால் தெரிவு செய்யப்படுகின்றவர்கள் இறை பிரதிநிதிகளாவர். பட்டம் பதவிகளையும் ஆட்சியதிகாரங்களையும் அல்லாஹ்வே வழங்குகின்றான். "அரசர்களுக்கெல்லாம் மாபெரும் அரசனாகிய அல்லாஹ்வே! நாடியவர்களுக்கு அரசாட்சியை வழங்குகின்றாய். நீ நாடியவர்களிடமிருந்து அதனைப் பறித்துக் கொள்கின்றாய்..." (ஸூரா ஆலு இம்ரான்: 26)

இவ்வுலகில் மனிதர்களுக்கு நலன்கள் விளைவதையே அல்லாஹ் விரும்புகிறான்; அவர்களுக்கு தீங்குகள் வந்து சேருவதை அவன் வெறுக்கின்றான். இவ்வகையில் இறை பிரதிநிதிகளாகிய பொறுப்புதாரிகள் தமது பரிபாலிப்பின் கீழ் உள்ளவர்களின் நலன்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டும். அவர்களுக்கு அநியாயமிழைத்து அராஜகம் புரிவதை முழுமையாக தவிர்ந்து கொள்ள வேண்டும். தமது பட்டம், பதவி மற்றும் ஆட்சியதிகாரத்தின் ஊடாக சுவனம் நோக்கிப் பயணிப்பதற்கான பாதையை தெரிவு செய்து கொள்ள வேண்டும்.

அல்லாஹ் ஓர் அடியானுக்கு வழங்குகின்ற பொறுப்புக்கள் அமானிதமாகும். அவை தன்னை வளப்படுத்திக் கொண்டு வாழ்வதற்கான முதலீடுகள் அல்ல. பொதுமக்களின் நலன்களுக்காக அவை பிரயோகிக்கப்படல் வேண்டும். இது தொடர்பில் நீதி விசாரணை மறு உலகில் நடைபெற இருக்கின்றது. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: "நீங்கள் ஒவ்வொருவரும் நிர்வாகிகள். உங்களது நிர்வாகப் பொறுப்பு பற்றி விசாரிக்கப்படுவீர்கள். சமூகத் தலைவர் நிர்வாகியாவார்; அவரது குடிமக்கள் பற்றி விசாரிக்கப்படுவார். குடும்பத் தலைவி தனது கணவனின்

குடும்ப விவகாரத்தில் நிர்வாகியாவார்; அவளது நிர்வாகப் பொறுப்புப் பற்றி விசாரிக்கப்படுவாள். பணியாளர் தனது எஜமானின் சொத்து செல்வம் தொடர்பில் பொறுப்புதாரியாவார்; அது குறித்து அவரிடம் விசாரிக்கப்படுவார். நீங்கள் ஒவ்வொரு வரும் நிர்வாகிகள். உங்கள் நிர்வாகப் பொறுப்பு குறித்து விசாரிக்கப்படும்.'' (ஸஹீஹுல் புகாரி, முஸ்லிம்)

குடிமக்களை பரிபாலனம் செய்கின்ற நிர்வாகப் பொறுப்பு என்பது சிறிய மட்டத்தில் இருந்து ஆரம்பமாகி ஆட்சியதிகாரம் வரை விசாலித்துச் செல்கிறது. பொதுமக்கள் தங்களது அன்றாட வாழ்க்கை விவகாரம் முதற் கொண்டு சிவில் நிர்வாக அலுவல்கள் உள்ளிட்ட அனைத்து விவகாரங்களிலும் அதிகாரிகளின் தயவை வேண்டி நிற்கின்றனர். இதன்போது அதிகாரப் பொறுப்பில் உள்ள முஸ்லிம் அவர்களுக்காக சிரத்தை எடுத்துக் கொள்வதும் நல் ஆலோசனை வழங்குவதும் மார்க்கக் கடமையாகும். மேலும் அது அவரது சுவன வாழ்வைத் தீர்மானிக்கின்ற நற்செயலுமாகும். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: ''முஸ்லிம்களின் விவகாரங்களைப் பொறுப்பேற்றுக் கொள்கின்ற தலைவர் ஒருவர் அவர்களுக்காக சிரத்தை எடுத்துக் கொள்வதுமில்லை; மேலும் அவர்களுக்கு நல்லுபதேசம் புரிவதுமில்லையென்றால் அவர் அவர்களுடன் சேர்ந்து சுவனம் செல்ல மாட்டார்.'' (ஸஹீஹு முஸ்லிம்)

ஒரு பொதுமகனைப் பொறுத்தவரை அவன் அதிகாரப் பலத்தின் ஊடாகவே தனது காரியத்தைச் சாதிக்க வேண்டியுள்ளது. இந்தப் பலம் இன்றி அவனால் எதனையும் செய்துவிட முடியாது. பிள்ளையின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், திருமண அத்தாட்சிப் பத்திரம், மரண அத்தாட்சிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை, கடவுச் சீட்டு, காணி உறுதிப் பத்திரம் முதலானவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு அவன் சிவில் நிர்வாக அதிகாரிகளை சார்ந்து நிற்க வேண்டியுள்ளது. ஒருவர் தனது பிள்ளையைப் பாடசாலையில் சேர்ப்பதாக இருந்தால் கூட நாட்டுச் சட்டத்தை கட்டாயம் அனுசரிக்க வேண்டியுள்ளது. இதிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு ஒருவர் வாழ முடியாது.

அவ்வாறே இந்நாட்டின் பிரஜை வாக்காளராகவும் இருப்பார். வாக்காளர் இடாப்பில் தனது பெயரைப் பதிவு செய்து குறிப்பிட்ட சில வருடங்களுக்கு ஒரு முறை அதனை சரி பார்ப்பது தொடர்பில் தேர்தல் திணைக்களத்துடன் அவர் உறவைப் பேண வேண்டி வரும். பிள்ளையின் பரீட்சை பெறுபேறு தொடர்பில் பரீட்சைத் திணைக்களத்தின் சட்ட திட்டங்களுக்கு அவர் கட்டுப்பட வேண்டியுள்ளது. இவ்வாறு பல்வேறு திணைக்களங்களுடன் ஒருவர் தொடர்பைப் பேண வேண்டி வரும். இத்தகைய அரச திணைக்களங்கள் பற்றிய தெளிவான அறிவும் இவற்றின் மூலம் காரியம் சாதிக்கின்ற நிர்வாகத் துறை அறிவும் ஒரு பொது மகனிடம் இருக்காது. இவ்வாறான நிலைமையில் மேற்படி திணைக்களங்களில் இருக்கும் முஸ்லிமான கடமை நேர அதிகாரிகள் அவருக்கான வழிகாட்டலை வழங்கி அவரது தேவையை நிறைவேற்றுவதும் அவருக்காக கால நேரத்தைச் செலவழிப்பதும் உத்தியோகம் சார்ந்த கடமை என எண்ணுவதை விட 'என்னை சுவனம் நோக்கி அழைத்துச் செல்கின்ற நற்பணி' எனக் கருதுவதே சாலப் பொருத்தமாகும்.

ஒவ்வொரு பிரஜையும் தான் வாழ்கின்ற தேசத்தில் கொடிய நோய்த் தாக்கத்திலிருந்து விடுபட்டு ஆரோக்கியமாக வாழ்வதற்கு உரிமை பெற்றவன். இவ்வகையில் தான் வாழ்கின்ற சுற்றுப் புறச் சூழலை சுத்தமாக வைத்திருப்பதற்கு கடமைப்பட்டுள்ளான். இக்கடமையை கச்சிதமாக நிறைவேற்றுவதற்கு உள்ளூராட்சி மன்ற நிர்வாக அதிகாரிகளின் உயர்ந்த சேவை அவனுக்குத் தேவை. அவர்களின் நிர்வாக எல்லைக்குள் ஒரு பொது மகன் சுயாதீனமாகத் தொழிற்பட முடியாது. உதாரணமாக குன்றும் குழியுமாக செப்பனிடப்படாமல் காணப்படுகின்ற பாதைகளில் மழைநீருடன் சாக்கடை கழிவும் நீரும் கலந்து தேங்கி நிற்கின்றது. இப்பிரச்சினையை மேற்படி உள்ளூராட்சி மன்றத்தின் தலையீடு இன்றி தீர்க்க முடியாது. அப்படியானால் முஸ்லிம் நகரபிதாவும் நகராட்சி மன்ற முஸ்லிம் உறுப்பினர்களும் தமது நிர்வாகப் பொறுப்புக்களை சுவனத்திற்கான முதலீடாகக் கருதி செயற்பட வேண்டும்.

நாம் மேலே விளக்கிய சிவில் நிர்வாகத்துறை பொறுப்புக்களை ஏற்றிருக்கும் முஸ்லிம் அதிகாரிகள் தங்களது கடமைகளை நிறைவேற்றுகின்றபோது தோன்றும் மனோநிலை குறித்த சிந்தனை இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. ''நான் ஓர் அரச உத்தியோகத்தர். எனக்கு அரசாங்கம் வேதனம் தருகின்றது. நான் கடமையை நிறைவேற்றுகின்றேன்'' என்ற கடமை உணர்வை விட ''நான் ஒரு முஸ்லிம். எனது பதவியும் பட்டமும் அமானிதமாகும். இது குறித்து இறை நீதி மன்றில் எனக்கு எதிராக குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்டால் எனது நிலை என்ன?'' என்ற மனோநிலையே மேலோங்கி இருக்க வேண்டும்.

மக்களால் தெரிவு செய்யப்படுகின்ற முஸ்லிம் மாகாண சபை உறுப்பினர்கள், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் உள்ளிட்ட அனைவரும் சமூகத்தின் பிரதிநிதிகளாக அல்லது கூலித் தொழிலாளிகளாக கருதப்படுகின்றனர். எனவே, அவர்கள் மக்கள் நலன் காக்க பாடுபட்டு உழைக்க வேண்டும். அதனை விடுத்து தமது பதவிக் காலத்தை தொடர்ந்து ஸ்திரப்படுத்தவும் அடுத்து வருகின்ற தேர்தல் பருவ காலத்தில் வாக்கு வங்கியை நிரப்பிக் கொள்வதற்காகவும் தங்களது பதவி நிலைகளைப் பயன்படுத்தினால் சுவன வாழ்வு என்பது கைக்கு எட்டாத கனியாகவே அமைந்து விடும்.

மக்களால் தெரிவு செய்யப்படுகின்ற பிரதிநிதி என்பவர் பணிவுள்ள இறைவனின் அடிமையாவார். அவர் எக்காலத்

"இஸ்லாத்தில் ஆட்சியாளர் என்பவர் சமூகத்தின் பொறுப்பாளராவார். அது மட்டுமன்றி, அவர் சமூகத்திடம் கூலிக்கு வேலை செய்யும் தொழிலாளி ஆவார். பொறுப்பாளி பொறுப்புச் சாட்டியவரது கடமையையும் கூலித் தொழிலாளி கூலிக்கமர்த்தியவரது கடமையையும் செய்வது போல் சமூகத்தின் பணியை ஆட்சியாளர்கள் செய்தாக வேண்டும்."

திலும் அடிமைத்துவப் பணியிலிருந்து சிறிதும் விலகி இருக்க முடியாது. அவ்வாறு விலகுகின்றபோது அவரிடம் எதேச்சதிகாரமும் கொடுங்கோன்மையும் வளர்ந்தோங்குகின்றன; அவர் மக்கள் சேவையை விட்டும் தூர விலகிச் செல்கின்றார்; அவர் மக்களை பொருட்டாக நினைப்பதில்லை; மக்களை பகடைக் காயாகப் பயன்படுத்துகின்றார். மேலும் இத்தகைய மனிதர்கள் முஸ்லிம்களின் சமகால தேசிய பிரச்சினைகளை எல்லாம் கிடப்பில் போட்டு தமது உள்வீட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலேயே காலம் கடத்துகின்றனர். கட்சி அரசியலுக்குள் இருக்கும் பதவி தாங்குனர் பிரச்சினையை விவாதப் பொருளாக மாற்றிக் கொண்டு இருக்கைகளை சூடாக்கிக் கொண்டு வாழ்கின்றனர். இவர்களை நம்பி வாக்களித்த வாக்காளர் பெருமக்கள் இலவு காத்த கிளியைப் போல மாறி விடுகின்றனர்.

கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி அவர்கள் ''இஸ்லாத்தில் அரசியல்'' என்ற நூலில் இஸ்லாமிய ஆட்சியாளர் குறித்து பின்வரும் கருத்தைப் பதிவு செய்துள்ளார்:

''இஸ்லாத்தில் ஆட்சியாளர் என்பவர் சமூகத்தின் பொறுப்பாளராவார். அது மட்டுமன்றி, அவர் சமூகத்திடம் கூலிக்கு வேலை செய்யும் தொழிலாளி ஆவார். பொறுப்பாளி பொறுப்புச் சாட்டியவரது கடமையையும் கூலித் தொழிலாளி கூலிக்கமர்த்தியவரது கடமையையும் செய்வது போல் சமூகத்தின் பணியை ஆட்சியாளர்கள் செய்தாக வேண்டும்.''

தாபிஈன்களில் ஒருவரான சட்ட மேதை அபூ முஸ்லிம் அல்ஹுலானி அவர்கள் கலீபா முஆவியா பின் அபூ சுப்யானைப் பார்த்து,''கூலித் தொழிலாளரே! அஸ்ஸலாமு அலைக்கும்'' என்று சொன்னபோது கலீபாவைச் சூழவிருந்தோர் ''தலைவரே! என்று விளித்து ஸலாம் சொல்லுங்கள்'' என்று கூறினார். ஆனால், அபூ முஸ்லிமோ கலீபாவை கூலித்தொழிலாளர் என்றே திரும்ப திரும்ப அழைத்தார். ஈற்றிலே முஆவியா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் ''எல்லோரும் அமைதியாக இருங்கள். அபூ முஸ்லிமை விட்டு விடுங்கள். அவர் கூறுவதின் பொருள் பற்றி அவரே நன்கறிவார்'' என்று சொன்னார்.

அக்கால விழுமியம் சார் இஸ்லாமிய அரசியல் மக்கள் சேவகர்களைத் தோற்றுவித்திருந்தது. இன்றைய அரசியல் தொழில்மையச் சந்தையையும் வர்த்தகப் பிரமுகர்களையும் உற்பத்தி செய்திருக்கிறது. ஒரு முஸ்லிம் அரசியல்வாதி அல்லது அதிகாரி தனது பதவி நிலைக்கு அப்பால் தான் ஒரு மக்கள் சேவகன் என்ற நிலைப்பாட்டுக்கு வரும் வரை மக்கள் பிரச்சினைகள் தீரப் போவதில்லை. மாறாக, மக்கள் கஷ்டங்களை அனுபவிப்பார்கள். சிலபோது கொடுங்கோன்மைக் கரம் கொண்டு அவர்கள் ஒடுக்கப்படுவார்கள். இந்நிலையை கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி அவர்கள் இஸ்லாமிய அரசியல் என்ற நூலில் ''முத்தரப்புக் கூட்டு'' என்ற உபதலைப்பில் விளக்குகிறார்கள்:

01. அல்லாஹ்வின் பூமியில் அவனது அடியார்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் தெய்வீக உரிமைகளை கொண்டாடும் எதேச்சதிகாரம் கொண்ட ஆட்சியாளர்கள். இவர்களுக்கு உதாரணமாக பிர்அவ்னைக் குறிப்பிடலாம்.

02. வரம்பு மீறிய ஆட்சியாளர்களின் அரசாங்கத்தை உறுதிப்படுத்துவதற்காகவும் மக்களை அவர்களுக்குக் கட்டுப்படச் செய்வதற்காகவும் தனது அனுபவத்தையும் ஆற்றலையும் பயன்படுத்தும் அரசியல்வாதி. இதற்கு உதாரணமாக ஹாமானைக் குறிப்பிடலாம்.

03. வரம்பு மீறிய ஆட்சியாளன், அரசியலிலிருந்து பயன் பெறும் முதலாளித்துவவாதி அல்லது நிலச்சுவாந்தர். இவர் மக்களின் பணத்தை அதிகமாகப் பெற்றுக் கொள்வதற்காக தனது செல்வத்தின் ஒரு பகுதியை செலவு செய்து அநியாயக்கார ஆட்சியைப் பலப்படுத்துவார். இதற்கு உதாரணமாக காரூனைக் குறிப்பிடலாம். காரூன், மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் சமூகத்தைச் சார்ந்தவன். ஆனால், பிர்அவ்னைப் பலப்படுத்தினான்.

நாம் மேலே குறிப்பிட்ட படுமோசமான முத்தரப்புக் கூட்டில் ஒரு முஸ்லிம் அரசியல்வாதி அல்லது அதிகாரி இடம்பெற முடியாது; இடம்பெறக் கூடாது. இடம்பெற்றால் அவர் செல்லும் இடம் நரகமே! ''அதிகாரம் என்பது பூமியிலுள்ள அல்லாஹ்வின் நிழல்'' என்று கூறுவர். இவ்வதிகாரத்தைப் பெற்றவர்களின் சீர்திருத்தமே மக்களின் சீர்திருத்தமாக அமையும். எனவேதான், இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹிமஹுல்லாஹ்) மற்றும் புழைல் இப்னு இயாழ் (ரஹிமஹுல்லாஹ்) ஆகிய இருவரும் இவ்வாறு கூறினார்: ''பதிலளிக்கப்படும் துஆ கேட்கும் சந்தர்ப்பம் கிடைத்தால் அதனைக் கொண்டு அல்லாஹ்விடத்தில் அரசரை சீர்திருத்தும்படியே இறைஞ்சுவோம்.''

அக்கால முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் அதிகாரிகளுக்கும் இஸ்லாமிய அரசியல் விழுமியம் குறித்து உணர்த்தப்பட்டால், உடனே அதற்கு அவர்கள் தலைவணங்கி தம்மை நெறிப்படுத்திக் கொண்டனர். அபூ மர்யம் அல்அஸ்தி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் முஆவியா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களைப் பார்த்து நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூற நான் செவிமடுத்தேன்: "அல்லாஹ் முஸ்லிம்களின் ஒரு விவகாரத்திற்கு பொறுப்பாக ஒருவரை நியமித்து அவர் அவர்களது வறுமையை நீக்கி அவர்களது தேவைகளையும் நிறைவேற்றினால், அல்லாஹ் அவரது வறுமை நிலையை நீக்கி அவரது தேவைகளையும் நிறைவேற்றுகின்றான்'' எனக் கூறினார். உடனே முஆவியா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் "மனிதர்களின் தேவைகளை நிறைவேற்ற ஓர் உத்தியோகத்தரை நியமித்தார்கள்.''

(அபூதாவூத், திர்மிதி)

முஸ்லிம்களின் விவகாரங்களைப் பொறுப்பேற்றுக் கொள்கின்ற அரச அதிகாரிகள் இருவகையாக அமைவர் எனக் குறிப்பிட்ட நபிகளார் அவர்களுக்காக கீழ்வருமாறு பிரார்த்தித்தார்கள்:''யா அல்லாஹ்! எனது சமூகத்தின் விவகாரங்களில் ஒன்றைப் பொறுப்பேற்ற ஒருவர் அவர்களை சிரமப்படுத்தினால் நீயும் அவரை சிரமத்திற்குள்ளாக்குவாயாக! அவர் அவர்களுடன் நளினமாக நடந்து கொண்டால் நீயும் அவருடன் மென்மையாக நடந்து கொள்வாயாக!''

(ஸஹீஹு முஸ்லிம்)

தனது அதிகாரத்தின் மூலம் மக்களை நெருக்கடிக்கு உள்ளாக்கி மோசடி செய்தவர் இறைதூதரின் சாபத்திற்கும் உள்ளாக நேரிடுகிறது.

முஸ்லிமல்லாத அரச அதிகாரிகள் அல்லது ஆட்சியாளர்கள் உலகை மையப்படுத்தியே மனிதர்களை பரிபாலனம் செய்வர். அவர்களது பார்வை கட்புலனாகும் உலகைக் கடந்து செல்வதில்லை. ஆனால், முஸ்லிம் பொறுப்புதாரி அல்லது அதிகாரி கட்புலனாகா உலகை மையப்படுத்தியே மக்களை பரிபாலனம் செய்வார். அவை மோதும் அந்நாளில் அலைக்கழிக்கப்படாத ஏழு சாரரில் முதன்மைக் குழுவில் இடம்பெறும் நோக்குடன் தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவார். அதாவது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: "நிழலே இல்லாத அந்நாளில் அல்லாஹ் தனது நிழலில் ஏழு சாராருக்கு இடமளிக்கின்றான். நீதியான ஆட்சியாளர்...'',

(ஸஹீஹுல் புகாரி, முஸ்லிம்)

இஸ்லாத்திலிருந்து அரசியலையும் மக்கள் பரிபாலனத்தையும் வேறுபடுத்தி ஆன்மிக வாழ்வு, அரசியல் வாழ்வு என வாழ்வை கூறாக்கி மனிதர்களுக்கு மோசடி செய்து வாழ்ந்தவர்களுக்கு மண்ணறை வாழ்வும் நரகமாகவே அமையும். இவர்கள் எவ்வளவுதான் இறைவனுக்குரிய உரிமைகளை நிறைவேற்றினாலும் அவை இவர்களைப் பாதுகாக்கப் போவதில்லை. இத்தகைய மோசமான அதிகாரிகள் மரணித்து விட்டால் இவர்களது ஜனாஸாக்களைப் பின்தொடர்ந்து இவர்களது குடும்பமும் செல்வம் செயற்பாடுகளும் செல்கின்றன. ஒன்று அவருடனேயே இருக்கும்; ஏனைய இரண்டும் திரும்பி வந்து விடும். அவர்களுடன் யுகம் யுகமாய் இருக்கப் போவது அவர்களது மக்கள் பரிபாலனம். அவர்களது பரிபாலனம் நீதியானதாக அமைந்திருந்தால் மண்ணறையில் அதுவே அவர்களுக்கு நிழல் அளிக்கும். அது படுமோசமான பரிபாலனமாக அமைந்திருந்தால் அதுவே மண்ணறை வேதனைக்கு எண்ணெய் வார்ப்பதாக அமைந்து விடும். (நஊதுபில்லாஹி மின்ஹா)

இஸ்லாத்திலிருந்து அரசியலையும் மக்கள் பரிபாலனத்தையும் வேறுபடுத்தி ஆன்மிக வாழ்வு, அரசியல் வாழ்வு என வாழ்வை கூறாக்கி மனிதர்களுக்கு மோசடி செய்து வாழ்ந்தவர்களுக்கு மண்ணறை வாழ்வும் நரகமாகவே அமையும். இவர்கள் எவ்வளவுதான் இறைவனுக்குரிய உரிமைகளை நிறைவேற்றினாலும் அவை இவர்களைப் பாதுகாக்கப் போவதில்லை.

எனவே, ஒரு முஸ்லிம் பரிபாலகர் அல்லது அதிகாரி தனது குடிமக்கள் பரிபாலனம் பற்றி சுயமதிப்பீடு செய்யக் கடமைப்பட்டுள்ளார். அவர் தனது வணக்க வழிபாடுகள் பற்றி மட்டும் சுய விசாரணை செய்தால் போதாது. நீதியின் உறைவிடம் உமர் இப்னுல் கத்தாப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் தினமும் தனது சாட்டையால் தன்னைத் தானே அடித்து "இன்று உமர் என்ன செய்தான்?'' என முஹாஸபா செய்வார்கள். "நீங்கள் விசாரணை செய்யப்படுவதற்கு முன்னர் உங்களையே நீங்கள் விசாரித்துக் கொள்ளுங்கள்'' எனவும் அவர்கள் கூறுவார்கள். ஓர் அரசியல்வாதி அல்லது மக்கள் பிரதிநிதி தனது அன்றாட இறுக்கமான நிகழ்ச்சி நிரல்களில் சுயவிசாரணைக்கென ஒரு நேரத்தை ஒதுக்கவில்லையெனில், அவருக்கு மரணம் சம்பவிக்கும் நாள் படுபயங்கரமான நாளாகவே அமையும். உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் தனது மோதிரத்தில் பின்வரும் ஹதீஸை பொறித்து அதனை அடிக்கடி பார்த்துக் கொள்வார்கள்: "மரணம் ஒன்றே போதுமான உபதேசி!'' உமர் (ரழியல்லாஹு அன்ஹு) என்னும் தலை சிறந்த பரிபாலகரது மனப்பாங்கு இக்கால மக்கள் பிரதிநிதிகளுக்கு முன்னுதாரணமாக அமையட்டும்.! ■




உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர், அமீர், இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி

# இலங்கையர்கள் இல்லாத இலங்கை!

## தேச அடையாளத்தை இழந்து நிற்கும் இலங்கையர்கள்!

நாம் இதுவரை (சென்ற இதழ்களில்) சிறுபான்மை சூழலொன்றில் ஒரு முஸ்லிமின் அடையாளங்கள் பற்றிக் கலந்துரையாடினோம். ஒரு முஸ்லிம் தனது மார்க்க அடையாளங்களோடு வாழ்வதற்கும் அந்த அடையாளங்கள் மூலமாக தனது சிறப்பியல்புகளை வெளிப்படுத்துவதற்கும் இஸ்லாம் மற்றும் முஸ்லிம்கள் பற்றிய தவறான அபிப்பிராயங்களை களைவதற்கும் எந்த வகையில் கருமமாற்ற வேண்டும், எவற்றை முக்கியமானதாகக் கருத வேண்டும், எவற்றை விட்டுக் கொடுக்க வேண்டும்? என்ற விளக்கங்களையும் பார்த்தோம்.

அடுத்து ஒரு பிரஜையின் தேச அடையாளம் பற்றிய விளக்கத்துக்கு வருவோம். முஸ்லிமின் தேச அடையாளம் பற்றிப் பின்னர் பேசுவோம்.

ஒரே வார்த்தையில் சொன்னால் நாம் அனைவரும் இலங்கையர்கள் என்பதே எமது தேச அடையாளமாகும். இலங்கையர்களாக இந்த நாட்டைச் சேர்ந்த அதிகமானவர்கள் வாழவில்லை என்ற வருத்தத்துடன் இந்த அடையாளம் பற்றிப் பேச வேண்டியிருக்கிறது. இலங்கையர்கள் எனும் இந்த அடையாளம் ஓர் இனத்துக்கானதல்ல; பலவகையான மக்களை தேசத்தின் அடிப்படையில் ஒன்று சேர்க்கும் ஒரு பொது அடையாளமே இதுவாகும்.

பொது அடையாளங்களை உலகம் பாதுகாக்க வேண்டும். சிறப்பு அடையாளங்களைப் பாதுகாப்பதுபோல்... இல்லையெனில், மனித சமூகம் உடைந்து சிதறிய கண்ணாடித் துண்டுகள் போன்று சின்னாபின்னமாகி விடும். உலகின் ஆதிக்க சக்திகளே மனிதர்களை ஒன்றிணைக்கும் பொது

அடையாளங்களை அழித்து மனித தர்மத்தைக் கொலை செய்திருக்கின்றன. மதங்களின் பெயர்களாலும் இனங்களின் பெயர்களாலும் தேசங்களின் பெயர்களாலும் மனித இனமும் மனித தர்மமும் பலியிடப்பட்ட வரலாறுகள் ஏராளம். ஆதிக்க சக்திகள் அவ்வப்போது தங்களின் நோக்கங்களை அடைந்து கொள்ள இன, மத, மொழிகளை துரும்புகளாகப் பயன்படுத்தியிருக்கின்றன. காரணம், இவற்றின் பெயரால் மக்களைத் தூண்டுவது எளிதான வேலையாகும்.

இத்தகைய ஆதிக்க சக்திகளின் பிடியிலிருந்து மனித தர்மத்தையும் மனித இனத்தின் பொது அடையாளங்களையும் உலகம் பாதுகாக்க வேண்டும். பாதுகாக்கப்பட வேண்டிய... அதே நேரம் அழிந்து கொண்டிருக்கின்ற அத்தகைய அடையாளங்களில் ஒன்றுதான் ஒரு மனிதரின் தேச அடையாளமாகும். அதனை இன்று படிப்படியாக உலகில் அழித்து வருகிறார்கள் மனித இனத்தின் துரோகிகள். ஒரு தேசத்தையுடையவர்கள் அனைவருக்கும் சொந்தமான இந்த அடையாளம் அழிக்கப்படுவதனால் மனிதர்கள் தேசங்களற்றவர் போன்று ஆக்கப்படுகின்றனர். அத்துடன் தேசங்களும் ஸ்திரமற்ற நிலைக்கு ஆளாக்கப்படுகின்றன. அதன் மூலம் பயனடைபவர்கள் நிச்சயம் குட்டையைக் குழப்புபவர்கள் மட்டுமே.

தேச அடையாளத்தின் இலட்சணங்கள் வருமாறு:

01. மக்கள் அனைவரும் தேசப்பற்றை வெளிப்படுத்தல்

02. தேசத்தின் வளங்களை நேசித்துப் பாதுகாத்து மேம்படுத்தல்

03. சட்டம், ஒழுங்கு என்பவற்றை மதித்து ஒழுகுதல்

04. அரசாங்கத்துக்கு ஒத்துழைத்தல்

05. பன்மைத்துவத்தின் மூலம் பயன் பெறுதல்

இவற்றைத் தனித்தனியாகவன்றி ஒன்றோடொன்று இணைந்ததாகவே நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். அத்தகையதொரு விளக்கத்தையே அடுத்து நாம் கலந்துரையாடுகிறோம்.

ஒரு தேசத்தைச் சேர்ந்தவன் அந்தத் தேசத்தின் மீது பற்றுக் கொண்டவனாகவும்... அதன் முன்னேற்றத்தில் கரிசனையுள்ளவனாகவும்... அதன் விருத்திக்குப் பங்களிப்புச் செய்பவனாகவும்... குறித்த தேசத்தின் மைந்தனாகவும் இருப்பதாயின், அவனிடம் மேற்கூறப்பட்ட பண்புகள் அனைத்தும் நிச்சயம் இருந்தாக வேண்டும்.

மேலே கூறப்பட்ட பண்புகளை வலியுறுத்தாத மதங்கள் உலகில் இருக்க மாட்டாது என்றே நான் கருதுகின்றேன். அது மட்டுமல்ல, இன்று உலகில் முன்னேறியிருக்கின்ற... அதிலும் குறிப்பாக முதலாம் உலக நாடுகள் என்று புகழ் பெற்றிருக்கின்ற அனைத்திலும் இந்தப் பண்புகள் அவற்றின் பிரஜைகளிடம் மேலோங்கியிருக்கின்றன என்பதை எவரும் மறுக்க முடியாது. இந்தப் பண்புகள் தமது பிரஜைகளிடையே மிக மோசமாக வீழ்ச்சியடைந்திருக்கின்ற தேசங்களில் ஒன்றாக இலங்கையும் காணப்படுகின்றது.

அதற்கான அடிப்படைக் காரணி நற்பிரஜைகளை உருவாக்குவதில் எந்த அரசாங்கமும் ஆழ்ந்த கரிசனை கொண்டிருக்கவில்லை என்பதே ஆகும். இதனை வேறு வார்த்தைகளில் சொன்னால் இலங்கையர்களை உருவாக்க நாடு தவறி விட்டது. மாறாக, சிங்கள அரசியல் தலைவர்கள் சிங்களவர்களையும் தமிழ் அரசியல் தலைவர்கள் தமிழர்களையும் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் முஸ்லிம்களையுமே இன ரீதியாக உருவாக்கியிருக்கிறார்கள். இறுதியில் இலங்கையர்கள் இல்லாத ஓர் இலங்கை இன்று காட்சி தந்து கொண்டிருக்கின்றது.

ஒவ்வோர் இனத் தலைவர்களும் ஏன் இதனைச் செய்கிறார்கள் என்பது வெளிப்படை. அவர்கள் தேச நலனை விட தங்களது அரசியல் நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கே விரும்புகிறார்கள். எனவே, நற்பிரஜைகளை உருவாக்கும் முயற்சியைக் கைவிட்டு கட்சிப் பிரஜைகளையும் இனப் பிரஜைகளையுமே அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.

அவர்களது இந்த அடாச் செயலுக்கு அவர்கள் நிச்சயம் நியாயங்களை கொண்டு வருவார்கள். அவர்கள் கொண்டு வரும் நியாயங்கள் ஆயிரம் இருந்தாலும் விளைந்த பயன்கள் பூச்சியமே! நாடும் பொருளாதாரமும் கலாசார சமூக கட்டமைப்புக்களும் கீழ் நோக்கியே சென்றிருக்கின்றன; மக்கள் ஸ்திரமற்ற ஒரு எதிர்காலத்தை நோக்கியே பயணித்துக் கொண்டிருக்கின்றனர்.

நற்பிரஜைகளால் கட்டமைக்கப்பட்ட ஒரு நாட்டுக்குப் பதிலாக இனப் பிரஜைகளாலும் கட்சிப் பிரஜைகளாலும் கட்டமைக்கப்பட்ட ஓர் இலங்கையையே நாம் இன்று காண்கின்றோம். இந்த நாட்டில் இன்று இலங்கையர்கள் இல்லை. காரணம் இன்றிருப்பவர்கள் தேசத்தின் பொதுக் குறிக்கோள்கள் மற்றும் நலன்களின் பக்கம் தமது கவனத்தைத் திருப்புவதாகத் தெரியவில்லை. பொதுக் குறிக்கோள்கள் பற்றிய அறிவும் அவர்களிடம் இல்லை. இவர்கள் கட்சிகளினதும் இனங்களினதும் ஊதுகுழல்களுக்குப் பின்னாலேயே செல்கிறார்கள். காரணம், இவர்கள் நீண்டகாலம் பழக்கப்பட்டிருப்பது இத்தகையதொரு மனநிலைக்கே. மக்களுக்கு இந்த மனப்பாங்கை ஊட்டி அதன் சூட்டில் குளிர் காய்கின்ற தலைவர்கள் இன்று அதிகரித்து விட்டதனால் சிறிய தலைவர்களும் அதே வழியில் பயணம் செய்யத் துவங்கி விட்டார்கள். பாராளுமன்ற உறுப்பினர் முதல் பிரதேச சபைகளினது ஊழியர்கள் வரை குளிர்

காயும் மனப்பான்மைக்கு நன்கு பழக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் அனைத்து விதமான ஊழல்களும் நாட்டில் தாண்டவமாடுகின்றன. அதிகாரத் துஷ்பிரயோகங்கள் சர்வ சாதாரணமாகி விட்டன. அரச நிறுவனங்கள் நஷ்டத்திலும் கடனிலும் ஓடுகின்றன; கடன் சுமைகள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன; பணத்தின் பெறுமதி குறைந்து செல்கின்றது.

இவற்றோடு தெரிவு செய்யப்பட்ட அரசாங்கமொன்றுடன் ஒத்துழைக்க முடியாதவர்களாக மக்கள் வளர்க்கப்படுகிறார்கள். சட்டங்களை மதிப்பவர்களாகவும் சட்டத்துக்கமைய கருமமாற்றுபவர்களாகவும் ஜனநாயக மரபுகளைப் பேணுபவர்களாகவும் மக்களைப் பயிற்றுவிக்க வேண்டிய தலைவர்கள் நாட்டின் அமைதியையும் இயல்பு நிலையையும் ஸ்தம்பிதமடையச் செய்யும் வகையில் மக்களை வெறியூட்டி வீதிக்கு இறக்குகிறார்கள். எதிர்க்கட்சி என்பது ஆக்கபூர்வமாக விமர்சித்து அரசாங்கத்தை நெறிப்படுத்தும் கட்சி என்ற நிலையிலிருந்து விலகி அனைத்தையும் வெறி கொண்டு எதிர்க்கும் கட்சியாக மாறியிருக்கிறது. நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லும் கொள்கைகள், திட்டங்கள் என்பவற்றை அறிந்த நிலையில் வாக்களிக்கும் வாய்ப்பு இந்நாட்டு மக்களுக்கு வழங்கப்படுவதில்லை; அவ்வாறான பிரஜைகளாக அவர்கள் வளர்க்கப்படுவதுமில்லை. மாறாக, எப்போதும் உணர்ச்சிகள் கொப்பளிக்கும் நிலைக்கு இட்டுச் செல்லப்பட்டவர்களாகவே வாக்களிப்பில் ஈடுபடும் நிலையை வாக்காளர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கிறார்கள் இந்நாட்டுத் தலைவர்கள். அந்த உணர்ச்சிகள் இன ரீதியான பயங்களைப் போலியாக தோற்றுவிப்பதன் மூலமோ... வெளிச் சக்திகளின் ஆக்கிரமிப்பு அச்சத்தை மிகைப்படுத்துவதன் மூலமோ அல்லது இன்னும் வேறுபட்ட வழிமுறைகள் மூலமோ தணிய விடாமல், அணைய விடாமல் பராமரிக்கப்படுகின்றன.

சுதந்திரத்தின் பின்னரான இலங்கையில் அரசாங்கங்களை மாற்றும் காரணிகளாக உணவும் இனப் பிரச்சினையும் அரசியலமைப்புத் திருத்தங்களுமே பெரும் பங்கு வகித்திருக்கின்றன. இவற்றுக்குப் பின்னால் அள்ளுண்டு செல்லும் வாக்காளர்களையே இலங்கைத் தேர்தல்களில் நாம் இன்று வரை காண முடியுமாக இருக்கின்றது.

அமெரிக்காவில் கடந்த இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக அரசியலமைப்புத் திருத்தம் போன்ற பிரச்சினைகள் அமெரிக்க தேர்தல்களில் இலங்கை போன்று செல்வாக்குச் செலுத்தியதைக் காண முடியவில்லை. அதன் பொருள் என்ன? அமெரிக்க மக்களை இதுபோன்ற பூச்சாண்டிகளால் அலைக்கழிக்க முடியாது என்பதுதானே. அதுமட்டுமல்ல, அமெரிக்காவின் தேசிய நலனைப் பாதுகாக்கும் அரசியலமைப்பொன்று அங்கே இருக்கின்றபோது அதில் மாற்றங்கள் செய்வது குறித்து தேர்தல் காலங்களில் வாய் கிழியப் பேச வேண்டிய அவசியம் அங்கு வருவதில்லை.

இலங்கையின் அரசியலமைப்பு இலங்கை நலனுக்கானதாக இல்லாத காரணத்தால் அது மாற்றப்பட வேண்டும் என்பது காலமெல்லாம் பேசுபொருளாகியிருக்கிறது. அதனை வைத்துக் கொண்டே இன்னும் நூறு வருடங்கள் இந்த நாட்டுத் தலைவர்கள் அரசியல் நடத்தி விடுவார்கள் போலும்.

ஜனநாயகத்தைப் பொறுத்தவரை அதன் ஒரே ஒரு பண்புதான் இலங்கையில் எஞ்சியிருக்கின்றது. தற்போது வந்திருக்கும் தகவலறியும் சட்ட மூலம் தவிர... தாம் விரும்பியதொரு கட்சிக்கு மக்கள் சுதந்திரமாக வாக்களிக்கலாம் என்பதே அதுவாகும். அந்த வாக்குகளையும் அரசியல் அறிவோடு தேச நலன் பற்றிய விழிப்புணர்வோடு வழங்க முடியாத நிலை காணப்படுகிறது. இனவாதங்களும் கட்சி பேதங்களும் வாக்குகளைச் சூறையாடும் நிலையே தொடர்கின்றன.

வாக்களித்த பிறகு மக்கள் கைவிடப்படுகிறார்கள். அவர்களது நலன்கள் புறக்கணிக்கப்படுகின்றன. மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் செல்பவர்கள் அடுத்த முறையும் பாராளுமன்றம் செல்வதற்கான வேலைகளிலேயே தம்மை ஈடுபடுத்துகிறார்கள். தமது வாக்கு வங்கிகளை தக்கவைத்துக் கொள்ளும் நோக்கிலேயே அபிவிருத்திகளை அவர்கள் செய்கிறார்கள். அது நாட்டுக்கான அபிவிருத்தி... அபிவிருத்தியல்ல... மாறாக, தமது அரசியல் நலனுக்கான அபிவிருத்தியாகவே அது காணப்படுகிறது. யாப்புச் சீர்திருத்தம்... இனவாதம்... போர்... சமாதானம்... அனைத்தும் அதற்காகத்தான்.

ஜனநாயக மரபுகளின் பிரகாரம் அரசாங்கத்தின் பொறுப்புக் கூறும் தன்மைதான் அதன் பதவிக் காலத்தை இன்னுமொரு முறை நீடிப்பதற்கு உதவுகிறது. ஆனால், இங்கோ பணமும் அளவுக்கு அதிகமான விளம்பரங்களும் விவகாரங்களும் (Issues) இனவாதமும் அச்சப்பாடுகளும்தான் அரசாங்கத்தின் பதவிக் காலத்தை நீடிக்க உதவுகின்றன.

ஜனநாயகத்தின் பண்புகளைப் பேணிப் பாதுகாக்கும் நாடுகள் இன்று உலகில் முன்னேறியிருக்கின்றன. அவை முதலாம் உலக நாடுகளாகவும் இருக்கின்றன. அந்த நாடுகளை உற்று நோக்கினால் அங்கு ஜனநாயகம் வெற்றி பெற்றிருப்பதற்கு பின்வருவன அடிப்படைகளாக இருப்பதை அவதானிக்கலாம்:

01. அரசியல் அறிவு படைத்த மக்கள்

02. தூரநோக்கும் செயற்திறனுமிக்க தலைவர்கள் (Visionary Leaders)

03. பக்கச் சார்பற்ற ஊடகங்கள்

04. தெளிவான கொள்கைகளைக் கொண்ட கட்சிகள்

05. நாட்டின் அபிவிருத்தியும் பொருளாதார நலனும்

அனைத்துக் கட்சிகளின் பொது நோக்கங்களாக இருத்தல்

06. மனித, பௌதிக வளங்களை மேம்படுத்தி உச்ச பயன்பாட்டைப் பெறுதல்

இந்த அம்சங்களை சிறப்பாக மேம்படுத்த முடியுமான தேசமே இலங்கை. எனினும், மேலே கூறப்பட்ட எமது அரசியல் கலாசாரம் அதற்கு இடம் தருவதில்லை.

முதலாம் உலக நாடுகளில் காணப்படுகின்ற முன்னேற்றத்திற்கான இந்த அடிப்படைகள் ஆறிலும் முதன்மையானது அரசியல் அறிவு படைத்த மக்களே. அத்தகைய மக்களால் தூரநோக்குள்ள தலைவர்களை அடையாளம் காண முடியும்; ஊடகங்கள் அவர்களை ஏமாற்ற முடியாது. நாட்டின் பொது நலன்களைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கும் கட்சிகளை அவற்றின் கொள்கைகளினூடாக அவர்கள் அறிந்து கொள்வார்கள்.

நாட்டின் தலைவர்களும் வீரம் பேசி... வீராப்புப் பேசி... உணர்ச்சிகளைத் தூண்டி... விளம்பரங்கள் செய்து மக்களின் கவனத்தை ஈர்க்க முடியாது என்பதை அறிந்திருப்பார்கள். அத்தகைய மக்களை இலங்கை போதியளவு கொண்டிராத காரணத்தால் இந்த நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் தலைவர்கள் உருவாகாமலே இருக்கிறார்கள் அல்லது அவ்வப்போது வந்த சில நல்ல தலைவர்களால் நாட்டை சீரிய பாதையில் முன்னேற்றிச் செல்ல முடியாதிருக்கிறது.

இவை அனைத்தும் உணர்த்தும் உண்மைதான் இலங்கையில் இலங்கையர்கள் இல்லை அல்லது குறைவாக இருக்கிறார்கள் என்பதாகும்.

'மூளைசாலிகள் வெளியேற்றம்' என்ற பிரச்சினை எதனைக் குறிக்கின்றது? நாட்டின் முன்னேற்றத்திற்குப் பங்களிப்புச் செய்ய வேண்டிய பலர் இலங்கையர்களாக இருக்க விரும்பவில்லை என்பதையில்லையா? அரச உத்தியோகங்களில் இருக்கின்ற பல்வேறு துறைசார்ந்தவர்கள் நாட்டுக்கும் மக்களுக்கும் வழங்க வேண்டிய சேவைகளில் அல்லது பங்களிப்புக்களில் 50 வீதத்தையோ, 40 வீதத்தையோ, 30 வீதத்தையோ கொடுத்து விட்டு எஞ்சியவற்றை தங்களது பைக்குள் போட்டுக் கொள்வது எதனைக் காட்டுகிறது?!! அவர்கள் இலங்கையர்கள் என்பதையா? காலை ஒன்பது மணிக்கு வேலையை துவங்கி நண்பகல் 12 மணியோடு முடித்துவிட்டு முழுநாள் சம்பளத்தை வாங்கும் அரச நிறுவனங்களின் வெளிக்கள சிற்றூழியர்களும் அவர்களது மேற்பார்வையாளர்களும் எதனை உணர்த்துகின்றார்கள்? அவர்கள் இலங்கையர்கள் என்பதையா? அண்மையில் வெளிவந்துள்ள ஆய்வொன்றின் முடிவுகளின் பிரகாரம் இலங்கையின் ஒவ்வோர் அரச ஊழியனும் சராசரி நான்கு மணி நேரமே ஒரு நாளைக்கு கடமையில் ஈடுபட்டிருக்கிறான் என்றால் இவர்களை இலங்கையர்கள் என்று கூறலாமா? அரச அலுவலகங்களில் தேங்கிக் கிடக்கும் வேலைகளை செய்து முடித்துக் கொள்ள முடியாமல் அலைந்து திரியும் பொது மக்கள் என்ன சொல்கிறார்கள்? தமது கருமங்களை செய்து தர வேண்டிய அலுவலர்கள் இலங்கையர்கள் என்பதையா? நாட்டின் சட்டங்களை ஒருபுறம் வைத்து விட்டு தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி தாம் நினைப்பவற்றை சாதிக்கும் அதிகாரிகள் கற்றுத் தரும் பாடமென்ன? அவர்கள் தான் முன்மாதிரிமிக்க இலங்கையர்கள் என்பதையா? நாட்டின் சொத்துக்களை... வளங்களை... மக்களிடமிருந்து வாங்கும் வரிகளை... மக்கள் செலுத்தும் கட்டணங்களை துஷ்பிரயோகம் செய்து மக்களுக்கும் நாட்டுக்கும் சிறந்த சேவைகளைக் கொடுக்கத் தவறுகின்ற... மக்கள் திருப்திப்படுமளவு வசதிகளை மேம்படுத்த முடியாத... நாட்டின் கடன் சுமையைக் குறைத்து, வருமானத்தை அதிகரிக்கச் செய்ய முடியாத தலைவர்கள் சொல்வதென்ன? அவர்கள் தான் இலங்கையர்களின் தலைவர்கள் என்பதையா?

அது மட்டுமல்ல இலங்கை மக்களின் வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள குற்றச்செயல்களும் குற்றவாளிகளும் இதே வினாவைத் தொடுக்க வைக்கின்றனர். போதைவஸ்துக்களை நாட்டினுள் கடத்தி வருபவர்கள், மக்களிடையே அவற்றைப் பழக்குபவர்கள் இலங்கையர்களா? சட்டங்களை மதிக்காமல் வாகனங்களை ஓட்டிச் சென்று அப்பாவிகளின் உயிர்களை நாளாந்தம் பறிப்பவர்கள் இலங்கையர்களா? அற்ப காரணங்களுக்காக அல்லது கூலிக்காக மனிதர்களைப் படுகொலை செய்வோர் இலங்கையர்களா? காடுகளை அழித்து, அகழக் கூடாத இடங்களிலிருந்து மண் அகழ்ந்து, இயற்கை வளங்களை தமது சொந்த நலன்களுக்காக வேட்டையாடுபவர்கள் இலங்கையர்களா?

நாட்டின் இயற்கை வளங்களுக்கு... இயல்பு நிலைக்கு... மக்களின் சுபிட்சமான வாழ்க்கைக்கு அச்சுறுத்தல் விடுக்கும் எவரும் இலங்கையராக இருக்க முடியாது. எனினும், அத்தகையவர்கள் இன்று அதிகரித்துக் கொண்டே செல்கிறார்கள். காலம் செல்லச் செல்ல அதிகமானவர்கள் இலங்கையர்கள் என்ற அடையாளத்தை இழந்து கொண்டு போவார்கள் என்ற அபாய அறிவிப்பையே மேற்கூறப்பட்ட நடப்புக்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையர் எனும் தேச அடையாளம் நாட்டு மக்களிடையே வேகமாகக் குறைந்து செல்லும் இவ்வேளையில் நாட்டுப்பற்றையும் நாட்டின் நலனிலும் முன்னேற்றத்திலும் அதீத கரிசனையும் கொண்ட நற்பிரஜைகளை உருவாக்குவது அனைவரதும் தலையாய கடமை.

அந்த கடமைக்கு இஸ்லாம் எவ்வாறு உரமூட்டுகிறது என்பதையும் முஸ்லிம்கள் இது விடயத்தில் நடந்து கொள்ள வேண்டிய முறைமைகளையும் அடுத்த இதழில் பார்ப்போம், இன்ஷா அல்லாஹ். ■

முஹம்மத் ஸகி பவுஸ் (நளீமி) விரிவுரையாளர், இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி, மாதம்பை, E-mail: zackymfm@gmail.com

# இனவாதக் குமுறல்கள்: மக்களை ஏமாற்றும் ட்ரம்ப் மாபியா!

(சர்வதேச அரசியல் செயற்பாட்டாளர்களின் வாக்குமூலம்)



**ஒரு விதத்தில், ட்ரம்ப் நீண்ட காலத்தில் ஏற்படுத்தப் போகும் அபாயத்தை மக்கள் மெதுவாக உணர ஆரம்பித்திருக்கிறார்கள் போல் அமெரிக்காவின் உள்ளக சூழல் சுட்டி நிற்கிறது. ஏனெனில், ட்ரம்பின் கொள்கைக ளுக்கு எதிரான பேரணிகள், மக்களார்ப்பாட்டங்கள் மற்றும் சிவில் சமூக எதிர்ப்புகள் போன்றன ட்ரம்பின் கொள்கைகளை கேள்விக்குட்படுத்தும் விதமாக அமைந்துள்ளன.**

**டொனால்ட் ட்ரம்பின்** பதவியேற்பு நிகழ்வுடன் அமெரிக்க அரசியலில் கொந்தளிப்புக்கள் ஆரம்பித்து விட்டன. தனது முதல் உரையிலேயே ''இஸ்லாமிய தீவிரவாதத்தை அழிக்கும் வரை எமது கூட்டணிகளுடன் போராடுவோம்'' என்ற ட்ரம்பின் அறிக்கை புதிய அரசாங்கத்தின் போக்குகளை படம் பிடித்துக் காட்டுகிறது. இனவாத, முஸ்லிம் எதிர்ப்பு கொள்கை வகுப்பாளர்களான ஸ்டீவ் பெனன், மைகல் பிளின், ஜோன் போல்டன் ஆகியோர் மீண்டும் வெள்ளை மாளிகைக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள். ட்ரம்பின் புதிய திடீர் தீர்மானங்களும் கருத்துக்களும் ''அமெரிக்க இனவாதம்'' (American racism) பற்றிய கலந்துரையாடலை சர்வதேச ரீதியாக ஏற்படுத்தியிருக்கிறது. எனவே, முஸ்லிம்களை இலக்கு வைக்கும் இஸ்லாத்தை எதிரியாக கற்பிதம் செய்யும் ட்ரம்பிஸ நிர்வாகத்தின் இனவாத அலையின் போக்குகளை அரசியல் அவதானிகள் விவாதிக்க ஆரம்பித்துள்ளனர். அவ்விவாதங்களில் பங்கு கொண்ட மிக முக்கியமான அரசியல் விமர்சகர்களது கருத்துக்களை இக்கட்டுரை தொகுத்துப் பகுப்பாய்வு செய்ய முயல்கிறது.



## அய்ன் புருமா


**''இஸ்லாத்துடன் மோதுவது மதச் சுதந்திரத்திற்கு தடையானதல்ல'' என்ற மனோநிலையை ஏற்படுத்தல்**

இந்தப் பின்புலத்தில் ட்ரம்பினுடைய தேர்தல் வியாபாரத் திற்குப் பயன்படுத்தப்பட்ட ''முதலாவது அமெரிக்கா'' (America first) என்ற சுலோகம் தன்னளவிலேயே இனவாத மூலக்கூறுகளைக் கொண்டது என்கிறார் பிரபல ஜனநாயக கற்கைகள் துறை பேராசிரியர் அய்ன் புருமா. காரணம், புதிய அரசாங்கத்தினுடைய தலைவர்கள் பயன்படுத்தும் சுலோகம் அமெரிக்காவில் 1930 களில் பிரபல்யமானதொரு கூற்றாகும். ''வெளிநாட்டு இனங்களை, மொழிகளை, சமூகக் கலாசாரங் களை அழிப்பதினூடாகவே அமெரிக்கா பாதுகாக்கப்படும்'' என்ற உள்ளடக்கத்தை ''முதலாவது அமெரிக்கா'' சுலோகம் சுட்டி நிற்பதாக அவர் கூறுகிறார். 1930 களில் யூதர்களுக்கு எதிராக கட்டமைக்கப்பட்ட இனவாத அலையின் புதிய வடிவம் இஸ்லாமியர்களுக்கு எதிராகத் திரும்பியுள்ளது. புதிய

தற்போது அதே பாணியில் ட்ரம்ப் நிர்வாகத்தில் முக்கிய பதவியில் அமர்த்தப்பட்டிருக்கும் மைக்கல் பிலின் ''முஸ்லிம்கள் ஓர் அரசியல் கென்ஸர்'' என்றும், ட்ரம்ப் நிர்வாக ஆதரவாளர் பிரங்க் ஜெப்னி ''முஸ்லிம்கள் மனித உயிர்களை அழிக்கும் கூறுகளைக் கொண்டவர்கள்'' என்றும் கூறியுள்ளார்கள்.

திருப்பத்தில் இஸ்லாத்தை மேற்குலகிற்கு சவாலானதாக கட்டமைக்கும் இஸ்லாமோபோபியா மாபியாக்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றன என்கிறார் அவர்.

மேலும், உயிரியல் காரணிகளை முன்வைத்து ஆரம்ப காலங்களில் அமெரிக்க இனவாதம் கட்டமைக்கப்பட்டன. உதாரணமாக, யூத சமூகத்திற்கு எதிரான இன்வாத செயற்பாடுகளின் போது ''யூதர்கள் உயிர்க் கொல்லி நஞ்சுடையவர்கள்'' என வர்ணிக்கப்பட்டார்கள். தற்போது அதே பாணியில் ட்ரம்ப் நிர்வாகத்தில் முக்கிய பதவியில் அமர்த்தப்பட்டிருக்கும் மைக்கல் பிலின் ''முஸ்லிம்கள் ஓர் அரசியல் கென்ஸர்'' என்றும், ட்ரம்ப் நிர்வாக ஆதரவாளர் பிரங்க் ஜெப்னி ''முஸ்லிம்கள் மனித உயிர்களை அழிக்கும் கூறுகளைக் கொண்டவர்கள்'' என்றும் கூறியுள்ளார்கள். உயிரியல் காரணிகளை (Biological factors) முன்வைத்து இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிரான எதிர்ப்பு செயற்திட்டங்கள் முடுக்கி விடப்பட்ட அனுபவங்கள் மிகக் குறைவானது. அதன் முதல் அனுபவம் சமகால புதிய அமெரிக்க இனவாத அலையில் காண முடியும் என்கிறார் அய்ன் புருமா. இத்தகைய புதிய அணுகுமுறைக்கு ஊடாக இஸ்லாம், முஸ்லிம்களுக்கு எதிரான சட்டங்களை, தடையுத்தரவுகளை ''மதம் சார்ந்து'' நோக்காமல் இனம் சார்ந்து நோக்குவதற்கான சூழலை புதிய இனவாத அலை தோற்றுவிக்க முயல்வதனை புரிந்து கொள்ள முடியும். அதாவது, இஸ்லாத்திற்கு மற்றும் முஸ்லிம்களுக்கு எதிரான கருத்துக்கள் மதச் சுதந்திரத்துடன் தொடர்புபட்டதல்ல. மாறாக, இயற்கை காரணிகளுடன் இணைந்து புரிந்து கொள்ளப்பட வேண்டியவை என்ற கருத்து நிலையை ட்ரம்ப் மாபியா கற்பிதம் செய்ய முனைகிறது.



## நோம் சோம்ஸ்கி

**''கறுப்பின மக்களை அழிப்பதற்கு கையாண்ட அணுகு முறைகளை மீள உயிர்ப்பித்தல்''**

டொனல்ட் ட்ரம்பின் முஸ்லிம் எதிர்ப்புக் கொள்கைகளுக்கு உரமூட்டும் அணுகுமுறைகள், வார்த்தைப் பிரயோகங்களை பகுப்பாய்வு செய்யும்போது, அவை கறுப்பின மக்களுக்கு எதிரான இனவழிப்பு அடக்குமுறை வியூகங்களை ஒத்தவை என பிரபல ஆய்வாளர் நோம் சோம்ஸ்கி குறிப்பிடுகிறார். புதிய அமெரிக்காவின் ஆத்மாவே இனவாத நெருடல்களால் ஆனது என்கிறார் அவர். அமெரிக்காவில் வாழ்ந்த பழங்குடியினரை அழித்து விட்டு கட்டியெழுப்பப்பட்ட தேசமே அமெரிக்கா. கடுமையான சட்டங்கள், இரண்டாம் தர பிரஜைகளாக ஒதுக்கி வைத்தல் மற்றும் அவர்களை நாகரிகமற்ற சமூகங்களாக பிரசாரம் செய்தல் என்பன கறுப்பின மக்களை அடக்குமுறைக்கு உட்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட வியூகங்கள் ஆகும். அதே அணுகுமுறைகளை முஸ்லிம்களுக்கு எதிராகவும் ட்ரம்ப் மாபியா பயன்படுத்த முனைகிறது என நோம் சோம்ஸ்கி அடையாளப்படுத்துகிறார்.

ட்ரம்ப் மாபியாவின் இனவாத வலைப்பின்னல்களுக்கு எதிராக செயற்படும் சிவில் சமூகம் அமெரிக்காவின் கடந்த காலத்தை நினைவுகூர வேண்டும் என அழைப்பு விடுக்கிறார். ஏனெனில், சர்வதேச சமூகமும் சிவில் சமூகமும் அமெரிக்கா விடயத்தில் தொடர்ந்தும் ஒரு தவறை இழைத்து வந்திருக்கிறது. அதனை சர்வதேச புறக்கணிப்பு "International ignorance" என சோம்ஸ்கி குறிப்பிடுகிறார். அதாவது, உலகத்தில் ஏராளமான அழிவுகளுக்கும் திட்டமிட்ட அடக்குமுறைகளுக்கும் அமெரிக்கா காரணமாக இருந்திருக்கிறது. என்றாலும், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சர்வதேச சமூகம் அதனை வசதியாக மறந்து விடுகிறது. அடுத்த முறையும் அமெரிக்கா அழிவுகளுக்கு வித்திடும் செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது, அதனை ''புதிய தோற்றப்பாடுகள்'' போன்று ஆய்வு செய்வதற்கு சர்வதேச சமூகம் முற்படுகிறது. உண்மையில் இது தவறானது மட்டுமல்ல ஆபத்தானதும்கூட. ஏனெனில், அன்று கறுப்பினத்திற்கு எதிராக நடந்தவற்றையும் இன்று முஸ்லிம்கள், இலத்தீன் அமெரிக்கர்கள், ஆபிரிக்கர்களுக்கு நடப்பவையும் ஒன்றுதான் என்கிறார் சோம்ஸ்கி. கவலைக்குரிய விடயம் யாதெனில், கறுப்பின மக்களுக்கும் பூர்விக குடிகளுக்கும்

எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட அநியாயங்களை சர்வதேச சமூகம் மறந்து விட்டது. முஸ்லிம்களுக்கு எதிரான ட்ரம்ப் நிர்வாகத்தின் செயற்பாடுகளை புதிய ஆச்சரியமான ஒன்றாக பகுப்பாய்வு செய்வதற்கு முயல்கிறது. உண்மையில், நீண்ட வரலாற்று வேர்களைக் கொண்டது அமெரிக்க இனவாதம் என்கிறார் சோம்ஸ்கி.

இங்கு சோம்ஸ்கியின் அவதானத்தின்படி, ட்ரம்பின் எழுச்சியும் முஸ்லிம் எதிர்ப்பு கொள்கைளும் அதற்கான ஆதரவுகளும் அமெரிக்காவின் வரலாற்றுப் பக்கங்களுடன் இறுக்கமான தொடர்பைக் கொண்டது என்பதாகும். அதாவது, அரச கட்டமைப்பைப் பயன்படுத்தி ஏனையவர்களை அடக்குவது அமெரிக்காவின் ஸ்திரத்தன்மைக்கு அத்தியாவசியமானது என்ற தத்துவத்தைப் பேசும் அமெரிக்காவின் வெள்ளை இன மேலாண்மைவாதத்தின் ஒரு புதிய பிறப்பே ''முஸ்லிம் எதிர்ப்பு கொள்கைகள்'' என அவர் வரையறை செய்கிறார்.



## சுமையா கன்னூஷி

**மதமும் இனமும் இணைந்த புதிய தோற்றப்பாடு**

ட்ரம்பிஸ இனவாத அலையின் வடிவமும் சுலோகங்களும் மேற்குலக நாகரிகத்தின் ஒரு கோர முகத்தை அடையாளப்படுத்திக் காட்டுவதாக பிரபல அரசியல் செயற்பாட்டாளர் சுமையா கன்னூஷி எழுதிச் செல்கிறார். அதாவது, மேற்குலகத்திற்கு இரண்டு முகங்கள் உண்டு. அதிலொன்று, ஜனநாயகம், சகவாழ்வு, பன்மைத்துவம், நீதி, சுதந்திரம் போன்ற நவீன ஐரோப்பாவின் விழுமியங்களை பாதுகாக்க வேண்டும் என்ற முகம். இரண்டாம் உலக மகா யுத்தத்தைத் தொடர்ந்து இந்த முகமே மேற்குலக மைய நீரோட்டத்தில் அதிகம் ஈர்ப்பைப் பெற்றது. ஆனால், அதனுடன் போட்டி போடும் மற்றொரு முகமும் மேற்குலகிற்கு உண்டு. அதுவே, மேற்கு நாகரிகத்தையும் கலாசாரத்தையும் இனத்தையும் நிறத்தையும் மேன்மையானதாகவும் உலகின் ஏனைய பகுதிகளை நாகரிகமற்றதாகவும் காண்பிக்கும் முகமாகும். காலனியத்திற்கும் ஐரோப்பிய விரிவாக்கத்திற்கும் நாஸிஸத்தின் பாஸிஸத்தின் எழுச்சிக்கும் இரண்டாவது முகமே வித்திட்டது. பிரான்ஸின் உள்ளக சமூகச் சூழல் இரண்டினதும் கலவையாகும். ஐரோப்பாவின் இரண்டாவது மிக மோசமான முகத்தினுடைய வடிவத்தையே ட்ரம்ப் அரசாங்கம் உலகின் மீது பாய்ச்சி வருகிறது என்கிறார் சுமையா கன்னூசி.

அரசியல் செயற்பாட்டாளர் சுமையாவின் கருத்துக்களின் படி, ட்ரம்பின் கொள்கைகளும் போக்குகளும் மேற்குலக நாகரிக எழுச்சியின் அடித்தளங்களுடன் தொடர்புபட்டது என்பதாகும். ஜனநாயகம், சுதந்திரம் மற்றும் பன்மைத்துவத்தை எந்தளவுக்கு ஐரோப்பா மெச்சிப் பேசுகிறதோ அதேபோன்று அந்த சலுகைகள் அனைத்தும் தனது இனத்திற்கு மட்டும்தான் என்ற நெருக்கமான உளவியலையும் அது கொண்டிருக்கிறது என்பதே அவரின் அவதானமாகும். இரண்டு எதிர்நிலை மனோநிலைகளும் ஒன்றையொன்று போட்டி போட்டுக் கொண்டு அதிகாரத்திற்காக முனைப்புடன் செயற்பட்டு வந்திருக்கிறது. அதிகாரப் போட்டியில் இன மேலாண்மைவாத உளவியல் வெற்றி பெற்றுள்ளதனை டொனால்ட் ட்ரம்பின் கொள்கைகள் சுட்டிக் காட்டுகிறது என்பதே சுமையா கன்னூஷியின் நிலைப்பாடாகும்.




## ஹாதிம் பிஸ்யான்

**நாகரிகங்களுக்கு இடையிலான மோதல் கோட்பாட்டின் நிழலில்**

டொனால்ட் ட்ரம்ப்பின் கொள்கைகள் ''நாகரிகங்களுக்கு இடையிலான மோதலை'' உயிர்ப்பிக்கும் செயற்திட்டமாகும் என்கிறார் பேராசிரியர் ஹாதிம் பிஸ்யான். டொனால்ட் ட்ரம்பின் கொள்கைகளில் முதன்மையான மற்றொரு வாசகம், "Make America great again" என்பதாகும்.

அதிகாரப் போட்டியில் இன மேலாண்மைவாத உளவியல் வெற்றி பெற்றுள்ளதனை டொனால்ட் ட்ரம்பின் கொள்கைகள் சுட்டிக் காட்டுகிறது என்பதே சுமையா கன்னூஷியின் நிலைப்பாடாகும்.




அதாவது ஒபாமாவின் காலப் பிரிவில் அமெரிக்கா தனது மகத்துவத்தை இழந்து விட்டது. அவருடைய காலப் பிரிவில் அமெரிக்காவின் இந்த நூற்றாண்டிற்கான சுலோகமான ''இஸ்லாமிய நாகரிகத்துடன் மோதல்'' என்ற நிகழ்ச்சித் திட்டம் பலவீனப்பட்டுச் சென்றுள்ளது. மீண்டும் அதனை உயிர்ப்பித்து இந்த நூற்றாண்டின் எதிரியையும் வெற்றி கொள்ள வேண்டும் என்ற கருத்தையே "Make America great again" கருத்தாடல் உணர்த்தி நிற்கிறது. தேர்தல் காலங்களில் இந்த வாசகம் எதனை நாடுகிறது? என பலரும் வாதித்து வந்தனர். ஆனால், அது மீண்டும் இஸ்லாமிய நாகரிகத்துடனான மோதலை உயிர்ப்பிப்பதுதான் என்ற உண்மையை ட்ரம்பின் அரசாங்க கொள்கைகள், உயர் பதவிகளுக்கான நியமனங்கள் புலப்படுத்துகின்றன என்கிறார் பிஸ்யான். குறிப்பாக, புதிய அரசாங்கத்தின் உயர் ஆலோசனைக் குழு உறுப்பினர் டேவிட் பெனோன் ''இஸ்லாத்துடன் அமெரிக்கா போராடுவது நியாயமானது'' என கூறியிருக்கிறார்.

மட்டுமன்றி ''இஸ்லாம் மதம் என்ற போர்வையில் மறைந்திருக்கும் ஓர் அரசியல் புரொஜெக்ட்'' என்ற பாதுகாப்பு செயலாளர் மெகல் பிளினுடைய கருத்தும் கவனத்தை ஈர்க்க வேண்டியது. மேலும், புதிய அரசாங்கத்தின் அனைத்து கொள்கை வகுப்பிலும் ''இஸ்லாத்தை மையப்படுத்தும் (Problematizing Islam) நாகரிகங்களுக்கு இடையிலான மோதல்'' தத்துவத்தின் புதிய பதிப்பாகவே ட்ரம்ப் அரசாங்கத்தை நோக்க வேண்டும் என்கிறார் பிஸ்யான்.

பேராசிரியர் அய்ன் புரூமா, நோம் சோம்ஸ்கி, சுமையா கன்னூஷி மற்றும் ஹாதிம் பிஸ்யானுடைய போன்றவர்களுடைய அவதானங்கள் ட்ரம்ப் மாபியாவின் பல்வேறு பரிமாணங்களை கோடிட்டுக் காட்டுகின்றன. குறிப்பாக, மேற்கு நாகரிகத்தின் மூலவேர்கள், அமெரிக்க தேசத்தின் உளவியல் பின்புலம் முதல் சர்வதேச அரசியல் புலத்தில் தொழிற்படும் கோட்பாடுகள் வரை அவை நீண்டு செல்கின்றன. உண்மையில், சகல காரணிகளையும் சுருக்கித் தொகுத்து நோக்கும்போது மேற்கூறப்பட்ட சகல காரணிகளினதும் ஒட்டுமொத்த வடிவமாகவே டொனால்ட் ட்ரம்பின் கொள்கைகளும் அது ஊட்டி வளர்க்க முயற்சிக்கும் ''அமெரிக்க இனவாதமும்'' உருப் பெறுவதனை அடித்துக் கூறலாம். அதாவது, சமகால அமெரிக்க இனவாதத்தின் பின்புலத்தில் ''இஸ்லாத்தை'' எதிரியாக அரசியல் காரணங்களுக்காக கட்டமைக்கும் பொருளாதார ஏஜன்டுகளின் நலன்கள் மறைந்து இயங்குவது நிதர்சனமானது. அதேபோன்று, பொருளாதார நலன்களுடன் வெள்ளை மேலாண்மைவாதத்தை தூய்மைப்படுத்தும் தீவிர இயக்கங்களின் செயற்பாடுகள் கூட்டுச் சேர்ந்துள்ளமையை அவதானிக்கிறோம். எனவே, இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிரான அமெரிக்க இனவாதம் பல்வேறு மூலக்கூறுகளினதும் காரணிகளினதும் கலவையே.

''முதலாவது அமெரிக்கா'' மற்றும் ''அமெரிக்காவின் மகத்துவத்தை மீளப் பெறல்'' போன்ற ட்ரம்பின் சுலோகங்களை நம்பி மக்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள் என்பது மட்டும் பட்டவர்த்தனமானது. அதாவது, ட்ரம்ப் தமது பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு தருவதாக் நினைத்தே பலரும் ''முதலாவது அமெரிக்கா'' சுலோகத்திற்கு வாக்களித்தனர். ஆனால், ட்ரம்ப் மற்றும் அவருக்குப் பின்னால் ஒளிந்திருக்கும் மாபியாவின் அகராதியில் ''முதலாவது அமெரிக்கா'' சுலோகத்திற்கு கொடுக்கப்பட்ட விளக்கம் வேறு. அதிலும் ஒருவேளை ட்ரம்பின் செயற்பாடுகளும் கொள்கைகளும் குறுகிய காலத்தில் வாக்களித்த மக்களுக்கு உணர்வுபூர்வமாக அமையலாம். ஏதோ செய்யப் போகிறார் என்பது போல் தோற்றமளிக்கலாம்.

கடைசியில், அமெரிக்காவின் சமூகக் கட்டமைப்பை முழுமையாக பிளவுபடுத்தக் கூடிய தோற்றப்பாட்டை நீண்ட காலத்தில் அது தோற்றுவிக்கவல்லது. ஒரு விதத்தில், ட்ரம்ப் நீண்ட காலத்தில் ஏற்படுத்தப் போகும் அபாயத்தை மக்கள் மெதுவாக உணர ஆரம்பித்திருக்கிறார்கள் போல் அமெரிக்காவின் உள்ளக சூழல் சுட்டி நிற்கிறது. ஏனெனில், ட்ரம்பின் கொள்கைகளுக்கு எதிரான பேரணிகள், மக்களார்ப்பாட்டங்கள் மற்றும் சிவில் சமூக எதிர்ப்புகள் போன்றன ட்ரம்பின் கொள்கைகளை கேள்விக்குட்படுத்தும் விதமாக அமைந்துள்ளன.■

# இலங்கை முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கியுள்ள சவால்கள்!

எம்.எச்.எம். ஹஸன்

அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தனது பிரசாரத்தை ஆரம்பித்த மக்கா பூமி மடமைச் சிந்தனைகளாலும் கொலை, களவு, மது, சூது, விபசாரம் என்ற பெரும் பாவங்களாலும் சூழ்ந்திருந்தது. பாலைவன வெயிலில் வரண்டு போயிருந்த பூமியில் வாழ்ந்த மக்களின் மனங்களும் வரண்டே காணப்பட்டன. தன்னைக் கொலை செய்யத் துணிந்திருந்த மக்கள் மத்தியில் அல்லாஹ்வின் தூதை அறிமுகம் செய்ய வேண்டிய நிலையில் அண்ணலார் இருந்தார்கள். முரண்பட்ட கொள்கைகளும் பன்மைத்துவமும் நிறைந்த மனிதர்கள் மத்தியிலேயே முழு உலகிலும் இஸ்லாத்தை அறிமுகப்படுத்தும் பணியில் அன்றைய ஸஹாபாக்கள் ஈடுபட்டார்கள்.

'இலங்கையின் பெரும்பான்மைச் சமூகமான சிங்கள மக்கள் பொதுவாக நல்லவர்கள்' என்பது முஸ்லிம்களின் கருத்தாக உள்ளது. ஆயிரம் வருட கால நீண்ட வரலாற்று அனுபவத்தின் பேரிலேயே இந்தச் சான்று மொழி வழங்கப்படுகிறது. முஸ்லிம்கள் சிங்கள மக்களுடன் கலந்து வாழ்ந்த வரலாற்றை பேராசிரியர் லோனா தேவராஜ் தனது நூலில் அழகாய் பதிவு செய்துள்ளார். முன்னர் எல்லாம் கிராமிய சிங்கள மக்களிடத்தில் முஸ்லிம்கள் பற்றிக் கேட்டால் ''நல்லவர்கள்... ஆனால், விலங்குகளை இறைச்சிக்காக கொலை செய்வது ஒன்றுதான் ஏற்றுக் கொள்ள முடியாது. அதனை விட்டு விட்டால் மிகவும் நல்லவர்களாக இருப்பார்கள்'' என்ற கருத்து நிலவியது. அத்தகைய நல்ல மனிதர்களிடையே இன்று முஸ்லிம்களைப் பற்றி என்ன கருத்துக்கள் நிலவுகின்றன என்பது பற்றியும் அண்மைக் காலத்தில் அதிகரித்து வரும் முஸ்லிம் எதிர்ப்பலைகளுக்கான காரணம் பற்றியும் பல ஆய்வுகள் தொடர்ந்து வரும் நிலையில் அது தொடர்பான மேலோட்டமான சில விடயங்களைப் பகிர்ந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

பள்ளிவாசல்கள் அன்று தொடக்கம் இருந்து வருகின்றன. அதானும் புதிதாக வந்ததொன்றல்ல. அப்படியானால், இப்போது மட்டும் ஏன் எதிர்க்கிறார்கள்? இனவாதம், அரசியல், பொறாமை, வெளிநாட்டுச் சக்திகளின் தூண்டுதல் என்ற பல காரணங்களைக் கூறி நாம் திருப்தியடையலாம். அதனை விட வேறு காரணம் இல்லையா? என்றால் இருக்கிறது. பாதையோரங்களில் வாகன போக்குவரத்தைத் தடை செய்யும் வகையிலும் பாதசாரிகளுக்கு இடையூறு அளிக்கும் வகையிலும் குறுகலான இடத்தில் அதிகமான வாகனங்களை நிறுத்தும் பள்ளிவாசல்கள் அன்று இருக்கவில்லை. ஐந்தாறு பள்ளிவாசல்களில் காதைக் கிழிக்கும் ஓசையுடன் ஒலி மாசடையும் பாணியிலான அதான் கூறும் பள்ளிவாசல்கள் அன்று இருக்கவில்லை என்பது உண்மையானால் பந்து யார் பக்கம் என்பதை யோசிக்க வேண்டும்.

பாதையோரங்களில் வாகன போக்குவரத்தைத் தடை செய்யும் வகையிலும் பாதசாரிகளுக்கு இடையூறு அளிக்கும் வகையிலும் குறுகலான இடத்தில் அதிகமான வாகனங்களை நிறுத்தும் பள்ளிவாசல்கள் அன்று இருக்கவில்லை. ஐந்தாறு பள்ளிவாசல்களில் காதைக் கிழிக்கும் ஓசையுடன் ஒலி மாசடையும் பாணியிலான அதான் கூறும் பள்ளிவாசல்கள் அன்று இருக்கவில்லை என்பது உண்மையானால் பந்து யார் பக்கம் என்பதை யோசிக்க வேண்டும்.

இறைச்சி சாப்பிடுவது முஸ்லிம்களுக்கு அனுமதிக்கப்பட்ட ஒன்று. உயிர்களைக் கொல்வதை சிங்கள பௌத்தர்கள் பெரும் பாவமாக, இழிவான செயலாக கருதுகின்றனர். மனிதன் வேட்டையாடிய காலத்தில் நாகரிகமடையாத காலத்தில்தான் விலங்குகளைக் கொன்று இறைச்சியை உணவாகக் கொண்டதாகவும், நாகரிகமான மனிதன்



அவ்வாறு செய்யக் கூடாது என்பதும் அவர்களது கொள்கை. கிறிஸ்தவரும் எல்லா வகையான இறைச்சி வகைகளையும் சாப்பிடுகிறார்கள். அப்படியாயின் எதிர்ப்பு முஸ்லிம்களுக்கு மட்டும் ஏன்? என்ற நியாயமான கேள்வியும் எழுகிறது. ஆட்டை, மாட்டை அறுத்து அதனை அப்படியே இரத்தம் வடிய வடிய கம்பிகளில் தொங்க விட்டு காட்சிப்படுத்தி நாயும் ஈயும் மொய்த்துக் கொண்டிருக்கும் காட்சி இலங்கை முஸ்லிம்களின் இறைச்சிக் கடைகளில் மாத்திரம்தான் காணப்படுகின்றது.

தென் ஆபிரிக்காவின் தலைநகரான ஜோஹன்னஸ்பேர்க்கின் நியூ டவுனில் வாழும் முஸ்லிம்கள் உலகத்துக்கு சவால் விடுகின்றனர். பல நூறு ஆடுகள், மாடுகள் அறுக்கும் நிலையங்கள் அங்குண்டு. அவற்றில் எந்தவோர் அசிங்கமும் துர்நாற்றமும் இன்றி சுகாதாரம் பேணி நாகரிகமாக அதனைச் செய்து வருகின்றனர். ''அசுத்தமும் அலங்கோலமும் இருந்தால் காட்டுங்கள்'' என்பது அவர்களின் சவால். இலங்கையின் வர்த்தகப் பரப்பில் எல்லா வகையான வியாபார நிலையங்களும் நவீனமடைந்து புதுமைகள் புகுந்து நேர்த்தியாகவும் அழகாகவும் காட்சி தரும்போது முஸ்லிம்களிடம் மட்டுமே மாட்டிக் கொண்ட இறைச்சிக் கடை மட்டும் சகிக்க முடியாத கோலத்தில் இருப்பதற்கான காரணமும் எதிர்ப்புக்கான காரணமும் நாங்களேயன்றி வேறு யாருமல்ல.

மரணித்தவர்களின் கடமைகள் மிக எளிமையாக, நேர்த்தியாக நடைபெறுகின்றன. திருமணத்தின் முக்கிய நிகழ்வான நிகாஹ் பள்ளிவாசலில் மிம்பருக்குப் பக்கத்தில் மிகவும் பக்திப் பரவசமாக நடைபெறுகின்றது. ஆனால், பல்வேறு பெயர்களில் விருந்துகள் நட்சத்திர ஹோட்டலில் அல்லது சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வெகு கோலாகலமாக மில்லியன் கணக்கில் செலவு செய்து நடத்தப்படுகின்றன. அங்கும் கூட வாகன நெரிசல், போக்குவரத்து தடைகள் ஏராளம். எளிமையை விரும்பும் சிக்கனமான சமூகம் என்ற பெயர் வருமா? வராதா? என்பது நமக்கே வெளிச்சம். முஸ்லிம் சகோதரத்துவம் பற்றிய மிக மோசமான பதிவு சகோதர இனத்தவர்களுக்கிடையே காணப்படுகின்றது. எல்லாம் முஸ்லிம்களுக்குத்தான்; மனிதர்களுக்கல்ல என்பதுதான் அவர்களது பதிவு.

உலகம் பூராகவும் முஸ்லிம்கள் மீது எதிர்ப்பலைகள் தோன்றியுள்ள பிரதான விடயம் பெண்களின் உடை சார்ந்ததாகும். உலக முஸ்லிம்களில் ஒரு சாரார் நிகாப் என்பது இஸ்லாத்தில் வாஜிப் என்ற மட்டத்தில் வைத்துப் பார்க்கிறார்கள். வேறு சிலர் அது அணிபவரின் சுய விருப்பு என்று கணிப்பிடுகிறார்கள். வேறு சிலரோ முஸ்லிம் சமூகத்தை பிரச்சினைகளில் வீழ்த்தும் ஒரு தீவிரவாதச் செயலாக பார்க்கிறார்கள். முஸ்லிம்கள் மத்தியிலே இத்தகைய கருத்து வேறுபாடுகள் நிலவும்போது இந்நாட்டின் முஸ்லிமல்லாத

இலங்கையின் வர்த்தகப் பரப்பில் எல்லா வகையான வியாபார நிலையங்களும் நவீனமடைந்து புதுமைகள் புகுந்து நேர்த்தியாகவும் அழகாகவும் காட்சி தரும்போது முஸ்லிம்களிடம் மட்டுமே மாட்டிக் கொண்ட இறைச்சிக் கடை மட்டும் சகிக்க முடியாத கோலத்தில் இருப்பதற்கான காரணமும் எதிர்ப்புக்கான காரணமும் நாங்களே யன்றி வேறு யாருமல்ல.

வர்கள் இதனை எப்படி பார்க்கிறார்கள் என்பதும் புறக்கணிக்கக் கூடியது ஒன்றல்ல.

இன, மத, மொழி, குல வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று சிந்திக்கும் சில புத்திஜீவிகள் தேசிய ஊடகங்கள் சிலவற்றில் கருத்துக்களை வெளியிடுகின்றனர். அத்தகையவர்களுள் ஒருவரான காமினி வியாப்கொட ராவய பத்திரிகையில் அண்மையில் எழுதிய கட்டுரைகளில் வலியுறுத்திய ஒரு விடயத்தை நோக்குவோம். ''உலகில் வாழும் ஒரு மனிதன் இனங்காணப்படுவது, அடையாளப்படுத்தப்படுவது முகத்தின் மூலமே ஆகும். அதனையே உலகில் இருந்து மறைத்துக் கொள்ளும் ஒருவர் சமூகத்தில் வாழத் தகுதியானவரா என்பதை மறு பரிசிலனை செய்ய வேண்டும். ஒரு சாராரின் முகத்தை மறைக்கும் உரிமையைப் பயன்படுத்தி பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான பல விடயங்கள் நடைபெறுகின்றன. இது பற்றி அரசாங்கம் சிந்திக்க வேண்டும்'' என்ற கருத்தில் அவர் எழுதியுள்ளார். இதனையொத்த கருத்துக்கள் ஏராளம்.

பெண்களின் அவ்ரத் பற்றியும் நிகாப் பற்றியும் அண்மைக் காலமாக பல கருத்துக்கள் ஊடகங்களில், புத்தகங்களில் வெளிவருகின்றன. நிகாப் அணிவதால் நன்மையுண்டு என்பதை முஸ்லிம் சமூகம் அங்கீகரித்தாலும் மார்க்கத்தில் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்ற ஒரு விடயத்தை முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழ்கின்ற நாட்டின் பல இடங்களில் பல விடயங்களில் முஸ்லிம்கள் நுழையத் தடையாக இருக்கும் ஒன்றைத் தொடர்ந்து கடைப்பிடிப்பது ஏன்? என்ற கேள்வி எழுகிறது.

அகீதா, இபாதத் போல ஆடை என்பது எந்தச் சூழலிலும் மாறுபடாத ஒன்றல்ல. இஸ்லாமிய உடைகளுக்கான வரையறையை இஸ்லாம் கற்றுத் தந்தபோதும் அதற்கான வடிவத்தை அது ஒருபோதும் கூறவில்லை. அரபு நாட்டின்

தேசிய உடை இஸ்லாமிய உடையாக முடியாது. முஸ்லிமல்லாத வர்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரு சூழலில், அவர்கள் பிழையாகப் புரிந்து கொள்வார்கள் என்று இருக்கும் நிலையில் சில வெளிநாட்டு உடைகளின் வடிவங்களை பாதுகாக்க வேண்டிய அவசியம் இருக்கிறதா? என்பது சிந்திக்க வேண்டியதே. இனவாதிகள், இதனைவிட படுமோசமான விமர்சனங்களையெல்லாம் முன்வைக்கின்ற போதும் அதனை விட நம்மை விரும்பும் பெரும்பான்மையினர் முன்வைக்கும் கருத்துக்கள் முக்கியமானவை இல்லையா?

சில தசாப்தங்களுக்கு முன்பிருந்தே ஆலிம்கள் அரேபிய (தோப்) உடையை அணிந்து வருகின்றனர். அது அவர்களுக்கு அழகாகவும் நேர்த்தியாகவும் பொருத்தமானதாகவும் இருப்பது உண்மை. ஆனால், அண்மைக் காலமாக அங்காடி வியாபாரிகள், முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் என்று பலரும் இதனை அணியும்போது உலமாக்களின் உடை என்ற நிலை அற்றுப் போயுள்ளது. நீண்ட காலம் நம்மோடு வாழும் முஸ்லிம்கள் போலல்லாது அரேபிய உடையணியும் இவர்கள் யார்? எதற்காக இவர்கள் இப்படி அணிகிறார்கள்? இதற்குப் பின்னால் இருக்கும் கருத்து அல்லது சதி என்ன? என்று எழுதவும் தேடவும் ஆரம்பித்துள்ளார்கள். ஏதோ ஓர் அரபு நாட்டின் ஏற்பாட்டில் திட்டமிட்டு இலங்கையை ஆக்கிரமிக்கும் கலாசாரமாகவே இதனை பார்க்க ஆரம்பித்து விட்டார்கள்.

கடந்த சுதந்திர தினத்தன்று நடைபெற்ற ஒரு கூட்டத்தில் ஓர் இளம் ஆலிம் சிங்கள மொழியில் நாட்டுக்கு நாம் செய்ய வேண்டிய பணி குறித்து இஸ்லாத்தின் வழிகாட்டலின் நிழலில் உரையாற்றினார். அதனையடுத்து உரையாற்றிய ஒரு பௌத்த பிக்கு அந்த இளம் ஆலிமின் உரையை வெகுவாகப் புகழ்ந்த தோடல்லாமல் ''எங்களை விட நாட்டுக்கு விசுவாசமாக நீங்கள் இருக்கின்றீர்கள்; உங்கள் மார்க்கம் அதற்கு உங்களுக்கு வழிகாட்டுகிறது. ஆனால், நீங்கள் விலகி விலகி போவதாலும் வேறு நாட்டு மனிதர்கள்போல இருப்பதாலும் அனைத்து விடயங்களிலும் தனியாகச் சிந்திப்பதாலும் உங்கள் மொழி எங்களுக்கு புரியாததாலும் சிங்கள மக்கள் மத்தியில் பீதி கலந்த வெறுப்புணர்வு அதிகரித்து வருகிறது. முடியுமான விடயங்களிலாவது நாங்கள் இணைந்தால் இந்த நாடு துரிதமாக அபிவிருத்தியடையும்'' என்று கூறினார்.

இன்னும் பல காரணங்கள் இருந்தாலும் அவற்றுள் சில எமது கட்டுப்பாட்டை மீறி செயற்படுபவையாகவும் உள்ளன. ஆனால், மேற்கூறியது போன்ற விடயங்கள் நாம் கரைந்து விடாதபடி கலந்து வாழும் உத்திகளாக இருப்பதை உணரலாம். எமது தூய மார்க்கத்தை முழுமையாகப் பின்பற்றிக் கொண்டே அதன் பண்புகளை எமது வாழ்க்கை நிகழ்வுகளில் எடுத்துக் காட்டிக் கொண்டே வாழும் வழிகள் பற்றிச் சிந்திப்பது புத்திஜீவிகளது தலையாய கடமை. அதற்கு வழிகாட்டுவது இந்நாட்டு உலமா பெருமக்களின் பொறுப்பாகும். ■


**புதிதாக கடை ஆரம்பிக்க இருப்பவர்களுக்கான அரிய வாய்ப்பு**

வர்த்தக நிலையமொன்றுக்கான அனைத்து விதமான பொருட்களும் விற்பனைக்கு உண்டு.

- ஆண், பெண் குழந்தைகளின் ஆடைகள்
- பேபி Items, பிளாஸ்டிக் பொருட்கள்
- தையல் உபகரணங்கள்
- பெண்களின் அழகுசாதனப் பொருட்கள்
- பரிசுப் பொருட்கள்
- கண்ணாடி Showcase கள் - (4)
- ராக்கைகள்
- ஹேங்கர்கள் உட்பட கட்பீஸ் துணிகளும் விற்பனைக்கு உண்டு

**A-Z Fancy House**

40/A, வெலிவிட்ட

தொடர்புகளுக்கு: 011 5020936

**ஓர் அரிய சந்தர்ப்பம்**

**கண்ணில் வெள்ளை படர்தல் நோய்க்கான சத்திர சிகிச்சை**

(Cataract Surgery)



திகதி: 19-03-2017

கட்டணம் ரூபா- 16,000.00

இடம்: குவைத் வைத்தியசாலை, புத்தளம்

தொடர்புகளுக்கு: 0322266480, 0324934469

# ORCHID
## ALUMINIUM DISTRIBUTORS

**Manufactures of Aluminium, Stainless Steel Hotel, Kitchen Equipments**

எமது பள்ளிவாயல்கள், மத்ரஸாக்கள், ஹோட்டல் மற்றும் நோன்பு காலங்களில் பள்ளிவாசல்களுக்குத் தேவையான உறுதியான முறையில் தயாரிக்கப்பட்ட சகல அளவுகளிலுமான...

**பழைய பானைகளைத் திருத்திக் கொள்ளலாம். அல்லது அவற்றுக்குப் பதிலாக புதிய பானைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.**

அலுமினியம் சட்டி (பானை) களை 4 கொத்து முதல் 80 கொத்து வரை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். (சமையலறைக்குத் தேவையான அனைத்து உபகரணங்களும் எம்மிடம் உண்டு)



**30 வருட அனுபவம்**

**50-80 கொத்து பானைகளுக்கு 20 வருட உத்தரவாதம் உண்டு**

**-நாட்டின் எப்பாகத்திற்கும் விநியோக வசதி உண்டு!-**



**Hotline: 077 3211074**

No. 11 Weda Mawatha, Wattalpola,
Henamulla, Panadura
(Next to MULTILAC PAINT INDUSTRY )
Wattalpola, Galle

**Phone: 011 3043077**
**Mob: 0777 322896**

கண்டி, மடவளை

# ஹில்கன்றி சர்வதேச பாடசாலை

அரியதொரு வாய்ப்பு

ஆங்கில மொழி மூலமான
உயர்தர வகுப்புகள் - 2019

மாணவிகளுக்கு மட்டும்

## வணிகத்துறை மற்றும் கலைப்பிரிவு

உங்கள் விண்ணப்பங்களுக்கு இன்றே முந்திக் கொள்ளுங்கள்

மார்ச் 2017 முதல் ஆரம்பம்

குறிப்பு:
- தேர்ச்சி பெற்ற ஆசிரியர் குழாம்
- வசதியான வகுப்பறைகள்
- 12 வருட அனுபவமிக்க பாடசாலை

தொடர்புகளுக்கு:
Tel: 081-2476600,
081-2470125
077-0035760,
077-2003499
E-mail: hillcountryintl03@yahoo.com

## ஜாமிஆ ஆஇஷா ஸித்தீக்கா - மாவனல்லை

JAMIAH AYESHAH SIDDEEQAH
For motherhood development
MOTHER IS AN INSTITUTION

### புதிய மாணவிகள் அனுமதி - 2017

"சிறந்த ஒரு தாய் உருவானால் சீரிய ஒரு சமூகம் உருவாகும்" என்பதனை இலக்காகக் கொண்ட முன்மாதிரி மிக்க, மாற்றத்துக்காக உழைக்கும் பெண்களை உருவாக்குவதில் ஜாமிஆ ஆஇஷா ஸித்தீக்கா அயராது உழைத்து வருகின்றது.



**பின்வரும் தகுதி உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.**
- 2016 இல் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றியிருத்தல்.
- 01.05.2017 இல் 18 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல்
- சுகதேகியாக இருத்தல்.

**விண்ணப்பிக்கும் விதம்:**
**விண்ணப்பப் படிவத்தை**
நேரடியாக ஜாமிஆ காரியாலயத்தில் அல்லது
சுய விலாசமிடப்பட்ட முத்திரை ஒட்டிய கடித உறை ஒன்றை அனுப்புவதன் மூலம் அல்லது
எமது இணையத் தளத்தில் (Website: www.siddeeqa.org) பதிவிறக்கம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.
விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்:
**Jamiah Ayesha Siddeeqa, P.O.Box: 14, Mawanella.**
விண்ணப்ப முடிவுத் திகதி : O/L பெறுபேறுகள் வெளியாகி 5 தினங்கள்

முக்கிய குறிப்பு:
குறித்த தினத்துக்கு (O/L பெறுபேறுகள் வெளியாகி 5 தினங்கள்) பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேலும் விண்ணப்பிக்கத் தவறி நேர்முகப் பரீட்சைத் தினத்தில் சமுகமளிப்பவர்களும் அனுமதிப்பட மாட்டார்கள்.
மேலதிக தொடர்புகளுக்கு:
**077-3950087 / 0772003868**



# உங்கள் பிள்ளையின் ஈமானை புதுப்பித்துக் கொள்ளுங்கள்!

★★★ கலாநிதி ஸமீர் யூனுஸ் | தமிழில்: பர்ஹான் மன்சூர்

**மகிழ்ச்சியும் துக்கமும் இலாபமும் நஷ்டமும் மனிதனுக்குப் பீடிக்கின்ற அனைத்தும் இறைவன் புறத்திலிருந்தே நடைபெறுகின்றன என்பதையும் பிள்ளைகளுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.**

ஒரு முஸ்லிமைப் பொறுத்தவரை ஈமானே அடிப்படையானதாகும். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் தூதினுடைய சாராம்சமே ஈமான்தான். அது மாத்திரமன்றி, வரலாற்றில் தோன்றிய அனைத்து நபிமார்களும் இதைத்தான் போதித்தார்கள். ஒரு மனிதன் செய்கின்ற நற்காரியங்கள் அல்லாஹ்விடம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமாக இருந்தால் அவனிடம் கட்டாயமாக ஈமான் காணப்பட வேண்டும். யாரிடம் ஈமான் இல்லையோ அவர் எவ்வளவு பெரிய நற்காரியம் புரிந்தாலும் அது அல்லாஹ்விடம் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

உலகில் ஒரு மனிதன் வெற்றி பெறுவதற்கும் தோல்வியடைவதற்கும் இடையிலுள்ள பிரிகோடாக ஈமான் காணப்படுகிறது என்பதை ஸூரா பய்யினாவுடைய 6,7,8 ஆகிய வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன. அதேவேளை ஸூரதுல் அஸ்ரில் அல்லாஹ் சத்தியமிட்டு இதே கருத்தை தெளிவுபடுத்துகிறான். இதன் காரணமாக அகீதாவை படிப்பதை, விளங்குவதை இஸ்லாமிய அறிஞர்கள் கட்டாயப்படுத்தியுள்ளனர். ஒரு பிள்ளை அகீதா தொடர்பாக தனது பெற்றோரிடம் கேள்வி கேட்டால் அதற்கு பதிலளிக்கக் கூடிய நிலையில் அப்பெற்றோர் இருக்க வேண்டும்.

ஒவ்வொரு பெற்றோரும் தனது பிள்ளைகள் இம்மையிலும் மறுமையிலும் வெற்றி பெற வேண்டும் என்பதையே விரும்புகிறார்கள். ஆகவே, ஈருலக வாழ்வும் மகிழ்ச்சியுடையதாக அமைய அகீதாவை உள்ளத்தின் ஆழத்தில் பதிக்க வேண்டும்; ஈமானை அடிக்கடி புதுப்பிப்பதும் அவசியம். ஏனெனில், ஈமான் கூடிக் குறையக் கூடியது என நபி (ஸல்லல்லாஹு அலைஹி

வஸல்லம்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

## அகீதாவின் சாராம்சம்

01. அல்லாஹ் பற்றிய நம்பிக்கை

பிள்ளைகளுக்கு அல்லாஹ் பற்றியும் அவனது பண்புகள், ஆற்றல்கள், அழகுத் திருநாமங்கள் பற்றியும் சொல்லிக் கொடுக்க வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கு இருக்கிறது. அல்லாஹ் பற்றிய தெளிவு பெற்றோரிடம் காணப்படாதபோது பிள்ளைகளிடம் உறுதியான ஈமானை எதிர்பார்க்க முடியாது.

02. மலக்குகள் பற்றிய நம்பிக்கை

அல்லாஹ்வின் படைப்பான மலக்குகள் உண்ணவோ, பருகவோ, திருமணம் செய்யவோ மாட்டார்கள். அவர்களுக்கு தூக்கம் என்பது கிடையாது. அல்லாஹ்வின் கட்டளைக்கு அணுவளவும் மாறு செய்ய மாட்டார்கள் என்ற விடயம் பிள்ளைகளுக்கு ஊட்டப்பட வேண்டும்.

03. வேதங்கள் பற்றிய நம்பிக்கை

மனிதர்களில் சிரேஷ்டமானவர்களை அல்லாஹ் நபிமார்களாகவும் ரஸூல்மார்களாகவும் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஸுஹுபுகளையும் வேதங்களையும் வழங்கியுள்ளான். அதன் மூலமாக அவர்கள் மக்களுக்கு வழிகாட்டுகிறார்கள்.

04. ரஸூல்மார்கள் பற்றிய நம்பிக்கை

நபிமார்களிடம் கட்டாயமாக இருக்க வேண்டிய பண்புகள், இருக்க முடியாத பண்புகள் ஆகியவற்றை தெளிவுபடுத்துவதோடு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை முன்மாதிரியாகக் கொள்வதற்கு வழிகாட்ட வேண்டும்.

05. கழா கத்ர் பற்றிய நம்பிக்கை

மகிழ்ச்சியும் துக்கமும் இலாபமும் நஷ்டமும் மனிதனுக்குப் பீடிக்கின்ற அனைத்தும் இறைவன் புறத்திலிருந்தே நடைபெறுகின்றன என்பதையும் பிள்ளைகளுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

## ஈமானை புதுப்பிப்பது எவ்வாறு?

01. பிள்ளைகளுக்கு ஈமானைக் கற்றுக் கொடுத்தல்

ஈமானுடைய ஆறு அம்சங்களையும் தெளிவுபடுத்திய பின்னர் அந்த நம்பிக்கையின் விளைவாக தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் முதலான கடமைகளை ஒரு முஸ்லிம் நிறைவேற்ற வேண்டும்; ஈமான் என்பது உள்ளத்தால் நம்புவது மாத்திரமல்ல, அது உடலுறுப்புக்களால் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதை பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுப்பது அவசியம்.

02. தர்க்க ரீதியாக ஆதாரங்களை பயன்படுத்தல்

எனக்கு நான்கு வயதில் ஒரு மகன் இருக்கிறான். ஒரு நாள் அவன் என்னிடம் ஒரு கேள்வி தொடுத்தான். ''அல்லாஹ் இருப்பது உண்மையென்றால் நான் ஏன் அவனை இன்னும் காணவில்லை?'' இதுபோன்ற கேள்விகளை நிறைய பிள்ளைகள் தம் பெற்றோரிடம் கேட்பதாக அறிந்திருக்கிறேன். இப்படியான சந்தர்ப்பங்களில் சில நுணுக்கங்களைக் கையாண்டு பதிலளிக்க வேண்டும். நான் எனது மகனிடம் ''உங்களது ஆடைகள் எங்கே?'' எனக் கேட்டேன். ''அலுமாரியில்'' என பதிலளித்தார். ''அவை கண்ணுக்குத் தெரிகிறதா?'' எனக் கேட்டேன். அவர் ''இல்லை'' என்றார். ''அலுமாரியில் துணிகள், ஆடைகள் இருக்கின்றன. ஆனால், கதவு மூலம் மறைக்கப்பட்டுள்ளது. அதேபோல எமது கண்கள் அல்லாஹ்வைப் பார்க்க சக்தி பெற மாட்டாது'' என தெளிவுபடுத்தினேன்.

03. அல்குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்களை முன்வைத்தல்

வாராந்தம் ஓர் அமர்வு நடத்தப்படல் வேண்டும். அதில் பெற்றோரும் பிள்ளைகளும் ஈமான் பற்றி பேச வேண்டும். அகீதா தொடர்பான ஹதீஸ்களை பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுத்தல் கட்டாயமானதாகும்.

04. ஈமானைத் தூண்டும் கதைகளைக் கூறல்

ஒரு நாத்திகனுக்கும் இமாம் ஒருவருக்குமிடையில் 'இறைவன் இருக்கிறானா? இல்லையா?' என்ற தலைப்பில் விவாதம் நடக்க ஏற்பாடாகியிருந்தது. குறிப்பிட்ட தினத்தில் உரிய நேரத்தில் அவ்விடத்திற்கு அந்த நாத்திகர் வந்து சேர்ந்து விட்டார். மக்களும் வந்து விட்டார்கள். ஆனால், அந்த இமாம் வரவில்லை. நீண்ட நேரம் கழித்து அவர் அங்கு வந்து சேர்ந்தார். தாமதத்திற்கான காரணத்தை இமாமிடம் கேட்டபோது அவர் இவ்வாறு சொன்னார்: ''நான் வரும்போது ஓர் ஆறு குறுக்கிட்டது. அதை கடக்க என்னால் முடியவில்லை. ஆற்றங்கரையில் அமர்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தபோது ஒரு மரம் சரிந்து விழுந்தது. சிறிது நேரத்தில் அது பலகையாக மாறியது. இன்னும் சில நேரம் கழித்து அப்பலகைகள் ஒரு தோணியாக மாறின. அது நீரில் மிதந்து என்னிடம் வந்தது. நான் அதில் ஏறினேன். அது மறுகரைக்கு வந்து நின்றது. இதன் காரணமாகத்தான் எனக்கு தாமதமாகியது'' என்றார். உடனே அதை மறுத்த நாத்திகன்

(53 ஆம் பக்கம் பார்க்க...)

# உம்மு ஹராம் பின்த் மில்ஹான் (ரழியல்லாஹு அன்ஹா)

# இலட்சியப் பயணத்தில் ஓர் இஸ்லாமியக் குடும்பம்



▲ பாத்திமா ஸைனப் பின்த் பவாஸ் ▲

புத்திக்கூர்மை, இறையுணர்வு, பயபக்தி, கருணை, தாராளத்தன்மை, அர்ப்பணிப்பு, வீரியம், நடுநிலைப் போக்கு ஆகிய உன்னத பண்புகளைத் தனக்குள்ளே கொண்டிருந்தார் உம்மு ஹராம் பின்த் மில்ஹான் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள்.

மிகச் சிறந்த குடும்பப் பின்னணியிலிருந்த உம்மு ஹராம் (ரழியல்லாஹு அன்ஹா) மதீனாவில் குபா என்ற சிறிய நகரத்தில் வசித்து வந்தார். நபிகளாரது ஹிஜ்ரத்திற்கு முன்பே இவர் இஸ்லாத்தை ஏற்றது மட்டுமன்றி, இஸ்லாத்தை ஏற்றதை மனிதர்களுக்கு முன்னால் பகிரங்கப்படுத்தவும் தயங்கவில்லை. அவரது இலக்காக இருந்தது இஸ்லாத்திற்காகத் தனது இன்னுயிரை அர்ப்பணிக்க வேண்டும் என்பதாகும். அதனை நோக்கியே அவரது சிந்தனையும் நகர்வும் நடவடிக்கைகளும் ஆசைகளும் தீர்மானங்களும் இருந்தன என்பதை அவருடைய சரிதையில் நாம் இலகுவாக கண்டு கொள்ள முடியும்.

உம்மு ஹராம் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் பிரபல நபித் தோழர் அனஸ் இப்னு மாலிக் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் தாயாரான உம்மு ஸுலைம் பின்த் மில்ஹான் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் சகோதரியுமாவார். உம்மு ஹராம் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களது சகோதரர்களான ஹராம் பின் மில்ஹான் மற்றும் ஸலீம் பின் மில்ஹான் (ரழியல்லாஹு அன்ஹுமா) ஆகிய இருவரும் பத்ரு, உஹுத் ஆகிய போராட்டங்களில் பங்குபற்றியுள்ளனர்.

உம்மு ஹராம் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் ஆரம்பத்தில் அம்ர் பின் கைஸ் பின் ஸைத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை மணமுடித்திருந்தார். இத்தம்பதியினருக்கு கைஸ் பின் அம்ர் பின் கைஸ் (ரழியல்லாஹு அன்ஹு) என்ற குழந்தை கிடைத்தது. இவர்கள் இருவரும் பத்ருக் களத்தில் வீரமரணம் அடைந்தனர்.

**உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அறிவு, அந்தஸ்து, சிறப்புக்கள், ஆற்றல்கள் அனைத்தையும் பெற்றிருந்த உபாதா பின் ஸாமித் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை அனுப்பத் தீர்மானித் தார்கள். பின்னர் உபாதா தன் மனைவி உம்மு ஹராம் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களை அழைத்துக் கொண்டு சென்று பலஸ்தீனில் குடிபெயர்ந்தார். மக்கள் அவரது கருத்துக்களையும் தீர்ப்புக்களையும் பெரிதும் மதித்தனர்.**

தன் முதல் கணவரின் மறைவுக்குப் பின்னர் உம்மு ஹராம் (ரழியல்லாஹு அன்ஹா) அன்ஸார்களில் முன்னணியில் நின்று இஸ்லாத்திற்காக உழைத்த போர்த் தளபதி உபாதா பின் ஸாமித் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை மணமுடித்தார். இத்திருமணத்தின் மூலம் ஓர் ஆண் குழந்தையை அல்லாஹ் அவர்களுக்கு அருளினான். அவரது பெயர் முஹம்மத் பின் உபாதா பின் ஸாமித் (ரழியல்லாஹு அன்ஹு) என்பதாகும். மஸ்ஜிதுல் அக்ஸாவிலிருந்து கஃபாவை நோக்கித் தொழுமாறு ஆணையிடும் குர்ஆன் வசனம் அருளப் பெற்றபோது கூட்டுத் தொழுகையில் ஈடுபட்டிருந்த முஹம்மத் பின் உபாதா (ரழியல்லாஹு அன்ஹு) ஒரே தொழுகையில் இரு கிப்லாக்களையும் முன்னோக்கித் தொழும் பாக்கியம் பெற்றவர்.

உபாதா இப்னு ஸாமித் (ரழியல்லாஹு அன்ஹு) நபிகளாரை சந்திப்பதற்காக முன்வந்த அன்ஸார்களின் மூன்று தூதுக் குழுக்களிலும் இடம்பெற்றிருந்தவர். அகபாவில் முதல் ஒப்பந்தத்தில் நபிகளாரிடம் அளித்த வாக்குறுதிகளை அவரே அறிவித்துள்ளார்: "நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் 'வாருங்கள்! நீங்கள் அல்லாஹ்வுக்கு எதையும் இணையாக்கக் கூடாது; திருடக் கூடாது; விபசாரம் செய்யக்

கூடாது; உங்களின் பிள்ளைகளை கொலை செய்யக் கூடாது; அவதூறு கூறக் கூடாது; நன்மையில் எனக்கு மாறு செய்யக் கூடாது என்று என்னிடம் நீங்கள் இஸ்லாமிய ஒப்பந்தம் செய்து தாருங்கள். உங்களில் யார் இந்த உடன் படிக்கையை முழுமையாக நிறைவேற்றுகிறாரோ அவருக்கு அல்லாஹ் நற்கூலி வழங்குவான்...' என்று கூறி முடித்த பின் 'நாங்கள் அதை ஏற்றுக் கொண்டோம்' என்று அன்னாரிடம் உறுதிமொழி கொடுத்தோம்.'' (அல்புகாரி)

உபாதா பின் ஸாமித் (ரழியல்லாஹு அன்ஹு) முன்மாதிரி கணவராகவும் பாசத்தைச் சொரியும் தந்தையாகவும் திகழ்ந்தார். உம்மு ஹராம் தன் முதல் கணவர் மூலம் பெற்றெடுத்த பிள்ளைக்கும் தன் சொந்தப் பிள்ளைக்கும் காட்டும் அன்பில் அவர் எந்த வேறுபாடும் கொண்டிருக்கவில்லை.

உஹுத் போருக்குப் பின் அபூபரா என்ற ஆமிர் இப்னு மாலிக் என்பவரின் வேண்டுகோளுக்கிணங்க நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் உம்மு ஹராம் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் சகோதரர் ஹராம் பின் மில்ஹான் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை எழுபது பேர் கொண்ட குழுவில் அனுப்பி வைத்தார்கள். நஜ்துவாசிகளை இஸ்லாத்தின் பக்கம் அழைக்க நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) மிகச் சிறந்த, குர்ஆனைக் கற்றுத் தேர்ந்த தோழர்களைத் தெரிவு செய்தார்கள். அவர்களுள் ஒருவர்தான் ஹராம் பின் மில்ஹான் என்பவர். இவர் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் கடிதத்தை ஆமிர் பின் துபைல் என்பவனிடம் எடுத்துச் சென்றார். அவன் அக்கடிதத்தைப் படிக்காமல், சாடை காட்ட ஒருவன் சிறு ஈட்டியால் ஹராமை பின்புறத்திலிருந்து குத்தினான். தான் குத்தப்பட்டதையும் தனது உடம்பில் இரத்தம் வருவதையும் பார்த்த ஹராம் (ரழியல்லாஹு அன்ஹு) ''அல்லாஹ் மிகப் பெரியவன்! கஃபாவின் இறைவன் மீது ஆணையாக! நான் வெற்றி பெற்று விட்டேன்'' என்று கூறினார். (ஸீரத் அந்நபவிய்யா-இப்னு கஸீர்)

உண்மையில் அவரது வீர மரணம் அங்கிருந்த ஒருவர் இஸ்லாத்தைத் தழுவக் காரணமாக அமைந்தது.


உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் பலஸ்தீனைச் சேர்ந்த மக்கள் தங்களுக்கு மார்க்க விடயங்களைக் கற்றுக் கொடுப்பதற்கும் சர்ச்சைகளின்போது தீர்ப்பு வழங்குவதற்கும் ஒருவரை அனுப்பி வைக்குமாறு கோரினர். அப்போது உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அறிவு, அந்தஸ்து, சிறப்புக்கள், ஆற்றல்கள் அனைத்தையும் பெற்றிருந்த உபாதா பின் ஸாமித் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை அனுப்பத் தீர்மானித்தார்கள். பின்னர் உபாதா தன் மனைவி உம்மு ஹராம் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களை அழைத்துக் கொண்டு சென்று பலஸ்தீனில் குடிபெயர்ந்தார். மக்கள் அவரது கருத்துக்களையும் தீர்ப்புக்களையும் பெரிதும் மதித்தனர். (அந்நிஸா ஹவ்லர் ரஸூல்- முஹம்மத் குத்ப்)

உம்மு ஹராம் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு மஹ்ரமாக இருந்துள்ளார்கள் என்பதில் அறிஞர்கள் உடன்படுகின்றனர் என்று இமாம் நவவி (ரஹிமஹுல்லாஹ்) குறிப்பிடுகின்றார். ஆனால், எவ்வாறு அந்த உறவு ஏற்பட்டது என்பதில் அறிஞர்கள் கருத்து வேறுபடுகின்றனர்.

அனஸ் இப்னு மாலிக் (ரழியல்லாஹு அன்ஹு) அறிவிக்கிறார்: நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் உம்மு ஹராம் பின்த் மில்ஹான் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் வீட்டுக்கு செல்பவராக இருந்தார்கள். அப்போதெல்லாம் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு உணவு வழங்குவது வழக்கம். உம்மு ஹராம் (ரழியல்லாஹு அன்ஹா) உபாதா பின்த் ஸாமித் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் மனைவியாக இருந்தார். இவ்வாறே ஒரு முறை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) உம்மு ஹராம் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களிடம் சென்றார்கள். அவர் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு உணவு கொடுத்து விட்டு அவர்களின் தலையில் பேன் பார்க்க தொடங்கினார். அப்படியே நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தூங்கி விட்டார்கள். பிறகு சிரித்துக் கொண்டே கண் விழித்தார்கள். உம்மு ஹராம் (ரழியல்லாஹு அன்ஹா) ''அல்லாஹ்வின் தூதரே! ஏன் சிரிக்கிறீர்கள்?'' என்று கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ''என் சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் சிலர் இறைவழியில் அறப்போர் வீரர்களாக எனக்கு கனவில் எடுத்துக் காட்டப்பட்டார்கள். அவர்கள் இந்தக் கடலின் முதுகில் கட்டில்களில் சாய்ந்து அமர்ந்திருக்கும் மன்னர்களாக அல்லது கட்டில்களில் அமர்ந்திருக்கும் மன்னர்களைப் போல் ஏறிச் செல்கிறார்கள்'' என்று பதிலளித்தார்கள். அதற்கு உம்மு ஹராம் (ரழியல்லாஹு அன்ஹா) ''அல்லாஹ்வின் தூதரே! அவர்களில் ஒருவராக என்னை ஆக்கும்படி அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள்'' என்று கூறினார். எனவே, நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவருக்காக பிரார்த்தனை செய்தார்கள். பிறகு தன் தலையை வைத்து உறங்கினார்கள். பின்னர் சிரித்தபடியே விழித்தெழுந்தார். அப்போது உம்மு ஹராம் (ரழியல்லாஹு அன்ஹா) ''அல்லாஹ்வின் தூதரே ஏன் சிரிக்கிறீர்கள்?'' என்று கேட்டார்கள். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ''என் சமுதாயத்தைச் சேர்ந்த சிலர் இறைவழியில் அறப்போர் புரிபவர்களாக எனக்கு எடுத்துக் காட்டப்பட்டனர்'' என்று முன்பு கூறியது போன்றே கூறினார். உம்மு ஹராம் (ரழியல்லாஹு அன்ஹா) ''அல்லாஹ்வின் தூதரே! அவர்களில் ஒருவராக என்னை ஆக்கும்படி அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள்'' என்று கூறினார். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ''நீர்

(54 ஆம் பக்கம் பார்க்க...)

# மரண பீதி



மலை இடிந்து
நிலை சிதறி தலைகளை தகர்க்க
தலை வெடித்து தரையில் விழும்
இரத்தக் கொப்பளங்களை
காகம் கொறிக்கிறது!

அலை தள்ளும் கடல்
நுரை தள்ளி உயிரையள்ள
உருவமெடுத்து வருகிறது
தண்ணீர்!

இரத்தங் குடிக்கும்
இராட்சத மிருகங்கள்
இரைச்சல்கள்
இதயங்கள் பயந்து
இரத்தங்கள் சுரந்து
பயங்களை பாய்ச்சி விடுகின்றன!

படமெடுக்கும் பாம்புகள்
நடுக்கமெடுக்கும் நரம்புகள்
திடுக்கிட்டு திணறுகின்றன!

நேர்மாறாய் நிகழும் நியதி
மேற்கே வந்த சூரியன்
மேனியில் உதிக்கிறது!

திடுக்கிட்டு விழிக்கிறேன்
ஸுப்ஹ் விடிந்து சூரியோதயமாகி...
பாவியாய் நான் படுக்கையில்
மறுமையை மறந்து...


▸ ஒலுவில் பிஸ்ருல் ஹாபி

# ஆதிக்க வெறி

ஆதிக்க வெறியரும் மோதிக்கும் வெறியரும்
அதிகரித்துள்ள இவ்வுலகில்
பாதிக்கப்படுவதும் சோதிக்கப்படுவதும்
பரிதாபம் முஸ்லிம்களா?

நாட்டோடு நாடாக கூட்டோடு கூடாக
நானிலம் சலிக்கும் வண்ணம்
வீட்டோடு வீடாக மூட்டிடும் தீயிலே
வேகுவதும் முஸ்லிம்களா?

சத்தமில்லாமலும் பித்துக் கொள்ளாமலும்
சாந்தமாய் வாழும்போது
மொத்தமாய் வேதனை நித்தம் கிடைப்பது
முஸ்லிம்களுக்குத்தானா?



போர்க்கொரு காரணம் யார்க்கில்லையாயினும்
பேர்க்கொன்றை உண்டுபண்ணி
மூர்க்கத்தனத்துடன் போர்க்கிலக்காக்குவது
முஸ்லிம்கள் வாழும் இடமா?

குற்றம் புரிந்திடச் சுற்றம் ஒன்றில்லையெனும்
குறுக்கு மொழிகொண்ட பேர்கள்
சற்றும் தயங்காமல் சுற்றம் அழித்து மா
சதிமானம் செய்கிறார்கள்

வல்லவர் செய்கொடுமைக் கில்லையொரு நீதி
அல்லவர் செய்திடில் அவர்க்கொரு நீதி
பொல்லாவிவ்வுலகில் அல்லலுறுவோர்க்கு
புகலிடம் இல்லையா? நீதியே இல்லையா?

ஆண்டாண்டு காலமாய் வேண்டாத ஆட்சியால்
அல்லலைக் கண்ட மக்கள்
வேண்டாம் இவ்வாட்சியெனத் தூண்டிய உணர்வுகள்
வேகமாய் உலகை அசைக்க

எச்சிலுக்கேங்குவோர் உச்சையடைந்திடில்
எமது நிலை என்னவாகும்?
கச்சிதமாய் அவர்கள் உச்சைப் பணித்து நிதம்
கழுத்தை அறுத்து வெல்வோம்

யாரோடும் கூட்டுக்கள் சேர்ந்தேனும் இவர்களின்
போராட்டம் ஒழிக்க வேண்டும்
ஊரோடிவர்களை வேரோடறுத்து நம்
உயர்வினைக் காத்து நிற்போம்

எதிரிகள் நெஞ்சிலே அதிர்வை உண்டாக்குவது
இஸ்லாத்தின் பக்குவந்தான்
சதிநிறை சண்டைகளால் விதியை அணைப்பது
சாத்தியம் ஆகிடாது


வள்ளலார் தூதினை விள்ள வந்த நாள் தொட்டு
வழக்கமே இது வென்றாலும்
எள்ளளவும் இஸ்லாத்தின் கொள்ளளவு குறையாமல்
இன்னமும் வளர்கிறது

சன்மார்க்க இஸ்லாத்தை துன்மார்க்கர் அழித்திட
சதிகள் பல செய்தபோதும்
நன் மார்க்கமாயது நான்கு திசையும் பரவி
நறுமணம் தருகின்றது

அன்பு நெஞ்சங்களே துன்பம் அகற்றுங்கள்
அல்லாஹ் நம்மோடு உள்ளான்
இன்றில்லையாயினும் என்றேனும் வெல்லுவோம்
என்றவனை நாடி நிற்போம்!

▸ கலாபூஷணம்
ஏ.ஸீ. இஸ்மாலெவ்வை, சம்மாந்துறை

## பாவமா? நியாயமா?



பத்து விரல்களை
பதியிலே ஊன்றி
தத்தித் தவழ்கையிலே
பக்கத்தில் நின்று ரசித்திட
உம்மா அவன் அருகே இல்லை
தட்டுத் தடுமாறி
தாவிப் பிடித்து
தரணியிலே நடக்கையில்
கட்டிப் பிடித்து
கனிவாய் முகர்ந்திட
உம்மா அவன் அருகே இல்லை

புத்தகப் பையை
பத்திரமாக தூக்கி
பள்ளிக்குச் செல்கையிலே
பாதை ஓரம் நின்று
பார்த்து வழியனுப்பிட
உம்மா அவன் அருகே இல்லை

பள்ளி கலைந்து
பரிதவித்து வந்தான்
பருகிட சாதம் இல்லை
சொல்லி அழுதே
சோகத்தை தீர்த்திட
உம்மா அவன் அருகே இல்லை


படி படி என்று
படிய வைத்தார்கள்
மடிந்ததை பார்க்கவில்லை
தலையிடி காய்ச்சலில்
துடியாய் துடித்தான்
உம்மா அவன் அருகே இல்லை

தன் இதயத்தோடு
தாய் இதயம் இறுக அணைத்திட்டே
தூக்க கலக்கத்தில் கண்விழித்தான்
உதய சூரியன் ஒளிக்கரம் நீட்டினான்
உம்மா அவன் அருகே இல்லை

தனிமைக் கொடுமையில்
தவித்து மடிகின்ற
மகன் செய்த பாவம் என்ன?
வளைகுடா நாட்டிலே
வாலிபம் தொலைத்திட்ட
தாய் செய்தது நியாயமா என்ன?

**இராணி பௌசியா- கல்லளை**

## மானிடனே மாறி விடு!



துன்யா என்றே
கல்பு துடிக்குது
இந்த அவலத்தைச் சொன்னால்
ஏனோ ஏற்க மறுக்குது!

செல்வம் என்றே
உள்ளம் பறக்குது
அதை எவ்வழியினின்றும்
சூறையாட
ஏனோ உள்ளம் ஏங்குது!

செல்வச் செழிப்பில்
இஸ்லாம் மறக்குது
ஹலால்- ஹராம்
பிரித்தறியும்
அறிவும் மங்கிப் போகுது!

நீதி, நேர்மை எல்லாம்
உலகில் மறையுது
அதை தேடச் சொன்னால்- ஏனோ
கறைபடிந்த உள்ளம்
மறுக்குது!

நரக நெருப்பை
நினைத்தால்
கால்கள் நடுங்குது
அடுத்த கணமே
அதுவும் மறந்து போகுது!

மானிடனே
நீ மாறி விடு!

**பஹ்மா பின்த் ஜவ்ஸி**
**ஹாதியா இஸ்லாமிய நிறுவனம்**



# ஆன்மாவை அச்சுறுத்தும் அலட்சியம்!

''அல்லாஹ் அவனுடைய அடியார்களுக்கு ஒவ்வொரு கட்டளையையும் இடும்போது இப்லீஸ் குறுக்கிட்டு இரண்டில் ஏதாவது ஒன்றை அடைய முனைகிறான். அதில் எதை அவன் அடைகிறான் என்பதை அவன் பொருட்படுத்துவதில்லை. ஒன்று அந்தக் கட்டளையை அளவு மீறிச் செய்வது. மற்றது அந்தக் கட்டளையை அரைகுறையாக நிறைவேற்றுவது.''

இஸட்.ஏ.எம். பவாஸ்-BACC (Hons)
சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகம்,
மலேசியா

''மனிதர்களுக்கு அவர்களின் விசாரணை நெருங்கி விட்டது. எனினும், அவர்கள் புறக்கணித்தோராக அலட்சியத்தில் இருக்கின்றனர்'' *(2: 1)* என்று ஸூரதுல் அன்பியா ஆரம்பிக்கிறது.

அன்றைய மக்கா குறைஷியர் அல்லாஹ்வின் தூதரைக் கண்டு கொள்ளாமலும் இறைச் செய்திகளை காதில் வாங்காமலும் அலட்சியமாக இருந்தது போலவே இன்றைய முஸ்லிம்களும் அனுதினமும் சத்திய மார்க்கத்தின் அறிவுரைகள் கிடைத்தபோதும் அலட்சியமாக இருக்கிறார்கள்.

ஸைத் இப்னு அஸ்லம் (ரழியல்லாஹு அன்ஹு) அறிவிக்கிறார்: ஆமிர் இப்னு ரபீஆ (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் அரபியர் ஒருவர் விருந்தாளியாக வந்து தங்கினார். அவருக்கு ஆமிர் (ரழியல்லாஹு அன்ஹு) நல்ல முறையில் விருந்தோம்பல் செய்தார். அவர் குறித்து நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் தெரிவித்தார். அதைத் தொடர்ந்து அம்மனிதர் ஆமிர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் வந்து ''நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடமிருந்து அரபு நாட்டிலுள்ள ஓர் ஓடைப் பகுதியை வருவாய் மானியமாகப் பெற்றிருக்கிறேன். அதன் ஒரு பகுதியை நீரும் உமக்குப் பின் வரும் உம்முடைய சந்ததியினரும் பயன் பெறும் வகையில் உமக்குப் பிரித்துக் கொடுக்க நான் விரும்புகிறேன்'' என்று கூறினார்.

அவரிடம் ஆமிர் (ரழியல்லாஹு அன்ஹு) ''நீர் தர விரும்பும் பங்கு எனக்குத் தேவையில்லை. ஏனெனில், உலக மோகத்திலிருந்து எங்களது கவனத்தைத் திருப்பக் கூடிய ஓர் அத்தியாயம் இன்று அருளப் பெற்றுள்ளது'' என்று கூறி விட்டு ''மனிதர்களுக்கு அவர்களின் விசாரணை நெருங்கி விட்டது. எனினும், அவர்கள் புறக்கணித்தோராக அலட்சியத்தில் இருக்கின்றனர்'' *(21: 1)* என்ற வசனத்தை ஓதிக் காட்டினார்கள். (அல்ஹில்யதுல் அவ்லியா வ தபகாதுல் அஸ்ஃபியா)

அதே ஸூராவின் முடிவுரையிலும் அலட்சியக்காரர்களுக்கு ஓர் அதிரடி இருக்கிறது. ''உண்மையான அந்த வாக்குறுதி நெருங்கி விட்டது. அப்போது நிராகரித்தோரின் பார்வைகள் நிலைகுத்தி நின்று விடும். 'எமக்கு ஏற்பட்ட கேடே! நிச்சயமாக நாம் இது குறித்து அலட்சியத்திலேயே இருந்து விட்டோம். இல்லை, நாம் அநியாயக்காரர்களாகவே இருந்தோம்' என்று கூறுவார்கள்.'' *(21:97)*

அவர்களது அலட்சியத்தையும் அதன் விளைவையும் அவர்கள் நினைவுகூருவார்கள். அலட்சிய நிலைப்பாடு அநியாயக்காரர்களின் பட்டியலுக்கு அவர்களை இட்டுச்

சென்றது. அவர்கள் தமக்குத் தாமே அநீதி இழைத்துக் கொண்டதற்கு ஒப்புதல் வாக்குமூலம் அளிப்பார்கள். ஆனால், அது அவர்களுக்கு எவ்வித பலனையும் அளிக்காத நேரமாகும்.

## அலட்சியத்தின் அபாயம்

'غَفْلَة' என்ற சொல் அலட்சிய மனப்பாங்கு, அசட்டை, பொடுபோக்கு முதலான பொருள்களைத் தந்தாலும் அவற்றுடன் சுருங்கி நிற்பதில்லை. ஒருவர் ஒரு நற்காரியத்தை விடுவதையும் ஒரு பாவத்தைப் புரிவதையும் அறியாமல் இருப்பதும் அல்லது அதன் பாரதூரமான விளைவுகள் பற்றி அலட்டிக் கொள்ளாமல் இருப்பதும் அலட்சியப் போக்காகும். ஒரு நற்கருமத்தை செய்யும்போது அதற்கு உயிரோட்டம் கொடுக்காமல் இருத்தல் உள்ளத்தின் ஈடுபாடு இல்லாதிருத்தல், இன்பம் காணாமல் அது சம்பிரதாயமாக அமைதல், விதிகளைப் பேணாது ஏனோ தானோ என்று புரிதல், அதனை சுமையாகவும் சிரமமானதாகவும் கருதுதல், நற்கூலியிலும் இறை உவப்பிலும் ஆதரவு குன்றுதல், கடமைக்காக மட்டும் செய்து முடித்தல் முதலான அனைத்தும் அலட்சியத்தின் அடையாளங்களாகும்.

(غَافِل) என்றால் பொடுபோக்கானவர், அலட்சிய மனப்பான்மையுடையவர் என்று பொருள். இலகுவாக ஏமாற்றப்படக் கூடியவர் 'مُغَفَّل' என்று அழைக்கப்படுகிறார்.

மனிதர்களுக்குப் போன்று கால்நடைகளுக்கு அறிவு கொடுக்கப்பட்டிருக்கா விட்டாலும் அவை அலட்சியமாக இருப்பதில்லை. கால்நடைகளும் விலங்கினங்களும் பறவைகளும் எப்போதும் விழிப்புணர்வுடனேயே இருக்கின்றன. ஒரு முயல் எதையாவது சாப்பிடும்போது தன்னை நோக்கி எந்த ஆபத்தும் வந்துவிடக் கூடாது என்பதற்காக அதன் காதுகளை வெவ்வேறு திசைகளில் திருப்பி கவனமாக இருக்கிறது. ஓட்டைக்குள்ளிருக்கும் ஆமை, புற்றுக்குள்ளிருக்கும் பாம்பு, கூட்டுக்குள்ளிருக்கும் குருவி போன்ற உயிரினங்கள் தலையை வெளியே செலுத்தி சூழவுள்ள அபாயங்கள் குறித்து கரிசனையுடன் நடந்து கொள்கின்றன. கடலிலுள்ள மீனினங்கள் அனைத்தும் ஒரே நேரத்தில் உடனடியாக திசையை மாற்றி நகர்ந்து வேறு உயிரினங்களுக்கு இரையாகாமல் கவனமாக நீந்திச் செல்கின்றன. பாலைவனத்திலுள்ள ஒரு வகைப் பல்லி அதன் பொந்திலிருந்து வெளியேறுவதற்கு இரண்டு வாயில்களை அமைத்துக் கொள்கின்றது. ஒரு வாயிலினூடாக ஆபத்து நேர்ந்தால் அடுத்த வாயிலால் அது வெளியேறித் தப்பி விடும். சிலபோது கண்களுக்குப் புலப்படாத எறும்புகள் கூட அவற்றின் பாதுகாப்பு விடயத்தில் கவனமற்றிருப்பதில்லை.

''ஓர் எறும்பு 'எறும்புகளே! ஸுலைமானும் அவரது படையினரும் தாம் உணராதவர்களாக உங்களை மிதித்து விடாதிருப்பதற்காக உங்கள் வசிப்பிடங்களுக்குள் நீங்கள் நுழைந்து கொள்ளுங்கள்' என்று கூறியது.'' (27: 18)

உயிரினங்கள் அனைத்தும் அவற்றின் எதிரிகளைப் பற்றி நன்கறிந்து வைத்துள்ளன. அவற்றின் உயிருக்கு அச்சுறுத்தலாக வரும் எந்தவொரு சூழ்நிலையிலும் அவை அலட்சியமாக இருப்பதில்லை. ஆனால், அறிவு கொடுக்கப்பட்டுள்ள மனிதர்கள் தங்களது அலட்சியப் போக்கினால் உலக வாழ்வை மட்டுமன்றி நிரந்தர மறுமை வாழ்வின் சுபிட்சத்தையும் இழக்கப் போகிறார்கள்.

''அவர்கள் எமது அத்தாட்சிகளைப் பொய்ப்பித்து அவற்றை அலட்சியம் செய்பவர்களாக இருந்ததினால் நாம் அவர்களை மூழ்கடித்தோம்.'' (7: 136)

இப்னு மஸ்ஊத் (ரழியல்லாஹு அன்ஹு) கூறுகிறார்: ''இந்த உலகத்திற்காகவும் மறுமைக்காகவும் முயன்று உழைக்காமல் உட்கார்ந்திருக்கும் மனிதனை நான் வெறுக்கிறேன்.'' (அல் ஹில்யதுல் அவ்லியா வதபகாதுல் அஸ்ஃபியா)

இஸ்லாம் எப்போதும் நடுநிலையை வலியுறுத்தும் மார்க்கமாகும். நடுநிலை என்பது கடும்போக்கு, பொடுபோக்கு ஆகிய இரண்டிற்கும் இடையிலுள்ள நிலைப்பாடாகும். அலட்சிய மனப்பாங்குடையவர் நடுநிலையை இழந்து ஷைத்தானின் சதிவலையில் சிக்கிக் கொள்ள வாய்ப்பிருக்கிறது.

மக்லாத் இப்னு அல்ஹுஸைன் (ரஹிமஹுல்லாஹ்) கூறுகிறார்: ''அல்லாஹ் அவனுடைய அடியார்களுக்கு ஒவ்வொரு கட்டளையையும் இடும்போது இப்லீஸ் குறுக்கிட்டு இரண்டில் ஏதாவது ஒன்றை அடைய முனைகிறான். அதில் எதை அவன் அடைகிறான் என்பதை அவன் பொருட்படுத்துவதில்லை. ஒன்று அந்தக் கட்டளையை அளவு மீறிச் செய்வது. மற்றது அந்தக் கட்டளையை அரைகுறையாக நிறைவேற்றுவது.'' (அல்ஹில்யதுல் அவ்லியா வ தபகாதுல் அஸ்ஃபியா)

## புலன்கள் இருந்தும் புரிந்து கொள்ளாதவர்கள்

''ஜின்களிலும் மனிதர்களிலும் அதிகமானோரை நரகத்திற்கென்றே நாம் படைத்துள்ளோம். அவர்களுக்கு உள்ளங்கள் இருக்கின்றன; அவற்றின் மூலம் அவர்கள் விளங்கிக் கொள்ள மாட்டார்கள். இன்னும் அவர்களுக்குக் கண்கள் இருக்கின்றன; அவற்றின் மூலம் அவர்கள் பார்க்க மாட்டார்கள். இன்னும் அவர்களுக்குக் காதுகள் இருக்கின்றன; அவற்றின் மூலம் அவர்கள் செவியுற மாட்டார்கள். அவர்கள் கால்நடைகளைப் போன்றவர்கள். இல்லை, அவற்றை விடவும் மிக வழிகெட்டவர்கள். அவர்கள்தான் அலட்சியக்காரர்கள்.'' (7: 179)

அல்லாஹ் ஜின்களையும் மனிதர்களையும் படைத்ததன் நோக்கமே நரகத்தில் தூக்கி எறிவதற்காக என்ற பொரு ளையோ அல்லது அவர்களைக் கொண்டு அல்லாஹ் நரகத்தை நிரப்புவதாகத் தீர்மானித்து விட்டான் என்ற கருத்தையோ இந்த வசனம் தர மாட்டாது. மாறாக, உள்ளம், சிந்தனாசக்தி, கண்கள், காதுகள் ஆகியவற்றை மனிதன் கொடுக்கப் பெற்றி ருந்தும் அவற்றை அல்லாஹ் எதிர்பார்க்கின்ற விதத்தில் அவன் பயன்படுத்துவதில்லை; நேர்வழி பெறுவதற்கும் சிறந்த முறையில் கருமமாற்றுவதற்கும் அல்லாஹ் படைத் துள்ள அங்கங்கள் எதன் மூலமும் அவன் பயன் பெறுவ தில்லை. எனவே, அந்த மனிதன் தன்னைத் தானே நரகத்திற்கு இட்டுச் செல்கிறான். குர்ஆனில் வேறு இடங்களில் அல்லாஹ் கூறுகிறான்:

**"அவர்களுக்கு நாம் செவிப்புலனையும் பார்வைகளை யும் உள்ளங்களையும் ஏற்படுத்தியுள்ளோம். அவர்க ளின் செவிப்புலனோ பார்வைகளோ உள்ளங்களோ அவர்களுக்கு எந்தப் பயனையும் தரவில்லை." (46: 26)**

**"அவர்கள் செவிடர்கள், ஊமையர்கள், குருடர் கள். எனவே, அவர்கள் நேர்வழிக்குத் திரும்ப மாட் டார்கள்." (2: 18)**

அவர்கள் உண்மையில் செவிடர்களோ ஊமையர்களோ குருடர்களோ அல்லர். மாறாக, மார்க்க விஷயத்தில்தான் செவிடர்கள், ஊமையர்கள், குருடர்கள் ஆவார்கள். இதனால் தான் அல்லாஹ் பிறிதொரு ஸூராவில் கூறுகிறான்:

**"அவர்களிடம் ஏதேனும் நன்மையை அல்லாஹ் அறிந்திருந்தால் அவர்களைக் கேட்க வைத்திருப்பான். அப்படியே அவர்களை அவன் கேட்க வைத்தாலும் அவர்கள் அதைப் புறக்கணித்து அலட்சியப்படுத்தி விடுகிறார்கள்." (8: 23)**

அவர்களை அல்லாஹ் செவியுறச் செய்து விளக்கத்தைக் கொடுத்திருந்தாலும் அவர்கள் விளங்கிய பிறகும் வேண் டுமென்றே பிடிவாதமாக அலட்சியம் செய்து அதிலிருந்து நிச்சயமாக பின்வாங்கி இருப்பார்கள்.

## இஸ்லாமிய இயக்க ஊழியர்களுக்கிடையில் அலட்சிய மனப்பாங்கு

இஸ்லாமியப் பணியில் அதி உன்னத வழிபாடாகக் கருதப்படுகின்ற அறப் போராட்டத்தில் கூட போராளிகள் அலட்சியமாக இருக்கக் கூடாது என்று குர்ஆன் வலியுறுத்து கிறது. **"நீங்கள் உங்கள் ஆயுதங்களிலும் உங்கள் பொருட்களிலும் அலட்சியமாக இருந்தால் உங்களை ஒரே தடவையில் தாக்கிவிட நிராகரிப்பாளர்கள் விரும் புகின்றனர்." (4: 102)**

இஸ்லாமியப் பணியில் ஈடுபடுகின்ற ஊழியர்கள் சுமக்கின்ற ஒவ்வொரு பொறுப்பையும் சிரமேற்கொண்டு நிறை வேற்ற வேண்டும். இரவோ- பகலோ, மழையோ- வெயிலோ, குளிரோ- வெப்பமோ தாங்கள் சுமந்த பொறுப்புக்களை நிறைவேற்றுவதை விட்டும் அவர்களைப் பின்வாங்கச் செய்யக் கூடாது.

பல அங்கத்தவர்கள் ஒன்றிணைந்து ஒரு குழுவாக நீண்ட காலம் பணியாற்றும்போது ஒவ்வொரு தனி நபரினதும் பங்களிப்புக்கள் வேறுபட்டு அமைகின்றன. ஆற்றல்கள், திறமைகள், பொருளாதார நிலை, ஓய்வு நேரம், புரியும் தொழில் முதலானவை அதற்குக் காரணமாக அமையலாம். எனவே, ஆரவாரமாக முனைப்போடு உழைத்துப் பாடுபடும் ஓர் அங்கத்தவரிடம் கூட அலட்சியம் ஊடுருவ வாய்ப்பிருக் கிறது. "நான் இந்தத் துறைக்கு நிறையப் பங்காற்றியுள்ளேன்; மற்றவர்களை விட அதிக நேரத்தை செலவு செய்திருக்கி றேன்; ஒவ்வோர் அமர்வுக்கும் நான்தான் முதலாவதாக சமுகமளிக்கிறேன்; ஒவ்வொரு நிகழ்ச்சியையும் நான்தான் ஒருங்கமைக்கிறேன்" என்றெல்லாம் சிந்திக்கின்ற ஒருவர் தனது உற்சாகத்தை இழக்க முடியும். அவர் அடுத்தவர்க ளின் பங்களிப்பும் அதிகரிக்க வேண்டும் என்பதற்காகவோ அல்லது அவர்களை உற்சாகப்படுத்துவதற்காகவோ அல்லது தான் இதுவரை செய்தது போதும் என்று கருதியோ சிறிது சிறிதாக பின்வாங்க முடியும். இந்த மனோபாவம் அவரை அலட்சிய நிலைக்கு இட்டுச் செல்லக் கூடியது.

அன்ஸார்கள் என்று பெயர் பெற்ற நபித் தோழர்களிடத் திலேயே இத்தகைய மனோபாவம் தலைதூக்குவதை அல்லாஹ் அங்கீகரிக்கவில்லை.

**"அல்லாஹ்வின் வழியில் செலவு செய்யுங்கள். உங்கள் கரங்களால் அழிவைத் தேடிக் கொள்ளாதீர்கள்" (2: 195)** என்ற வசனம் இறை வழியில் செலவு செய்வதைக் கைவிடுவது குறித்து அருளப் பெற்றது என்று ஹுதைபா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறுகிறார்கள். (அல்புகாரி)

அபூ அய்யூப் அல்அன்ஸாரி (ரழியல்லாஹு அன்ஹு) அறிவிக்கிறார்: "நாங்கள் பைஸாந்தியாவில் இருந்தோம். ரோமர்களின் பெரும் படை வெளியேறி வந்தது. முஸ்லிம் களில் ஒருவர் ரோமர்களின் அணியில் திடீரெனப் புகுந்து தாக்குதல் தொடுத்தார். பின்னர் திரும்பி வந்தார். அவரைப் பார்த்து மற்றவர்கள் "ஸுப்ஹானல்லாஹ்! இவர் தமது கரத்தால் அழிவைத் தேடிக் கொண்டார்" என்று அவர் தனியாகச் சென்று தாக்குதல் தொடுத்தது பற்றிக் குரலெழுப்பினர். அப்போது நான் கூறினேன்: "மக்களே! இந்த (2: 195) வசனத்திற்கு நீங் கள் இப்படி விளக்கம் அறிந்து கொண்டுள்ளீர்கள். ஆனால், இந்த வசனம் அன்ஸார்களான எங்கள் தொடர்பாகவே அருளப் பெற்றது. அல்லாஹ் தனது மார்க்கத்தைப் பலப்படுத்தியுடன் இம்மார்க்கத்திற்கு உதவி செய்வோரின் எண்ணிக்கையும் அதிகமானபோது நாங்கள் 'நமது செல்வங்கள் வீணாகி

விட்டன; நாம் சற்று நிதானித்து இம்மார்க்கத்திற்காக செலவிட்டு நமது செல்வத்தை அழிவிலிருந்து காத்திருக்க வேண்டும்' என எங்களிடையே இரகசியமாகப் பேசிக் கொண்டோம். அப்போதுதான் அல்லாஹ் இவ்வசனத்தை அருளினான்.'' (அல்புகாரி)

''மேற்கூறிய வசனத்திலுள்ள (التَّهْلُكَةِ) (அழிவு) என்பது இறைவழியில் செல்வத்தை செலவு செய்யாமல் மீதப்படுத்தியிருக்க வேண்டும் என நாங்கள் எண்ணியதுதான்'' என்று அபூ அய்யூப் (ரழியல்லாஹு அன்ஹு) கூறுகிறார்.

(ஃபத்ஹுல் பாரி)

மற்றோர் அறிவிப்பில் அபூ அய்யூப் (ரழியல்லாஹு அன்ஹு) கூறினார்: ''அல்லாஹ் தனது மார்க்கத்தை வலுப்படுத்தினான். அதன் ஆதரவாளர்கள் பெருகினர். அப்போது 'இனி நமது செல்வங்களில் நாம் கவனம் செலுத்தி நிதானத்துடன் செலவு செய்து அவற்றை மேம்படுத்த வேண்டியதுதான்' என எங்களிடையே பேசிக் கொண்டோம். அப்போதுதான் அல்லாஹ் இந்த வசனத்தை அருளினான்.''

(அபூதாவூத், அத்திர்மிதி)

## அலட்சியத்தைப் போக்க என்ன வழி?

### 01. இறையுணர்வும் இறைநினைவும்:

'இந்த உலகத்தில் அல்லாஹ் படைத்திருப்பவை அனைத்தும் எனக்காக! ஆனால், நானோ அல்லாஹ்வுக்காக' என்ற உணர்வு எப்போதும் நாடி நரம்புகளில் இழையோட வேண்டும். அவன் என் மீது சுமத்தியுள்ள பொறுப்புக்களை நான் நிறைவேற்றுவதில் குறைவு செய்தால் அவனது கோபம் என்னை சூழ்ந்து கொள்ளும் என்ற அச்சம் ஒரு புறமும் அவனுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதில்தான் அவனுடைய அன்பும் அருளும் கிட்டுகிறது என்ற ஆதரவு இன்னொரு புறமும் இருக்க வேண்டும். அவனுடைய மகத்துவம் எப்போதும் உள்ளத்தில் இருக்க வேண்டும்.

**''உமதிறைவனை உம் மனதில் காலையிலும் மாலையிலும் பணிவாகவும் மெதுவாகவும் உயர்ந்த சப்தமின்றியும் நினைவு கூருவீராக. அலட்சியம் செய்வோரில் நீரும் ஆகிவிட வேண்டாம்.''** (7: 205)

**''எம்மை நினைவுகூர்வதை விட்டும் எவனது உள்ளத்தில் நாம் மறக்கடிக்கச் செய்து அலட்சியமுள்ளதாக ஆக்கி அதன் காரணமாக தன் மனோ இச்சையைப் பின்பற்றினானோ அவனை நீர் பின்பற்றாதீர்.''** (18: 28)

### 02. மரண பயம்

'ஆன்மாவைக் கைப்பற்றும் வானவர் இரவிலோ பகலிலோ எந்நேரமும் என் தவணை முடியும் தறுவாயில் என்னிடம் வர முடியும்' என்ற அச்சமும் 'நான் அலட்சியமாக இருக்கும் நிலையில் என் உயிர் பிரிந்தால் எனக்கு என்னவாகும்?' என்ற விழிப்புணர்வும் ஒருவருக்குள் இருக்க வேண்டும்.

**''நிச்சயமாக நீ இது குறித்து அலட்சியத்தில் இருந்தாய். எனவே, உன்னை விட்டும் உனது திரையை நாம் நீக்கி விட்டோம். இன்றைய தினம் உனது பார்வை கூர்மையாகவே இருக்கும் என்று கூறப்படும்.''** (50: 22)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒரு மனிதருக்கு இவ்வாறு அறிவுரை பகர்ந்தார்கள்:

''நீர் ஐந்து விஷயங்களை ஐந்து விஷயங்களுக்கு முன் அரிய வாய்ப்புக்களாகக் கருதுவீராக! நீர் முதுமையடைவதற்கு முன்னால் உமது இளமையையும் நீர் நோயுறுவதற்கு முன்னால் உமது ஆரோக்கியத்தையும் நீர் ஏழ்மையடைவதற்கு முன்னால் உமது செல்வ நிலையையும் நீர் பணிகளில் ஈடுபடுவதற்கு முன்னால் உமக்குக் கிடைக்கும் ஓய்வையும் நீர் மரணமடைவதற்கு முன்னால் உமது வாழ்நாளையும் பயன்படுத்திக் கொள்வீராக.'' (மிஷ்காத்)

### 03. மறுமை சிந்தனை

'நான் மரணித்த பிறகு மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பப்படுவேன்; இறைவனின் நீதிமன்றத்தில் அவனுக்கு முன்னால் நிற்க வேண்டும்; எனது செயல்களுக்கு பதில் சொல்லியாக வேண்டும்; சுவர்க்கம் அல்லது நரகம் எனக்கு சன்மானமாக வழங்கப்பட இருக்கிறது' என்ற ஆழமான நம்பிக்கை அடிக்கடி ஒருவருக்குள் புதுப்பிக்கப்பட வேண்டும்.


**''அவர்கள் நம்பிக்கை கொள்ளாமலும் அலட்சியத்திலும் இருக்கும் நிலையில் காரியம் முடிக்கப்படும்போது கைசேதத்துக்குரிய நாள் குறித்து நபியே! நீர் அவர்களை எச்சரிப்பீராக.''** (19: 39)

### 04. அலட்சியத்தை போக்குமாறு அல்லாஹ்விடம் கரமேந்தல்

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பின்வருமாறு பிரார்த்திப்பார்கள் என்று அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்: ''அல்லாஹும்ம இன்னீ அஊதுபிக மினல் அஜ்ஸி வல் கஸலி வல்ஜுப்னி வல்ஹரமி வல்புக்ரி வஅஊதுபிக மின் அதாபில் கப்ரி வஅஊதுபிக மின் ஃபித்னதில் மஹ்யா வல் மமாதி' (இறைவா! பலவீனம், சோம்பேறித்தனம், கோழைத்தனம், முதுமை, கஞ்சத்தனம் ஆகியவற்றை விட்டும் உன்னிடம் பாதுபாப்புக் கோருகிறேன். மேலும் கப்ருடைய வேதனையை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். இன்னும் வாழ்வில் மற்றும் மரணத்தின் குழப்பத்தை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்) (ஸஹீஹு முஸ்லிம்)

(54 ஆம் பக்கம் பார்க்க...)

19



சென்னையிலிருந்து
மௌலவி நூஹ் மஹ்ழரி

# பிரார்த்தனையும் பண்பாட்டின் ஓர் அங்கமே!

பிரார்த்தனை என்று சொன்னால்... துஆவின் மகத்துவம் குறித்தோ அதன் சிறப்புக்கள் குறித்தோ அல்லது பிரார்த்தனையின் நிபந்தனைகள் மற்றும் ஒழுக்கங்கள் குறித்தோ இங்கே நாம் கூறப் போவதில்லை. மாறாக, உள்ளங்களை வெல்வதற்கு பிரார்த்தனையை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது குறித்து மட்டுமே பார்க்க இருக்கின்றோம்.

பொதுவாகவே... தங்களுக்காக அடுத்தவர் துஆ கேட்பதை மக்கள் விரும்புவார்கள். ஒருவர் நம்மிடம் அவருடைய பிரச்சினையைச் சொல்கிறார் என்று வைத்துக் கொள்வோம். உடனே நாம், ''அல்லாஹ் இருக்கிறான்...'' என்று ஒற்றை வார்த்தையில் சொன்னால் நன்றாக இருக்குமா? அதனை அவர் விரும்பவும் மாட்டார். பட்டும் படாமலும் தப்பிச் செல்லும் ஒரு கைங்கரியம்தான் இந்த ''அல்லாஹ் இருக்கிறான்'' என்ற வார்த்தை.

மாறாக, ''அல்லாஹ் உதவி செய்வான்.. அல்லாஹ் இலேசாக்குவான்... ஒன்றும் கவலைப்படாதீர்கள். உங்களுக்காக நான் கண்டிப்பாக துஆ செய்கிறேன்'' என்று கூறிப் பாருங்கள். இயலும் என்றால் ''யா அல்லாஹ்! இவருடைய பிரச்சினையை தீர்த்து வைப்பாயாக...! இவருடைய தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பயாக!'' என்று அவர் காதுபடவே துஆ செய்யுங்கள். அது அவரது மனதுக்கு இதமாக அமையும். ஒருபோதும் அதனை அவர் மறக்கவும் மாட்டார்.

பெரியார்தாசன் என்று அறியப்பட்ட டாக்டர் அப்துல்லாஹ் அவர்கள் குறித்து அறிந்திருப்பீர்கள். அவர் இஸ்லாத்திற்கு வந்தமைக்கு பல காரணங்கள் இருந்தாலும்... அவரே கூறிய காரணம் என்ன தெரியுமா...? அவருடைய நெருங்கிய பள்ளித்தோழன் ஒரு முஸ்லிம். தற்போது அவர் அரேபியாவில் பணி செய்து கொண்டிருக்கிறார். ஒருமுறை பெரியார்தாசன் அவர்கள் ஒரு நிகழ்ச்சிக்காக அரபு நாட்டுக்குச் சென்றபோது தனது பழைய நண்பரை அங்கு சந்திக்கின்றார்.

நிகழ்ச்சி முடிந்து விடைபெறும்போது அந்த நண்பர் பெரியார் தாசனைக் கட்டிப்பிடித்தவாறு அவருடைய காதுகளுக்கு அருகே அவர் கேட்கும் வண்ணம், ''எனது பால்ய நண்பன் இறைமறுப்பாளனாக மரணிப்பதை நான் விரும்ப மாட்டேன். இறைவா...! இவருக்கு நேர்வழியைக் காட்டு வாயாக!'' என்று பிரார்த்தனை செய்தார்.

டாக்டர் அப்துல்லாஹ் குறிப்பிடுகிறார்: ''என்னுடைய நண்பனின் பிரார்த்தனை என்னுடைய காதுகளில் தொடர்ந்து ஒலித்துக் கொண்டே இருந்தது. என்னை அது என்னவோ செய்தது. இதோ இப்போது உங்களுக்கு முன் முஸ்லிமாக நான் நிற்பதற்கு அந்தப் பிரார்த்தனையும் ஒரு காரணமே.''

ஒரு பிரார்த்தனை ஒருவருடைய வாழ்வையே மாற்றியதுடன் மறுமை வெற்றிக்கான காரணியாகவும் இருந்துள்ளது என்றால் பிரார்த்தனை மூலம் உள்ளங்களை வெற்றி கொள்ளும் மந்திரத்தை நாம் மறக்கலாமா...?

இறைதூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தோழர்களுடன் அமர்ந்திருக்கும் சபையில் அனைவருக்கும் முன்பாக ஒருவர் வந்து, ''அல்லாஹ்வின் தூதரே! எனக்கு

விபசாரத்திற்கு அனுமதி தாருங்கள்'' என்று கேட்கிறார்.

மிகத் தெளிவாக இதனை அவர் கேட்கிறார். அண்ணலாரின் காதுகளுக்கு அருகே வந்து ரகசியமாகவோ அல்லது பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மட்டும் அமர்ந்து இருக்கும்போதோ அல்ல. மாறாக, அனைவரும் இருக்கும் சபையில் மிகத் தெளிவாகவும் பகிரங்கமாகவும் கேட்கிறார்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அந்த இளைஞரை அழைத்து அவருக்கு உபதேசம் செய்கின்றார்கள். ''உனது தாய் விபசாரம் செய்வது உனக்கு விருப்பமா...? சகோதரி...? தாயின் சகோதரி...?'' என்று தொடர்ந்து கேட்கின்றார்கள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்).

செய்த தவறை உணரத் துவங்குகிறார் அந்த இளம் நபித்தோழர். இறுதியில் பணிவுடன், ''அல்லாஹ்வின் தூதரே! எனது இதயம் தூய்மை பெற இறைவனிடன் எனக்காக துஆ செய்யுங்கள்'' என்று கேட்கிறார்.

அவரை அழைத்து தன் அருகில் அமர வைத்து அவரது நெஞ்சத்தில் கை வைத்து நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இவ்வாறு பிரார்த்தனை செய்தார்கள்: ''இறைவா..! இவரின் உள்ளத்தை தூய்மைப்படுத்துவாயாக! இவரின் பாவங்களை மன்னிப்பாயாக! இறைவா..! இவரின் கற்பை பாதுகாப்பாயாக!''

அந்த இளைஞர் இவ்வாறு கூறியவராக அந்த சபையில் இருந்து எழுந்து சென்றார்: ''இந்தச் சபையில் நுழையும்போது விபசாரமே நான் அதிகம் விரும்பும் ஒரு செயலாக இருந்தது. ஆனால், இப்போது நான் அதிகம் வெறுக்கும் விடயமாக அந்த விபசாரமே மாறி விட்டது.'' (அஹ்மத், தபரானி)

மக்காவின் ஆரம்ப நாட்கள். மொத்த முஸ்லிம்களே 38 நபர்கள்தான். அபூபக்கர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் வந்து, ''அல்லாஹ்வின் தூதரே! நாம் பகிரங்கமாக மக்களுக்கு மத்தியில் சென்று இறைச் செய்தியை எடுத்துக் கூறலாமே'' என்று சொன்னார். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களோ, ''அபூபக்ரே! நாம் எண்ணிக்கையில் மிகவும் குறைவாக இருக்கின்றோமே'' என்று கூறினார்கள். ஆனாலும், அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கேட்கவில்லை. நபிகளாரை அழைத்துக் கொண்டு கஃபாவிற்கு அருகே சென்று அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களே இஸ்லாத்தின் செய்தியை மக்களுக்கு எடுத்துச் சொன்னார்கள்.

கோபம் கொண்ட குறைஷிகள் அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை மூர்க்கத்தனமாகத் தாக்கத் துவங்கினர். குறிப்பாக, அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை உத்பா பின் ரபீஆ என்பவன் மிகக் கொடூரமாகத் தாக்கினான். அவனது காலணிகளால் அபூபக்ரின் முகத்தில் கடுமையாக உதைத்தான். அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களுடைய முகத்தில் மூக்கு எது? வாய் எது? என்று தெரியாத அளவுக்கு காயமும் இரத்தமும். காயத்தின் காரணத்தால் அங்கேயே மயக்கமுற்றார்கள் அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள். மயக்கமுற்ற அபூபக்ரை இறந்து விட்டார் என்று கருதி ஒரு போர்வையால் சுற்றி அவருடைய வீட்டுக்குள் வீசிச் சென்றனர். ''உயிரோடு இருந்தால் தண்ணீர் கொடுங்கள்'' என்று கிண்டல் வேறு.

அருகில் அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் தாயார் அழுத வண்ணம் நின்று கொண்டு இருக்கின்றார். அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கண் விழித்ததும் கேட்ட முதல் கேள்வி: ''அல்லாஹ்வின் தூதர் எங்கே..? அவர்களுக்கு என்னவாயிற்று?'' என்பதுதான். இறைதூதருக்கு ஒன்றும் சம்பவிக்கவில்லை.. நலமாக உள்ளார்.. என்ற செய்தியை அறிந்து.. அந்த நிலையிலும் தாயின் கைத்தாங்கலுடன் பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைப் பார்க்கச் செல்கின்றார்.

நபிகளாரைக் காண்கிறார். பசி ஒரு பக்கம்.. தாகம் ஒரு பக்கம்.. வலி மறுபக்கம். ஆயினும், அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களுடைய குறிக்கோள் எல்லாம் தமது தாயை எப்படியாவது இஸ்லாத்தில் கொண்டு வந்துவிட வேண்டும் என்பதாகவே இருந்தது. கூறினார்கள்: ''அல்லாஹ்வின் தூதரே! இதோ எனது தாய். இவரை இஸ்லாத்தின்பால் அழையுங்கள். இவர்களுக்காக துஆ செய்யுங்கள்.''

அந்த இடத்திலேயே நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அந்த அம்மையாருக்காக துஆ செய்தார்கள். அவரும் இஸ்லாத்தை ஏற்றார். (இப்னு ஹிஷாம்)

அபூஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் தாயாருக்காக அவருக்கு அருகில் வைத்தே நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கேட்ட பிரார்த்தனையை வரலாறு பதிவு செய்துவைத்துள்ளது. (முஸ்லிம்)

துஃபைல் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் தம்முடைய மக்களுக்காக துஆ செய்யுமாறு பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் கூறியபோது, ''யா அல்லாஹ்! தவ்ஸ் கோத்திரத்தினருக்கு நேர்வழி காட்டுவாயாக!'' என்று இருமுறை அந்த இடத்தில் வைத்தே நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் துஆ செய்துள்ளார்கள்.

மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கு பெரும் உறுதுணையாக விளங்கியது யார்..? அவருடைய சகோதரர் ஹாரூன் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள்தானே. யாரை இறைதூதராக தேர்ந்தெடுக்க வேண்டும் எனும் உரிமை அல்லாஹ்வைச் சார்ந்தது.

(54 ஆம் பக்கம் பார்க்க...)

* சிங்கப்பூரிலிருந்து ஆடிட்டர் பெரோஸ்கான் *

-03-

# முயற்சியும் பயிற்சியும்

எனவே, செலவில்லாமல் நமக்கு நன்மையை அள்ளித் தரும் இந்தப் புன்னகையை இயற்கையாகவே பெற்றவர்கள் பயன்படுத்துங்கள். இல்லாதவர்கள் பழக்கப்படுத்தி மாற்றிக் கொள்ளுங்கள். இதற்கு முயற்சியும் பயிற்சியும் தேவை.

சில வருடங்களுக்கு முன் சிங்கபூர் இஸ்லாமிய சமய மன்றம் (MUIS- SINGAPORE ISLAMIC RELIGIOPUS COUNCIL) ஏற்பாடு செய்திருந்த கவுன்சலிங் பயிற்சி நெறியில் பங்கேற்றேன். பயிற்சி நெறியின் இறுதியில், நிஜமாக ஒரு கவுன்சலிங் செய்வதை வீடியோ எடுத்தனர். இறுதியில் கவுன்சலிங் செய்பவருக்குள்ள முக்கிய தகைமைகளில் ஒன்று புன்னகை பூத்த முகம். உங்களிடம் அதனைக் காண முடியவில்லையே! என்றனர். அப்போதுதான் ''வாப்பா உங்கள் முகத்தைப் பார்த்தால் கடுமையாக (FIERCE) இருப்பதாக என் சக மாணவிகள் சொல்கிறார்களே'' என்று எனது மகள் ஒரு தடவை என்னிடம் சொன்ன செய்தி நினைவுக்கு வந்தது.

நான் பல சந்தர்ப்பங்களில் புன்னகை பூத்த முகங்களைப் பார்த்து பொறாமைப்பட்டிருக்கிறேன். புன்னகைப்பது ஸதகா (ஓர் அறச் செயல்) எனும் நபிமொழியை நானும் பல இடங்களில் சொல்லியிருக்கிறேன். ஆனால், இந்த கவுன்சலிங் பயிற்சிநெறியின் முடிவில்தான் உண்மையாகவே அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டேன். மனதளவில், செயலளவில் நாம் நல்லவர்களாக இருந்தால் மட்டும் போதாது. புன்னகை எமது அணுகுமுறையை தீர்மானிக்கிறது என்பதை உணர்ந்தேன். எப்போதும் மலர்ந்த முகத்துடன் இருப்பதற்கு கடும் முயற்சியும் பயிற்சியும் எடுத்தேன். ஆரம்பத்தில் என் மனைவிகூட அப்படி ஒன்றும் முன்னேற்றமில்லை என்றார். சுமார் மூன்று மாதங்கள் கடந்திருக்கும். என்னை சந்திக்க வந்த எனது வாடிக்கையாளர் ஒருவர் ''எப்போதும் புன்னகையோடு இருக்கிறீர்களே. அதன் இரகசியம் என்ன?'' என்றார். எனது முயற்சி வீண்போகவில்லை என்பதை இப்போது நான் புரிந்து கொணடேன். அல்லாஹ்வின் அருளினால் புன்னகை இப்போது என்னோடு ஒட்டிக் கொண்டு விட்டது.

இங்கே ஓர் உண்மையை நாம் புரிந்து கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம். ஒருவர் தூரத்தில் நின்றவாறு தனது நண்பரைப் பார்த்து புன்னகையுடன் தலையை ஆட்டி வரவேற்று சலாம் சொல்கிறார். மற்றவர் தனது அருகில் வந்த நண்பரைப் பார்த்து சாதாரணமாக சலாம் சொல்கிறார். யாரை மனிதர்கள் விரும்புவர் என்பதை நீங்களே தீர்மானியுங்கள்.

ஆக வியாபாரத்தில், அறிவூட்டுவதில், தலைமைப் பொறுப்பில், மணவாழ்க்கையில், நட்பு வட்டத்தில் இப்படி பல சூழலிலும் புன்னகைக்கு ஒரு தனி மதிப்பு உண்டு. அது உங்கள் நிலையை மேம்படுத்தும். தேனின் சுவையை நீங்கள் கொஞ்சம் சுவைத்து பிறருக்கும் சொல்லுங்கள். நம்மோடு ஒருவர் புன்னகையுடன் உரையாடும்போது நமக்குள் இருக்கும் இறுக்கம் குறைந்து மகிழ்ச்சி பெருக்கெடுப்பதை நாம் உணர்கின்றோமல்லவா?

தஃவாப் பணியில் ஈடுபட்டுள்ள சகோதரர்களுக்கு மிக முக்கிய தேவை புன்னகை.

''நபியே! நீர் கடின சித்தமுடையவராக இருந்திருந்தால் உம்மை விட்டு இந்த மக்கள் வெருண்டோடி இருப்பார்கள்.'' (3: 159) என்கிறது அல்குர்ஆன்.

''நீர் உன் சகோதரனை மலர்ந்த முகத்துடன் பார்ப்பதும் தர்மமாகும்.'' (திர்மிதி)

''நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை விடவும் புன்னகை பூப்பவர் யாரையும் நான் பார்த்ததில்லை'' என்று அப்துல்லாஹ் பின் ஹாரிஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள். (திர்மிதி)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தம் தோழர்களுடன் நகைச்சுவையுடன் உரையாடுபவராக, அவர்களுடைய குழந்தைகளுடன் பெஞ்சி விளையாடுபவராக, குழந்தைகளை தமது மடியில் அமர்த்துபவராக, விருந்துக்காக அழைக்கப்பட்டால் அதனை ஏற்பவராக, நோயாளிகளை நலம் விசாரிப்பவராக, தவறிழைத்தவர்கள் கூறும் நியாயத்தை ஏற்பவர்களாக இருந்தார்கள்.

எனவே, செலவில்லாமல் நமக்கு நன்மையை அள்ளித் தரும் இந்தப் புன்னகையை இயற்கையாகவே பெற்றவர்கள் பயன்படுத்துங்கள். இல்லாதவர்கள் பழக்கப்படுத்தி மாற்றிக் கொள்ளுங்கள். இதற்கு முயற்சியும் பயிற்சியும் தேவை.■

◆அஷ்ஷெய்க் கியாஸ் முஹம்மத் (நளீமி) M.A. விரிவுரையாளர்- ஜாமிஆ ஆஇஷா ஸித்தீக்கா◆

# நற்கிரியைகள் சுமந்து வரும் வசந்தம்



உலகம் செயற்களம்; மறுமை கூலிகளுக்கான தளம். "அன்றைய தினம் மனிதன் அவனது செயல்களை நினைவுகூருவான்." (79: 35)

"மனிதனுக்கு அவன் செய்தவை தவிர வேறு எதுவும் கிடையாது." (53: 39)

நன்மை செய்தவர்கள் தமது செயலுக்கான கூலியை நிரப்பமாகக் கொடுக்கப்படுவார்கள். அவர்களுக்கு கவலை, துக்கம் எதுவுமில்லாத நிம்மதியான வாழ்க்கை கிடைக்கவிருக்கிறது.

"நிச்சயமாக ஈமான் கொண்டு நற்கருமங்கள் செய்து தொழுகையை நிலைநாட்டி ஸகாத்தும் கொடுத்தவர்களுக்கு அவர்களது இறைவனிடத்தில் நற்கூலிகள் உண்டு; அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள்." (2: 277)

நாம் சிலபோது இவ்வுலகில் சமூக நலன் கருதி அதிகம் பாடுபட்டு உழைத்தாலும் அவை கண்டு கொள்ளப்படாமல் போகலாம். நன்றி அல்லது பாராட்டு எதையும் பெற்றுத் தராமல் போகலாம். ஆனால், எமது நற்கருமங்கள் வீண் போவதில்லை. "அவர்கள் மறந்து விட்டாலும் அல்லாஹ் நுணுக்கமாக கணக்கிட்டு வைத்துள்ளான்." (58: 6)

"அணுவளவு நன்மை செய்தாலும் அதையும் மனிதன் கண்டு கொள்வான்." (99: 7)

மறுமையின் ஏக அதிபதி அல்லாஹ்விடம் அநியாயம், அத்துமீறல் எதுவுமின்றி அவரவரின் செயல்களுக்கான கூலி நிரப்பமாக கிடைக்கவிருக்கிறது. மறுமையின் உயர் கூலிகளோடு ஒப்பிடுகையில் உலகின் நலன்களும் வளங்களும் எப்பெறுமானமும் அற்றவை. ஏராளமான நற்கருமங்களின் கூலியை வர்ணிக்கும் நபிமொழிகள் பல. அவை உலகை விடச் சிறந்தவை என எடுத்துரைக்கின்றன. உதாரணமாக "பஜ்ரின் இரண்டு ரகஅத்துகள் உலகையும் அதில் உள்ளவற்றையும் விடச் சிறந்தவை." (முஸ்லிம்)

நன்மைகளின் மற்றுமொரு பக்கம் அவை தீமைகளுக்கான குற்றப் பரிகாரமாகவும் தீமைகளைப் போக்கி விடும் அருமருந்தாகவும் அமைவதாகும். "ஐங்காலத் தொழுகைகள், ஒரு ஜுமுஆவிலிருந்து அடுத்த ஜுமுஆ, ஒரு ரமழானிலிருந்து அடுத்த ரமழான் என்பன அவற்றுக்கு இடைப்பட்ட பாவங்களுக்கான குற்றப் பரிகாரமாகும். இதில் பெரும் பாவங்கள் தவிர்க்கப்பட்டிருப்பது இன்றியமையாதது." (முஸ்லிம்)

இதனைத் திருமறை விளக்கும்போது, "தௌபா செய்து மீண்டு, ஈமான் கொண்டு நற்கருமங்கள் புரிந்தவர்களைத் தவிர அவர்களுடைய தீமைகளை அல்லாஹ் நன்மைகளாக மாற்றி விடுவான்; அல்லாஹ் மிகவும் மன்னிப்பவனும் கிருபை உடையவனுமாவான்." (25: 70)

நற்கருமங்களின் உயர் பெறுமானம் எமக்காக அல்லாஹ் ஏற்பாடு செய்திருக்கும் சுவனப் பாக்கியமாகும். சுவனம் முற்றிலும் இன்பமயமானது. இன்பத்துக்குத் தடையாக அமையும் சகல காரணிகளையும் அல்லாஹ் அகற்றி விடுவான். உள்ளங்களில் குரோத உணர்வுகள் இருக்க மாட்டாது. நோய், முதுமை, மலசல உபாதைகள் ஏற்பட மாட்டா. அவ்வின்பங்கள் தெவிட்டாத வகையில் நாளுக்கு நாள் புதுமை அடைந்து கொண்டிருக்கும். முடிவில்லாத நிரந்தர வாழ்க்கை அது.


இந்த உயர் பாக்கியங்களைப் பெற்றவர்கள் மறுமையில் அல்லாஹ்வைப் புகழ்வார்கள். "அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்; அவன் எமக்கு இதனை நோக்கி வழிகாட்டினான். அல்லாஹ் வழிகாட்டி இருக்காவிட்டால் நாம் நேர்வழி பெற்றிருக்க மாட்டோம்." (7: 43)

எனவே, நன்மைகள் செய்து கொள்வதற்கு ஒருவனுக்கு வாய்ப்பும் மனோநிலையும் கிடைக்கிறது எனில், அது மிகப் பெரிய பாக்கியமாகும். அந்த வாய்ப்பை அவன் தவற விடக் கூடாது. மாறாக, மென்மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இமாம் இப்னு தைமிய்யா (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: "உலகில் ஒரு சுவனம் உண்டு. அதில் நுழையாதவன் மறுமைச் சுவனத்தில் நுழைய மாட்டான்." இக்கருத்தினை ஒரு நபிமொழியுடன் தொடர்புபடுத்திக் காட்டினார்கள் இமாம் இப்னு கையிம் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள். "நீங்கள் சுவனப் பூஞ்சோலைகளைக் கடந்து சென்றால் நன்கு மேய்ந்து கொள்ளுங்கள்" அப்போது "சுவனப் பூஞ்சோலைகள் என்றால் என்ன?" என வினவப்பட்டது. அதற்கு "திக்ருடைய அமர்வுகள்" எனக் கூறினார்கள் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள்.

எமக்குக் கிடைக்கும் நன்மைகளின் பாக்கியங்களுக்காக அல்லாஹ்வைப் புகழ்வோம். தீமைகள் எம்மில் நின்றும் உள்ளவை. அவற்றைக் களைந்து நன்மையின் பாதையில் ஸ்திரமாகக் கால் பதிப்போமாக! ■

# உலக சமூக நீதி தினம்














உலக சமூக நீதி தினத்தை முன்னிட்டு ஸ்ரீ லங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கம் கடந்த பெப்ரவரி 20 ஆம் திகதி கொழும்பு விகாரமகாதேவி திறந்த வெளி அரங்கில் விஷேட நிகழ்வொன்றை நடத்தியது. மாலை 4.30 மணி முதல் 6.30 மணி வரை நடைபெற்ற இந்நிகழ்வில் சுமார் நூறு பேரளவில் கலந்து கொண்டனர்.

சமூக நீதி குறித்தும் அதன் தேவை குறித்தும் மக்களை விழிப்புணர்வூட்டும் நோக்கில் 2 ஆவது தடவையாகவும் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் பிரதம பேச்சாள ராக ராவய பத்திரிகையின் ஆசிரியர் சட்டத்தரணி கே. டப்ளியு. ஜனரன்ஜன கலந்து கொண்டு இலங்கையில் சமூக நீதி குறித்து உரை நிகழ்த்தினார். ஸ்ரீ லங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி றுடானி ஸாஹிர் மற்றும் 4 ஆவது இலங்கை இளைஞர் பாராளுமன்றத்தின் சபாநாயகரும் 2016 ஆம் ஆண்டுக்கான ஐக்கிய நாடுகள் இளைஞர் மாநாட்டின் இலங்கைக்கான பிரதிநிதியாக செயற்பட்டவருமான சசின்த துலன்ஜன ஆகியோர் சமூக நீதியை நிலைநாட்டுவதில் இளைஞர் மற்றும் மாணவர்களின் பங்களிப்புக்கள் குறித்தும் உரை நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் ஸ்ரீ லங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் தேசியத் தலைவர் எம்.எல்.எம். தௌபீக், உப தலைவர்களான அஷ்ஷெய்க் ஆஸாத் சிராஸ், சல்மான் அக்ரம் உட்பட, மத்திய சபை அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.

# சுதந்திரத்தை அனுபவிப்போம்



ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் தேசிய சுததந்திர தின நிகழ்வுகள் ''ரகிமு ஸ்ரீ லங்கா'' துணை அமைப்பின் ஏற்பாட்டில் தந்திரத்தை அனுபவிப்போம் எனும் தொனிப் பொருளில் தேசிய தலைவர் எம்.எல்.எம். தௌபீக் அவர்களின் தலைமையில் சிலாபம் தாருல் அர்கம் இஸ்லாமிய நிலையத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சிலாபம் பிரதேச செயலாளரும் கௌரவ அதிதியாக சிலாபம் முன்னாள் நகர சபை உறுப்பினர் சட்டத்தரணி ஸாதிகுல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து சிலாபம் ஆரியகம சிங்கள மகா வித்தியாலயத்தில் வறிய மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் பகிர்ந்தளிக்கும் வைபவம் ஒன்றும் நட்புறவு



வலைப்பந்தாட்டப் போட்டி நிகழ்ச்சியும் நடைபெற்றன. சிய சக்தி அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மானுவங்கம கிராம சேகவர் கலந்து சிறப்பித்தார்.

பிரதான நிகழ்வு மாலை சிலாபம் கடற்கரை திறந்த வெளியரங்கில் நடைபெற்றது. இதில் ஷசிக சமரசிங்க மற்றும் ராஜித ராஜபக்ஷ ஆகியோரின் குழுக்களினால் தேசிய தின சிறப்பு நாடகம் மற்றும் பல்குரல் கலை நிகழ்ச்சியும் அரங்கேற்றப்பட்டன.

மேலும் ஸ்ரீ லங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் உப தலைவர் அஷ்ஷெய்க் ஆஸாத் சிராஸ் மற்றும் பொதுச் செயலாளர் சட்டத்தரணி றுடானி ஸாஹிர் ஆகியோர் இணைந்து கருத்துப் பரிமாற்றம் ஒன்றை நிகழ்த்தினர். இந்நிகழ்வில் நூற்றுக் கணக்கான பொது மக்கள் கலந்து கொண்டதோடு சுரகிமு ஸ்ரீ லங்கா துணை அமைப்பின் தலைவர் முஆஸ் அஹமட் மற்றும் ஸ்ரீ லங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் விளையாட்டு, கலை மற்றும் கலாசார பிரிவின் தலைவர் அஷ்ஷெய்க் மஜீட் எம். அர்ஷத் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# சுதந்திரத்தை அனுபவிப்போம்

## ஸ்ரீ லங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் வாகனப் பேரணி

இலங்கையின் 69ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ''சுதந்திரத்தை அனுபவிப்போம்'' எனும் தொனிப்பொருளில் வாகனப் பேரணியொன்றை ஸ்ரீ லங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் மாதம்பை கிளை ஏற்பாடு செய்திருந்தது.

மாதம்பை பொலிஸ் நிலையத்தின் அனுசரணையுடன் ஸ்ரீ லங்கா மாணவர் இயக்கத்தின் பயிற்சி மற்றும் அபிவிருத்தி பகுதித் தலைவர் கவ்வாம் காமில் அவர்களின் தலைமையில் நடைபெற்ற வாகனப் பேரணி ஜாமிஉல் அல்பரீஆ ஜுமுஆ பள்ளிவாசலின் நிர்வாக சபை உறுப்பினர்களால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இவ்வாகனப் பேரணியில் ஸ்ரீ லங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் மாதம்பை கிளையின் முன்னாள் உறுப்பினர்கள், இளைஞர்கள், பெரியோர்கள் என சுமார் 250 பேர் கலந்து கொண்டனர்.

இப்பேரணியில் United Madampien Association உறுப்பினர்களும் கைகோர்த்து செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

உங்கள் கிளை மற்றும் பிராந்திய மட்டங்களில் நடை பெறும் ஜம்இய்யா மற்றும் பாடசாலைப் பகுதியின் நிகழ்வுகளை உடனுக்குடன் ஜம்இய்யாவின் தலைமைச் செயலகத்துக்கு அறியத் தருமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

அஷ்ஷெய்க் முஅஸ்ஸம் - 077 600 5614, info@slism.org



# அண்ணலாரை நாம் எந்தளவு நேசிக்க வேண்டும்..?

(உஹுத் போரின்போது நடந்த சம்பவம் இது)

நபிகளார் கொல்லப்பட்டு விட்டார்கள் என்ற வதந்தி பரப்பப்பட்டு விட்டது. அந்த பொய்ச் செய்தியை கேள்விப் பட்ட அன்ஸாரி பெண் ஒருவரால் அச்செய்தியை தாங்கிக் கொள்ள முடியவில்லை. தலைக்குள் ஆயிரம் இடிகள் விழ உயிரெல்லாம் தீப்பற்றி எரிய படபடக்கும் உள்ளத்தோடு வீட்டை விட்டு புறப்பட்டு போர்க்களத்தை நோக்கி விரைந்து சென்றாள்.

போகும் வழியில் சிலர் வந்து கொண்டிருப்பதைக் கண்ட அவள் ஓடிப் போய் அண்ணலாரைப் பற்றி விசாரிக்கிறாள். ஆனால், அவர்களில் ஒருவர் அவளை பரிதாபத்துடன் பார்த்து அவளின் தந்தை யுத்த களத்தில் இறந்து விட்டதாக சொல்கிறார்.

அந்தக் கவலையான செய்தி அவளது செவிகளை எட்டினாலும் அவளது கவனம் முழுக்க அண்ணலாரைப் பற்றியே சூழ்ந்திருந்தது. ''எனக்கு அண்ணலாரைப் பற்றி சொல்லுங்கள். அவருக்கு என்ன நடந்தது?'' என கெஞ்சிக் கேட்கிறாள்.

''அண்ணலாருக்கு ஒன்றுமில்லை. அவர் நலமாகத்தான் இருக்கிறார்'' என அவர்களிடமிருந்து அவள் எதிர்பார்த்த பதில் வந்தாலும் அவள் திருப்தி அடையவில்லை. அவர்களை விட்டு விட்டு போர்க்களம் நோக்கி விரைந்து செல்கிறாள்.

அடுத்து வந்த கூட்டத்தினரும் அவளது கணவனும் யுத்த களத்தில் கொல்லப்பட்டு விட்டார் என்ற சோகச் செய்தியை அவளுக்கு சொல்கிறார்கள். இன்னொரு கூட்டம் யுத்த களத்தில் அவளது மகனையும் கொன்று விட்டார்கள் என இன்னோர் இடியை எத்தி வைக்கின்றது. ஆனால், அவளது கவனமோ ஒட்டுமொத்தமாக அண்ணலாரையே தேடிச் செல்கின்றது.

யுத்த களத்திற்கும் வந்து விட்டாள்.

இரத்த நதிகள் ஆங்காங்கே தேங்கி நிற்கின்றன. உயிர் குடித்த அம்புகளாலும் உடலுக்குள் ஒரு பக்கம் புகுந்து மறுபக்கம் வெளியேறிய ஈட்டிகளாலும் போர்க்களம் நிறைந்திருக்கின்றது. உடல் அங்கங்கள் சிதறிக் கிடக்கின்றன.

ஆனால், அவை எதுவும் அவளின் கண்களில் படவில்லை. அவளது கவனம் முழுக்க அண்ணலாரை தேடியே அலைந்து கொண்டிருந்தது.

அதோ... அதோ... அதோ...

அவள் அண்ணலார் உயிரோடு இருப்பதைக் கண்டு விட்டாள். அதன் பின்னரே இத்தனை நேரமாக அனலில் மெழுகாய் உருகிக் கொண்டிருந்த அவளது உயிர் நிம்மதிப் பெருமூச்சு விட்டவாறே அவளிடம் திரும்பி வந்தது.

அண்ணலாரின் அருகே சென்று ''உங்களைப் பார்த்த பின்னர்தான் எனது அனைத்து கஷ்டங்களும் தீர்ந்தன எந்தன் ரஸூலே'' என பெருமூச்சு விட்டாறே கூறினாள். அதன் பின்னரே அவளுக்கு அதே யுத்தத்தில் தனது தந்தையும் கணவனும் மகனும் கொல்லப்பட்டது நினைவுக்கு வருகின்றது. கண்ணீர் சிந்தியவாறே திரும்பிச் செல்கிறாள்.

எவ்வளவு ஆழமான, அர்த்தமுள்ள அன்பு அவளுடையது. அவளைப் போன்றே நாமும் அண்ணலாரை நேசிக்கலாம் தானே..!

அண்ணலார் வாழ்ந்து காட்டியவாறு நாமும் இந்த உலகில் வாழ்ந்து அவர் மீதான அன்பை பறைசாற்றுவோம்!

▸ வ. முஹம்மத் நபீல்

## வினா- விடைப் போட்டி - 105

01. ஹிஜ்ரத்துக்கு முன்பு இஸ்லாத்தை ஏற்ற குபாவைச் சேர்ந்த பெண்மணி யார்?

02. அன்ஸார்கள் முஹாஜிர்கள் மீது வைத்த அன்பை அல்லாஹ் எந்த அத்தியாயத்தில் பாராட்டுகிறான்?

03. அலட்சியத்தைப் போக்குவதற்கான வழிமுறைகள் மூன்றைக் குறிப்பிடுக.

04. நோம் சோம்ஸ்கி ''சர்வதேச புறக்கணிப்பு'' என அடையாளப்படுத்தும் விடயம் எது?

05. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தேர்தலின்போது பயன்படுத்திய சுலோகம் எது?

**உங்கள் விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் எழுதி மார்ச் 22 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வையுங்கள்.**

**சிறுவர் பூங்கா**
அல்ஹஸனாத் 77, தெமடகொட வீதி, கொழும்பு-09

## பிரார்த்தனை செய்வதற்கான ஒழுங்கு முறைகள்



- தூய எண்ணத்தோடு துஆ கேட்டல் (இஹ்லாஸ்)
- அல்லாஹ்வை புகழ்ந்து துஆவை ஆரம்பித்தல் (அஸ்மாஉல் ஹுஸ்னா)
- நாம் செய்த பாவங்களுக்காக மன்னிப்பு கேட்டல்
- அல்லாஹ் நமக்களித்துள்ள அருட்கொடைகளுக்கு நன்றி கூறல்
- எமது பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்படும் என்ற நம்பிக்கையுடன் துஆ கேட்டல்

**ஏ.எல்.எம். லரீப்**
சிறாஜியா வளாகம், ஓட்டமாடி

## தேசமே நாம் எழ வேண்டும்!

தாயின் மடியில் இருந்து கிழிறங்கி தவழத் துவங்கிய
எம்மை தத்தெடுத்து
தன் மார்போடு அணைத்த இரண்டாம் தாய் இந்த பூமி!

வியர்வை துளிகள் சிந்தினால் வைரத்துளிகளை
பரிசளித்த
கொடை வள்ளல் இந்த பூமி!

வற்றாத ஆறுகளையும் வனப்பு மிகு
மலைத்தொடர்களையும்
வரப்புகள் சூழ்ந்த வயல்வெளிகளையும்
எமக்களித்தது இந்த பூமி!

சகோதர வாஞ்சையுடன் தோளோடு தோள் சேர்த்து நம்
தேசத்திற்காக நாம் உழைப்போம்!
தடைகளை தகர்த்தெறிந்து தரணியில் தலை நிமிர்ந்து
நாம் வாழ்வோம்!

**எப். ரஹீமா பானு- ஹாதியா வளாகம்**

## முற்றுப்புள்ளி

உனக்கும் ஒரு நாள் வரும்
அந்நாளில் நீ குளிக்க மாட்டாய்
உன்னை குளிப்பாட்டுவார்கள்
நீ உடை அணிய மாட்டாய்
உனக்கு உடை அணிவிக்கப்படும்
நீ மஸ்ஜிதுக்கு சென்று தொழ மாட்டாய்
உனக்காக தொழுவிக்கப்படும்
நீ அல்லாஹ்விடம் ஒன்றும் கேட்க மாட்டாய்
உனக்காக உன் பின் நிற்பவர்கள் கேட்பார்கள்
அந்நாளில் உன் உறவினர்கள் உன்னை விட்டும் செல்வார்கள்
அந்நாளைக்கு என்றும் தயாராக இரு அடியானே..!

**எப். அதீபா ஜிப்ரி**
ஆஇஷா ஸித்தீகா



## சிறுவர் பூங்கா

**முதல் பரிசுக்குரியவர்:**

**ஜே.ஏ.எப். அப்ரா**
மடவளை பஸார்

**ஆறுதல் பரிசு பெறுவோர்**

| | | |
|---|---|---|
| 01. | ஜே.எப். ஜெஸ்மின் | - புதிய சாளம்பைக்குளம் |
| 02. | ஏ.எல்.எம். அப்ழல் | - சிலாபம் |
| 03. | ஸஹானா புகாரி | - அரநாயக |
| 04. | எம்.எஸ்.ஏ. ஹஸாபா | - வரகாபொல |
| 05. | எம்.எப்.எப். பஸ்னா | - பொல்கொல்ல |
| 06. | ஆர்.எப். றஸ்னி | - கொச்சிக்கடை |
| 07. | வஸீமா அமீர் | - ஹெம்மாதகம |
| 08. | ஏ. பதீனா பரக்கத் | - காத்தான்குடி |
| 09. | பஸ்ரினா ஹம்ஸா | - உலப்பனை |
| 10. | என். ஹஷ்மத் ஹிக்மா | - ஏறாவூர் |

**குறிப்பு:**
**விடைகளை தபால் அட்டையில் (Post Card) மாத்திரம் எழுதி அனுப்பவும்.**

அஷ்ஷெய்க் மதனி உவைஸ் (இஸ்லாஹி) B.A, M.A)



# இலங்கையில் மீளிணக்கமும் முஸ்லிம்களும்

யுத்தத்துக்குப் பின்னரான இலங்கையின் சூழ்நிலை எதிர்பார்த்தது போல் மிகவும் சுமுகமானதாக அமையவில்லை. 30 வருட கொடூர யுத்தம் நம் நாட்டு மக்களுக்கு கற்றுக் கொடுத்த பாடங்களை அவர்கள் எளிதில் மறந்து விட்டதாகவே தெரிகிறது. அனைவருமாக சேர்ந்து மீண்டும் ஒரு யுத்தத்திற்கான அடித்தளத்தை உருவாக்கி விடுவார்களோ என்ற அச்சமும் ஏற்படுகிறது. இந்நாட்டில் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான தகுந்த தருணம் இதுவாகும். இத்தருணத்தை முறையாகப் பயன்படுத்துவது காலத்தின் தேவையாகும்.

ஒரு நாட்டில் இனங்களுக்கிடையிலான சமாதானத்தைக் கட்டியெழுப்புவதென்பது ஒரு சாதாரண விடயமன்று; அது எளிதான விடயமுமல்ல. இந்நாட்டில் சிறுபான்மையினராக வாழும் முஸ்லிம்களாகிய நாம் 'இந்நாட்டின் சமாதானத்துக்கான எமது பங்களிப்பு என்ன?' என்பதை புரிந்து வைத்திருப்பது அவசியமாகும். இந்நாட்டின் எதிர்கால முஸ்லிம் சமூகத்தின்

நல்வாழ்வுக்காக, சமாதானத்துக்காக முஸ்லிம்கள் அனைவருமாக உழைப்பது அவசியம்.

தற்போதைய சூழ்நிலையில் நாம் அடிக்கடி மீளிணக்கம் (Reconsilation) என்ற வார்த்தையை ஊடகங்களில் செவிமடுக்கின்றோம். மீளிணக்கம் ஒரு யுத்தமோ இன மோதலோ நிலவிய ஒரு நாட்டில் குறித்த அந்த யுத்தமோ மோதலோ முடிவுக்கு வந்த பின்னர் அவற்றோடு சம்பந்தப்பட்ட இனங்களை புரிந்துணர்வுடன் சமாதானமாய் மீண்டும் இணைத்து வாழ வைக்க மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடாகும். இங்கு மோதல் அல்லது யுத்தம் நிலவிய காலத்தில் இனங்களுக்கிடையில் நிலவிய தப்பபிப்பிராயம், வெறுப்பு, காழ்ப்புணர்ச்சி, கோபம், பழிவாங்கும் எண்ணம் போன்ற விடயங்களை உள்ளங்களிலிருந்து களைந்து

நல்லெண்ணத்துடனும் நம்பிக்கையுடனும் அவ்வினங்களை இணைக்கும் செயற்பாடு இடம்பெறுகின்றது.

இங்கு மன்னிப்பு என்ற விடயம் முக்கிய இடத்தை வகிக்கின்றது. அதாவது, யுத்தம் அல்லது மோதல் நிலவிய காலத்தில் ஓர் இனம் அடுத்த இனத்துக்கு இழைத்த அநியாயங்களுக்காக அநியாயம் இழைக்கப்பட்டவர்களிடம் மன்னிப்பை வேண்டுதலும் அவ்வாறே அநீதி இழைக்கப்பட்டவர்கள் அநீதி இழைத்தவர்களை மன்னித்து விடுவதும் பிரதான இடத்தை வகிக்கின்றது. ஏனெனில், குரோதங்களை உள்ளே வைத்துக் கொண்டு வெளிரங்கத்தில் சமாதானத்துக்காக முயற்சிப்பது வெறும் வேஷமாக இருக்குமேயன்றி அதில் எவ்வித உண்மைத் தன்மையும் இருக்காது.

உலகில் பாரிய மோதல்கள் நிலவிய தென் ஆபிரிக்கா மற்றும் கௌதமாலா போன்ற நாடுகள் மீளிணக்கத்தை வெற்றிகரமாக நிலைநாட்ட 'மன்னிப்பு' என்ற ஆயுதமே உபயோகிக்கப்பட்டது. இங்கு அநீதி இழைத்தவர்கள் அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு இனிமேலும் அநீதி இழைக்கப்பட மாட்டாது என உறுதி அளித்து அவர்களிடம் மன்னிப்பை வேண்டுவதும் அநீதி இழைக்கப்பட்டவர்களால் அவர்கள் மன்னிக்கப்படுவதும் அவர்களது உறவை மிகப் பலமாக இணைத்து விடுகின்றது.

அவ்வாறே மோதல் நிலவிய காலத்தில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட, அநீதி இழைக்கப்பட்ட மக்களுக்கு சட்டத்தின் ஊடாக நீதியைப் பெற்றுக் கொடுப்பதும் பாதிக்கப்பட்டவர்களை ஆற்றுப்படுத்துவதும் மீளிணக்கத்தின் அடுத்த பிரதான பகுதியாகும். குறிப்பாக, உயிரிழப்புக்களை சந்தித்த குடும்பத்தினர், பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டவர்கள், காணாமல் போனோர், இடம்பெயர்ந்தோர் போன்ற இன்னோரன்ன பாதிப்புக்களுக்கு உட்பட்டவர்களுக்கு நீதி நிலைநாட்டப்பட்ட பின்னர்தான் மீளிணக்கம் குறித்து பேச வேண்டும். ஏனெனில், இவர்களுக்கு நீதி கிடைக்காமல் இவர்களிடம் மன்னிப்பு வழங்குவது பற்றியோ மீளிணக்கம் பற்றியோ பேசுவதனால் ஆகப்போவது ஒன்றுமில்லை.

அந்த வகையில் நம் நாட்டில் யுத்த காலத்தில் பாதிக்கப்பட்ட பல்வேறுபட்ட சமூகத்தினர் இன்னும் அது கிடைக்காமல் வாழ்ந்து வருகின்றனர். நீதி சாத்தியப்படாமல் மீளிணக்கம் பற்றி பேசுவது அர்த்தமற்றதாகும்.

அடுத்து யுத்த காலத்தில் உள ரீதியாக பாதிக்கப்பட்டவர்கள் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்களம் ஆகிய மூவினங்களிலும் உள்ளனர். ஒவ்வோர் இனத்தவரும் அடுத்த இனத்தை மிக அச்சத்தோடும் அவநம்பிக்கையோடும் சந்தேகத்துடனும் வெறுப்போடும் நோக்குகின்ற நிலைமையே காணப்படுகின்றது. இதனால் இவர்களுக்கு உளவள ஆலோசனை மற்றும் அடுத்த சமூகங்களின் மீது நல்லெண்ணம் வருவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும்.

மூவினங்களிலும் பெரும்பான்மையான மக்கள் சமாதானத்தையும் அமைதியையும் விரும்புபவர்களே. இனவாதம் பேசி மக்களை திசை திருப்ப முனைபவர்கள் மிகவும் சொற்பமானவர்களே. சரியான முறையில் மீளிணக்க நிகழ்ச்சித் திட்டம் நாட்டில் அமுல்படுத்தப்படுமானால் இந்நாட்டில் சமாதானம் சாத்தியமாகும்.

ஒரு நாட்டில் வாழும் பல்லின மக்கள் பிற இனங்களோடு புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டுமாயின், அவர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு முக்கிய விடயம் இருக்கின்றது. அதுதான் பன்மைத்துவம் (Diversity) ஆகும். அதுதான் சர்வ வல்லமை பொருந்திய இறைவன் மனிதர்களை முகத்தால், உடலால், நிறத்தால், உயரத்தால், குரலால், மொழியால், குண இயல்புகளால் வித்தியாசமாகப் படைத்திருக்கும் அற்புதமாகும். ஒவ்வொரு தனி மனிதனையும் எடுத்துக் கொண்டால் அவரவர் விருப்பு- வெறுப்புக்கள், அபிலாஷைகள், எதிர்பார்ப்புக்கள் ஒருவருக்கொருவர் வித்தியாசமானவை. ஒரே பெற்றோருக்குப் பிறந்த ஐந்து பிள்ளைகளின் விருப்பு- வெறுப்புக்கள் ஐந்து விதமாக இருப்பதை நாம் காண்கின்றோம்.

இந்த வித்தியாசம் அல்லது பன்மைத்துவத்தை மனிதர்களில் மட்டுமன்றி, ஏனைய அனைத்துப் படைப்புக்களிலும் கூட காணலாம்.

மனிதர்களின் பன்மைத்துவத்தை ஒரு புறத்தில் நாம் ஏற்றுக் கொண்டாலும் மறுபுறத்தில் அடுத்தவரது மதமோ,

**அநீதி இழைத்தவர்கள் அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு இனிமேலும் அநீதி இழைக்கப்பட மாட்டாது என உறுதி அளித்து அவர்களிடம் மன்னிப்பை வேண்டுவதும் அநீதி இழைக்கப்பட்டவர்களால் அவர்கள் மன்னிக்கப்படுவதும் அவர்களது உறவை மிகப் பலமாக இணைத்து விடுகின்றது.**

மொழியோ, கலாசாரமோ வேறுபடும்போது மாத்திரம் எம்மால் சகித்துக் கொள்ள முடியாமல் இருக்கிறது. இது எந்தளவு தூரம் நீதமானது என்பதை நாம் அலசிப் பார்க்க வேண்டும். இந்த விடயத்தை நாம் தெளிவாகப் புரிந்து கொண்டால் அடுத்த இனங்களைப் புரிந்து கொள்ள முடியும்.

கடுமையான மோதல்களுக்குப் பின்னர் மிகவும் வெற்றிகரமாக மீளிணக்கத்தை நிலைநாட்டிய நாடுகள் வரிசையில் தென் ஆபிரிக்கா முதலிடத்தை வகிக்கின்றது. பல நூற்றாண்டுகளாக தென் ஆபிரிக்க கறுப்பு இன மக்கள் காலனித்துவ வெள்ளையர்களால் எவ்வாறு கொடுமைக ளுக்கு உட்படுத்தப்பட்டனர் என்பதை நாம் அறிவோம். கறுப்பின மக்கள் அந்நாட்டு மொத்த சனத்தொகையில் சுமார் 80 வீதமானவர்கள். அவர்களுக்கு கொடுமை இழைத்த ஆக்கிரமிப்பு வெள்ளையர்கள் வெறும் 15 வீதமானவர்களே. கடுமையான போராட்டங்களுக்குப் பின்னர் கறுப்பின மக்கள் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டனர். ஆட்சி கிடைத்ததுமே கறுப்பின மக்கள் அவ்வளவு காலமும் தமக்கு அளவிலா துன்பம் விளைவித்த வெள்ளையர்களைப் பழிவாங்கத் துடித்தனர். கறுப்பின மக்களின் போராட்டத்துக்கு தலைமை தாங்கிய நெல்சன் மண்டேலா 80 வீதமான கறுப்பின மக்கள் 15 வீதமான வெள்ளையர்களை பழிவாங்கத் தொடங்கினால் ஏற்படும் விபரீதத்தைப் புரிந்து வைத்திருந்ததால் அதனைத் தடுத்தி நிறுத்தி மக்களை சமாதானத்தின் பக்கம் அழைக்க கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டார். அவ்வளவு காலமும் வெள்ளையரிடமிருந்து கறுப்பின மக்களைக் காப்பாற்ற அயராது உழைத்த அவருக்கே தற்போது கறுப் பரிடமிருந்து வெள்ளையர்களைக் காப்பாற்றவும் போராட வேண்டியிருந்ததுதான் விந்தையிலும் விந்தை.

அவர் கறுப்பின மக்களின் உள்ளங்களோடு பேசினார். தென் ஆபிரிக்காவுக்கு வெள்ளையர்கள் புரிந்துள்ள அபிவிருத் திப் பணிகளை விளக்கினார். நாட்டின் தற்போதைய வளர்ச்சி க்கு வெள்ளையர்களே காரணம் என்றார். கறுப்பினர்கள் அவர்களுக்கு பிரதி உபகாரம் செய்யக் கடமைப்பட்டவர்கள் என்றார். நீங்கள் அவர்களைப் பழிவாங்கத் தொடங்கினால் நாடு அதல பாதாளத்தில் விழுந்து பஞ்சமும் வறுமையும் தாண்டவமாடும் நிலையே ஏற்படும் என விளக்கினார்.

"அவர்கள் எமக்கு அநியாயம் இழைத்தது உண்மைதான். அதற்காக நாமும் அதையே அவர்களுக்கு செய்வோம் என் றால் உலகம் கறுப்பின மக்களைப் பற்றி எவ்வளவு இழிவா கப் பேசும். நாம் ஒரு சிறந்த சமுதாயம் என்பதை உலகறியச் செய்ய நமக்கு வாய்த்துள்ள அருமையான தருணம் இது. வெள்ளையர்கள் எமக்கு புரிந்த கொடுமைகளை மறந்து நாம் அவர்களை நிபந்தனையின்றி மன்னித்து விடுவதுதான் நாம் சிறந்த மனிதர்கள் என்பதற்கான ஆதாரமாகும்" என நெல்சன் மண்டேலா ஆற்றிய உரை உலக வரலாற்றில் அழியா இடத்தைப் பெற்று விட்டது.

உண்மையான மன்னிப்பு என்றால் என்ன என்பதற்கு செயல் ரீதியாக அர்த்தம் கொடுத்த மாமனிதராக அவர் போற்றப்படுகின்றார். அவரது வார்த்தைகளுக்கு முன்னே அவர் உருவாக்கிய சமூகம் கட்டுண்டு நின்றது. படுமோசமாக துன்புறுத்தப்பட்ட ஒரு சமூகம் தம்மை அவ்வாறு துன்புறுத் திய மனிதர்களை மன்னித்து விட்ட அதிசயம் கடந்த ஓரிரு தசாப்தங்களில் உலகில் தென் ஆபிரிக்காவில் அரங்கேறியது. இதன் பெறுபேறு இன்று நல்லிணக்கம் நிலவும் நாடாக அது விளங்குகின்றது. அங்கு மன்னிப்பு என்ற விடயத்துடன் எல்லாம் முடிந்து விடவில்லை. மாற்றமாக, வெகுவாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற் காக வேண்டி சத்தியத்தைக் கண்டறிவதற்கான ஓர் ஆணைக் குழு ஸ்தாபிக்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியும் கடும் குற்றங்கள் புரிந்தவர்களுக்கு தண்டனையும் வழங்கப்பட்டன. மோதல்கள் நிலவிய நாடுகளில் மீளிணக்கத்தை உருவாக்க தென் ஆபிரிக்காவே ஒரு முன்மாதிரியாக (Model) எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

நமது நாட்டில் மீளிணக்கத்தை நிலை நாட்டுவதில் சில சவால்கள் உள்ளன. அவற்றில் முதன்மையானவையாக இனவாத அமைப்புக்கள், பக்கச்சார்பான ஊடகங்கள், அரசியல்வாதி கள் மற்றும் சில சர்வதேச நாடுகள் முதலானவற்றை சுட்டிக் காட்டலாம். எனினும், பெரும்பாலான மக்கள் சமாதானத்தை வரவேற்பதால் மீளிணக்கத்தை இங்கும் சாத்தியப்படுத்தலாம். மறுபக்கம், முஸ்லிம்களின் பங்களிப்பு பற்றி நோக்குகை யில் முஸ்லிம்களின் சில நடைமுறைப் பழக்க வழக்கங்கள், எண்ணப்பாடுகள், மனோபாவங்கள் பிற சமூகங்களோடு உறவைக் கட்டியெழுப்பவும் அவர்கள் முஸ்லிம்கள் மீது நல்லெண்ணம் வைப்பதற்கும் நம்பிக்கை கொள்வதற்கும் தடையாக உள்ளன.

சமூக நலன் விடயத்தில் முஸ்லிம்கள் எப்போதும் முஸ் லிம் சமூகத்தினுள் மாத்திரம் எல்லா விடயங்களையும் சுருக்கிக் கொண்டுள்ளதாகக குற்றம் சாட்டப்படுகின்றது. முஸ்லிம்கள் நடத்துகின்ற அநாதை இல்லங்களுக்கும் வலது குறைந்தோர் இல்லங்களுக்கும் பிற மத பிள்ளைகளையும் சேர்த்துக் கொள்ள முடியுமா என்று பார்க்க வேண்டும். இஸ் லாம் சொல்லும் தாராளத் தன்மை விடயத்தில் நாம் கரிசனை யுடன் இருக்க வேண்டும்.

முஸ்லிம்களது மனிதாபிமானம் முஸ்லிம் சமூகத்துக்கு மாத்திரம் என்ற வகையிலேயே அமைந்துள்ளமை அடுத்த சமூகங்களிலிருந்து முஸ்லிம்களை அந்நியப்படுத்துவதா கவும் பெரும்பான்மையினர் கருதுகின்றனர். அத்தோடு பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையில் முஸ்லிம்களின் பங்களிப்பு குறைவாகக் காணப்படுகின்றமை முஸ்லிம்க ளுக்கு ஒரு சவாலாகும். அதனால் பாதுகாப்புப் படையில் முஸ்லிம்கள் இணைய ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

இனங்களுக்கிடையில் உறவைக் கட்டியெழுப்புவது

தொடர்பில் ஒவ்வொரு தனி மனிதன் முதல் ஊர்மட்டம், பள்ளிவாசல்கள் வரை பாரிய பொறுப்பு அனைவருக்கும் இருக்கிறது. ஒவ்வொரு தனி முஸ்லிமும் தனது வியாபாரத்தி லும் ஏனைய கொடுக்கல்- வாங்கல்களிலும் சகோதர இனத்தவர்களோடு மிகவும் பொறுப்பாகவும் நேர்மையா கவும் நடந்து கொள்ள வேண்டும். அவர்களது இன்ப துன்பங் களில் பங்கு கொள்ளல், அவர்களுக்கு உதவி செய்தல், சிறு பான்மையினராக அவர்கள் வாழும் ஊர்களில் அவர்கள் தனிமைப்படாமலும் அவர்கள் உள்ளங்கள் புண்படாமலும் பார்த்துக் கொள்ளல், நமது நிகழ்வுகளில் அவர்களையும் சேர்த்துக் கொள்ளல் முதலான விடயங்களில் முஸ்லிம்கள் கவனம் செலுத்த வேண்டும்.

பள்ளிவாசல்கள் ஊடாக பிற வணக்கஸ்தலங்களைத் தொடர்புபடுத்தி, பிற மதத் தலைவர்களை இணைத்து சமாதானத்துக்கான அமைப்புக்களை நிறுவுவதனூடாக சிறு பிரச்சினைகள் பூதாகரமாகி பாரிய இன மோதல்கள் ஏற்படுவதைத் தடுக்கவும் தொடர்ந்தும் முஸ்லிம்களதும் பிற இனங்களினதும் ஒருமைப்பாடு பேணப்படவும் வழி செய்ய முடியும். மதங்களை இணைத்து அம்மதங்கள் போதிக்கின்ற சமாதானத்திற்கான தூதை அனைத்து இன மக்களையும் போய்ச் சேரும் வண்ணம் மதங்களுக்கிடை யிலான கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்ய முடியும்.

பௌத்த, இந்து, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய பாட சாலைகளை இணைத்து மத நல்லிணக்க நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யலாம். அதில் அப்பாடசாலைகளில் சிரமதான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து அனைத்து மத மாணவர் களும் ஒரு குறித்த மத பாடசாலையில் சிரமதானத்தில் ஈடுபடச் செய்தல். அவ்வாறே மாறி அவற்றை ஏற்பாடு செய்வதினூடாக பாடசாலை மாணவர்களது இன, மத நல்லுறவை வளர்க்க நடவடிக்கை எடுக்க முடியும்.

குறிப்பாக முஸ்லிம் இளைஞர் அமைப்புக்கள், விளை யாட்டுக் கழகங்கள் சிரமதானத்தின் ஊடாக வைத்தியசா லைகள், பொது இடங்கள், பிற வணக்கஸ்தலங்கள் என்ப வற்றை சுத்தம் செய்தல், பெயின்ட் அடித்தல் மற்றும் இரத்த தானம் செய்தல் போன்ற நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதி னூடாக முஸ்லிம்கள் பற்றிய ஒரு நல்லபிப்பிராயத்தை ஏற்படுத்த முடியும். ஏனெனில், முஸ்லிம்கள் பொதுவாக பொது இடங்களுக்கு உதவி புரிவதில்லை என்ற தப்பபிப்பிராயம் மாற்று இனங்களுக்கிடையே பரவலாக நிலவி வருகிறது.

சிங்கள மக்களுடன் உறவைக் கட்டியெழுப்புவதில் எமது முஸ்லிம்களில் அநேகமானோர் சிங்கள மொழிப் பரிச்சயமற்றிருப்பது ஒரு தடையாகவே இருக்கின்றது. முஸ்லிம்கள் சிங்கள மொழியை முறையாகப் பேசக் கற்றுக் கொள்வது மிக அவசியமானதாகும். மாற்று இனத்தினருடன் முஸ்லிம்களது தொடர்பாடல் மேலும் விரிவடைதலானது

**உலகில் பாரிய மோதல்கள் நிலவிய தென் ஆபிரிக்கா மற்றும் கௌதமாலா போன்ற நாடுகள் மீளிணக்கத்தை வெற்றிகரமாக நிலைநாட்ட 'மன்னிப்பு' என்ற ஆயுதமே உபயோகிக்கப்பட்டது.**

தப்பபிப்பிராயங்கள் களையப்பட்டு அவர்களுக்கிடையே புரிந்துணர்வு ஏற்படக் காரணமாகின்றது.

இன்றைய சமூக ஊடகங்கள் முஸ்லிம்களுக்கெதிராக பாரிய ஒரு போலிப் பிரசாரத்தை முடுக்கி விட்டிருக்கின் றன. இனவாதிகள் முஸ்லிம்களை இழிவுபடுத்தி செய்யும் இப்பிரசாரத்துக்கெதிராக நமது சில முஸ்லிம் இளைஞர் கள் அறிவுபூர்வமற்ற ரீதியிலும் மிகக் காரசாரமாகவும் பதில் வழங்க முனைவதானது முறுகல் நிலையை மேலும் அதிகரிக்குமே தவிர புரிந்துணர்வை ஒருபோதும் ஏற்படுத்தி விடாது. எனவே, சமூக ஊடகங்களினூடாக இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் அழகிய முறையில் பிரசாரத்தை மேற்கொள்வதற்கு முஸ்லிம் இளைஞர்கள் வழிப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறே மீளிணக்கத்தை வலியுறுத்தும் விதமான குறுந்திரைப்படங்களைத் தயாரித்து சமூக ஊடகங்களில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் ஏனைய மத இனங்களைச் சேர்ந்த மாணவர்களையும் விரிவுரையாளர்களையும் இணைத்து இன நல்லிணக்க நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யலாம். பொதுவாக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பேராசிரி யர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் இவ்வாறான நிகழ்ச்சிகளுக்கு பெரும் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக வுள்ள ஒரு நிலைமையை அவதானிக்க முடிகின்றது.

ஆண்கள் மட்டுமன்றி, முஸ்லிம் பெண்கள் குறிப்பாக, யுவதிகள் ஊர் மட்டங்களில் பிற இன யுவதிகளை மற்றும் தாய்மார்களை இணைத்து சமூக சேவை அமைப்புக் களை நிறுவலாம். அவற்றினூடாக இன, மத பேதமின்றி வறுமைப்பட்ட பாடசாலைப் பிள்ளைகள் விதவைக்ள் வயோதிபர்கள், அநாதைகள் போன்றவர்களுக்கு சேவை புரியலாம்.

இனி வரும் காலங்களில் நாம் எவ்வாறு சகோதர இனத்தவர்களுடன் உறவைக் கட்டியெழுப்பலாம் என்ற விடயம் தொடர்பில் அனைவரும் நிறைய சிந்திக்க வேண்டும். அவ்வாறு சிந்தித்து புதிது புதிதாக பல நிகழ்ச்சி களை ஏற்பாடு செய்யலாம். பிற இனத்தவர்களிடையே இவ்வளவு காலமும் முஸ்லிம்கள் தொடர்பில் நிலவிய பார்வை, தப்பெண்ணம் என்பவற்றை களைந்தெறிய நாம் அனைவரும் அயராது உழைக்க முன் வர வேண்டும். அது தான் இந்நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த வழி செய்யும். ■


(ஜாமிஆ நளீமிய்யாவின் பட்டப் பரீட்சைக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வின் சாராம்சமே இது)

# முஸ்லிம் பெண்களின் ஆடை:

## இலங்கை பல்கலைக்கழக முஸ்லிமல்லாத மாணவர்களின் புரிதல்கள் ஒரு நோக்கு

-றாபி எஸ். மப்றாஸ் (நளீமி)-

தொடர்- 06



அவர்கள் அனைவரும் தாம் தமது சுயவிருப்புடனேயே ஹிஜாப் அணிவதாக குறிப்பிட்டார்கள். மேலும், பொது இடங்களில், குறிப்பாக பேருந்துகளில் செல்லும்போது ஆண்கள் பலர் அவர்களை நெருங்குவதற்கு கூச்சப்படுவதாகவும் இந்த ஹிஜாபினால் பாதுகாப்பை உணர்வதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இஸ்லாத்தில் ஹிஜாபுக்கு அளப்பரிய முக்கியத்துவமும் கண்ணியமும் வழங்கப்படுகிறது என்பதில் ஐயப்பாடு கிடையாது. எனினும், இன்று ‘‘ஹிஜாப் முஸ்லிம் பெண்களின் மீது திணிக்கப்பட்ட நிர்ப்பந்தம்’’ என்ற குற்றச்சாட்டு பரவலாகப் பேசப்பட்டு வரும் இக்காலப் பகுதியில் இது தொடர்பாக பல்கலைக்கழக முஸ்லிமல்லாத மாணவர்கள் மத்தியில் வினவியபோது,

‘‘முஸ்லிம் பெண்கள் சுயவிருப்புடன் ஹிஜாப் அணிகிறார்கள்’’ என்ற கருத்தை 20 வீதமானோர் ஆதரிக்கின்றனர். 35 வீதமானோர் நடுநிலை வகித்த அதேவேளை 45 வீதமானோர் அக்கருத்தை நிராகரித்தனர். மேலும், ‘‘முஸ்லிம் பெண்கள் தமது மதத்தாலும் சமூகத்தாலும் ஹிஜாப் அணிய நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்’’ என 48 வீதமானோர் குறிப்பிட்டிருந்தனர். அதே வேளை, ‘‘முஸ்லிம் பெண்கள் தமது கலாசாரத்தையும் தனித்துவத்தையும் பிரதிபலித்துக் காட்டுவதற்காகவே ஹிஜாப் அணிகிறார்கள்’’ என்ற கருத்தில் சுமார் 66 வீதமானோர் உள்ளனர்.

மேற்குறித்த தரவுகளின்படி, முஸ்லிம் பெண்கள் ஹிஜாபை சுயவிருப்பத்துடன் அணியவில்லை. மாறாக, சமய, சமூகத்தின் நிர்ப்பந்தத்திற்கு உட்பட்டும் தமது தனித்துவத்தை பிரதிபலித்துக் காட்டும் அடையாளச் சின்னமாகவும் ஹிஜாபை அணிகிறார்கள் என்பது இலங்கைப் பல்கலைக்கழக முஸ்லிமல்லாதவர்களின் புரிதலாகும். இத்தகைய புரிதல்களுக்கு தர்க்க ரீதியாகவும் புள்ளிவிபரங்கள் அடிப்படையிலும் தீர்வு வழங்க வேண்டும்.

உண்மையில், முஸ்லிம் பெண்கள் சுயவிருப்புடன் ஹிஜாப் அணிகிறார்களா? இல்லையா? என்பதை அவர்களிடம்தான் வினவ வேண்டும். எனினும், இலங்கைப் பல்கலைக்கழக முஸ்லிம் அல்லாதவர்களின் புரிதலை பரிசீலிப்பதற்காகவே அவர்களிடம் இவ்வினா தொடுக்கப்பட்டது.

பொதுவாக, முஸ்லிம் பெண்கள் ஹிஜாபை சுயவிருப்புடன்தான் அணிகிறார்கள் என்பதற்கு பல சான்றுகளை முன்வைக்கலாம். அந்த வகையில்,

''பிரான்ஸில், அரச பாடசாலைகளில் மதச் சின்னங்களை அணிவதை தடுக்கும் தடைச்சட்டத்தின் கீழ் ஹிஜாபுக்கான தடை 2004.02.11 திகதியில் கொண்டு வரப்பட்டது. இதற்கு முன்பிருந்தே, உலக நாடுகளிலுள்ள முஸ்லிம் பெண்கள் ''ஹிஜாப், ஜில்பாப்'' போன்ற பதங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்திய வண்ணம் அடையாள எதிர்ப்பு போராட்டங்களை நடத்தினார்கள். பிரான்ஸில் ஹிஜாப் தடைக்கெதிராக 2004.01.17 ஆம் திகதி உலகளாவிய ரீதியில் முஸ்லிம் பெண்களின் பேரணிகள் இடம்பெற்றன. இதில் 30000 க்கும் மேற்பட்ட முஸ்லிம் பெண்கள் பிரான்ஸின் தலைநகர் பாரிஸ் மாநகரத்தில் ஒன்றுதிரண்டு 'Hijab my choice; my life' ''ஹிஜாப் எனது தெரிவு; எனது வாழ்க்கை'' போன்ற பல மொழிகளிலும் எழுதப்பட்ட சுலோகங்களை ஏந்தியவர்களாக காட்சியளித்ததை இந்த உலகம் மறந்திருக்காது.

இதே போன்ற எதிர்ப்புப் பேரணிகள் உலகெங்கும் இடம்பெற்றன. லண்டன், டப்ரன் போன்ற இங்கிலாந்தின் மாநகரங்கள், அமெரிக்காவின் வொஷிங்டன், அட்லாண்டா, ஹூஸ்டன், மியாமி, சென்பிரான்ஸிஸ்கோ, நியூயோர்க் மாநகரங்கள் மற்றும் பலஸ்தீன், லெபனான், இந்தோனேசியா, லிபியா, ஜோர்தான், எகிப்து, சூடான், ஈரான், மலேசியா, ஈராக், மெக்சிகோ, ஜேர்மன், பெல்ஜியம் முதலான நாடுகளிலும் இத்தகைய எதிர்ப்பு போராட்டங்கள் நடத்தப்பட்டு பிரான்ஸிய தூதரகங்களில் கண்டன அறிக்கைகள் கையளிக்கப்பட்டன.

காஷ்மீரில், ''ஈமானின் புதல்வியர்'' என்ற அமைப்பைச் சேர்ந்த பெண்கள் கடுமையான குளிரையும் பொருட்படுத்தாது ஸ்ரீ நகரில் பேரணியை நடத்தினர். இதில் குறிப்பிடத்தக்க ஒரு விடயம் என்னவென்றால், இவையனைத்தையும் ஒழுங்கு செய்தது முஸ்லிம் பெண்களே தவிர வேறு யாருமில்லை.

1969 வியன்னா அறிக்கை, ஐ.நா. மனித உரிமைகள் சாசனம் என்பவற்றை முன்னிறுத்தி சூடானிய முஸ்லிம் பெண்கள் தமது எதிர்ப்பை தெரிவித்ததோடு ஒரு பெண்ணாக இருந்து பெண்களுக்கெதிரான அநீதியை நிறுத்துமாறு பிரான்ஸின் அப்போதைய முதல் பெண்மணி திருமதி பேர்னாண்டி சிராக் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தனர்.

இத்தகைய ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் முஸ்லிம் பெண்கள் ஹிஜாபை சுயவிருப்புடன்தான் அணிகிறார்கள் என்பதை தெளிவாகவே சுட்டிக்காட்டுகின்றன.

2014 இல் இஸ்லாத்தை ஏற்ற தமிழ் சினிமா நடிகை மோனிகா, ஆரம்பத்தில் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பர்தா அணிய ஆரம்பித்ததாகவும் அதன் உந்துதலின் விளைவாக அல்குர்ஆனை படித்ததாகவும் அதன் பின்னரே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

அதேபோல் ''டார்லின் ரைல் (Darline Rile)'' என்ற மெதடிஸ்ட் பெண்மணி 1947 இல் இஸ்லாத்தை ஏற்று 2006 காலப் பகுதியில் இலங்கைக்கு வந்தபோது அல்ஹஸனாத் சஞ்சிகை மேற்கொண்ட ஒரு நேர்காணலில், ''பர்தா அல்லது ஹிஜாப் போன்ற இஸ்லாமிய வரையறைகளை பேணும் ஆடைகள் ஒரு பெண்ணுக்கான பாதுகாப்பு அரணாகும். அது அவளுக்கு கண்ணியத்தையே கொடுக்கின்றது. ஆனால், மேற்கத்திய கலாசாரத்தை பொறுத்தவரை, அது ஆன்மிகத்தையும் குடும்ப கட்டுக்கோப்பையும் குலைப்பதாகவே அமைந்துள்ளது. நான் அணிந்துள்ள இந்த இஸ்லாமிய ஆடையை மிகுந்த திருப்தியுடனே அணிந்து வருகின்றேன்'' என்று கூறியுள்ளார்.

அது மட்டுமல்லாது நாம் தென்கிழக்கு, யாழ்ப்பாண பல்கலைக்கழகங்களுக்கு விஜயம் மேற்கொண்டபோது ஹிஜாப் அணியும் முஸ்லிம் மாணவிகளோடு பிரத்தியேகமாகவும் குழுவாகவும் சில கலந்துரையாடல்களை மேற்கொண்டோம். அவர்கள் அனைவரும் தாம் தமது சுயவிருப்புடனேயே ஹிஜாப் அணிவதாக குறிப்பிட்டார்கள். மேலும், பொது இடங்களில், குறிப்பாக பேருந்துகளில் செல்லும்போது ஆண்கள் பலர் அவர்களை நெருங்குவதற்கு கூச்சப்படுவதாகவும் இந்த ஹிஜாபினால் பாதுகாப்பை உணர்வதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

முஸ்லிம் பெண்கள் பெரும்பாலும், சுய விருப்புடன்தான் ஹிஜாபை அணிகிறார்கள். என்றாலும், ஹிஜாப் சம்பந்தமான அறிவும் தெளிவும் முஸ்லிம், முஸ்லிமல்லாதோருக்கு மேலும் வழங்கப்பட வேண்டும். ■

தொடரும்...

அல்ஹஸனாத்:

1970 ஆம் ஆண்டு முதல் வெளிவரும் இஸ்லாமிய மாத இதழ். அல்குர்ஆன், அல்ஹதீஸ் விளக்கங்களுடன், தஃவா களம், அனுபவக் கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகள், சர்வதேச உம்மத் தொடர்பான கட்டுரைகள், பெண்கள் பகுதி, சிறுவர் பகுதி, கவிதை, சிறுகதை என பல்வேறு அம்சங்களைத் தாங்கி முழுக் குடும்பத்துக்குமான இஸ்லாமிய மாத இதழாக வெளிவருகிறது.

# சந்தா விண்ணப்பப் படிவம்

JUST MEDIA FOUNDATION

Subscription Form

Receipt No:

Date:

Name:

Address:

Tel: Mob:

E-mail:

Profession:

## PAYMENT DETAILS

| | 6 Month | Per Year |
|---|---|---|
| Alhasanath | 425.00 | 850.00 |
| Aharam | 400.00 | 800.00 |
| Prabodaya | 350.00 | 700.00 |
| The Trend | 1125.00 | 2250.00 |

சந்தாக்களை அனுப்ப JMF என்ற பெயருக்கு MONEY ORDER எடுத்து தபாலகம் DEMATAGODA என குறிப்பிட்டு அனுப்பவும்.
வங்கியில் வைப்பிலிட நாடுவோர் SRI LANKA JAMATH-E ISLAMI, A/C NO: 1320009182, COMMERCIAL BANK, MARADANA.
அல்லது SRI LANKA JAMATH-E ISLAMI, A/C NO: 372132 BOC BANK, MARADANA எனும் வங்கிக்கணக்கில் குறித்த தொகை பணத்தை வைப்பிலிட்டு உரிய பற்றுச்சீட்டை 77, SRI VAJIRAGNANA MW, COLOMBO -09 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Just Media Foundation
77, Sri Vajiragnana Mw, Colombo -09
Tel: 011 2689324, | Fax: 0112686030
Email: jmflanka@gmail.com

அஷ்ஷெய்க் முஹம்மத் முபீர் (இஸ்லாஹி), (M.A), விரிவுரையாளர், இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி, மாதம்பை. mufeer96@gmail.com

# கதிரையில் அமர்ந்து தொழ முடியுமா?

# சூதாட்டத்தை இது சூதாட்டம் என்று பிரித்தறிவது எவ்வாறு?

**கேள்வி: நோயின் காரணத்தால் நிலத்தில் அமர்ந்து ஸுஜூது செய்ய முடியாத ஒருவருக்கு கதிரையில் அமர்ந்து தொழ முடியுமா?**

**பதில்:** நின்று தொழுவது தொழுகையின் ருகூன்களில் ஒன்றாகும். நின்று தொழ முடியுமான ஒருவர் அமர்ந்து தொழுதால் அவருடைய தொழுகை பாதிலாகும். நின்று தொழ முடியாது போனால் அல்லது நின்று கொண்டு தொழுவது மிகவும் கஷ்டமானதாக இருந்தால் அவருக்கு அமர்ந்த நிலையில் தொழ முடியும். நின்று தொழுவதற்கு முடியுமாக இருக்கும் பொழுது அடுத்த நிலைக்குப் போக முடியாது. இம்ரான் இப்னு ஹுஸைன் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ''எனக்கு மூல நோய் ஏற்பட்டபோது நான் எவ்வாறு தொழுவது?'' என்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் கேட்டேன். அதற்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ''நின்று தொழுங்கள்; இயலாது விட்டால் அமர்ந்து தொழுங்கள்; அதற்கும் இயலாது விட்டால் சாய்ந்து கொண்டு தொழுங்கள்'' என்று கூறினார்கள்.

(ஸஹீஹுல் புகாரி)

எனவே, தொழுகையில் அமர்ந்தவாறு தொழுவதற்கு முடியுமான சந்தர்ப்பங்களில் நின்று கொண்டே தொழ வேண்டும். முடியாது போனால்தான் அமர்ந்து அல்லது சாய்ந்து கொண்டு தொழ முடியும். உதாரணமாக தொழுகையை ஆரம்பிக்கும்போது, ருகூஉ செய்யும்போது நின்று கொண்டு செய்ய முடியுமாயின், அவற்றை நின்று கொண்டுதான் நிறைவேற்ற வேண்டும்; அமர்ந்து செய்ய முடியாது. அவ்வாறு செய்தால் அவர் தொழுகையின் ருகூனை விடுகின்றார். எனவே, அவருடைய தொழுகை பாதிலாகி விடும். கேள்வியில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று நிலத்தில் அமர்ந்தவாறு ஸுஜூது செய்ய முடியாமல் இருப்பதானது முழுத் தொழுகையையும் கதிரையில் அமர்ந்து தொழுவதற்கான தகுந்த நியாயமாக அமையாது.

**கேள்வி: சூதாட்டத்தை இது சூதாட்டம் என்று பிரித்தறிவது எவ்வாறு?**

**பதில்:** ஆரம்ப காலத்தில் சில குறிப்பிட்ட விளையாட்டுக்கள் இருந்தன. அதில் ஈடுபட்டால் அது சூதாட்டம் என்பதை எல்லோரும் பொதுவாக அறிந்து வைத்திருந்தனர். ஆனால், இன்று சூதாட்டத்தின் முறைகள் பன்முகப்படுத்தப்பட்டிருக்கின்றன; நிறுவனமயப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பது மட்டுமல்லாமல் இலாபமீட்டுகின்ற பிரதான வழிமுறைகளில் ஒன்றாகவும் இது மாறியிருக்கின்றது. எனவே, சூதாட்டத்தை எவ்வாறு தெரிந்து கொள்வது என்று கேட்பது நியாயமானதே!

ஒரு போட்டியில் பங்குபற்றும் போட்டியாளர் அதற்குப் பணம் செலுத்தி அதனால் தனக்கு பரிசு கிடைக்கும் அல்லது கிடைக்காமலும் இருக்கும் என்று இரண்டுக்கும் வாய்ப்பான நிலையில் இருந்தால் அது சூதாட்டமாகும். அதாவது போட்டிக்குப் பணம் செலுத்திய பின்னர் இலாபம் கிடைக்கும் அல்லது நஷ்டம் ஏற்படும் என்பது தெளிவாகத் தெரிந்தால் அப்போட்டி இஸ்லாத்தின் பார்வையில் தடுக்கப்பட்டதாகும்; சூதாட்டமாகும்.

உதாரணமாக ஒரு போட்டியில் ஐம்பது பேர் பங்குபற்றுகின்றனர். ஒவ்வொருவரும் ஐந்நூறு ரூபாயைச் செலுத்துகின்றனர். சேர்க்கப்பட்ட பணத்திலிருந்து முதலாவது, இரண்டாவது, மூன்றாவது வருபவர்களுக்கு பரிசு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஐம்பது பேரில் யாருக்கும் இப்பரிசைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் இருக்கின்ற போதிலும் மூன்று பேருக்குத்தான் பரிசு கிடைப்பது என்பது உறுதியான ஒரு விடயமாகும். ஏனையவர்கள் அப்பரிசு எங்களுக்கும் கிடைக்கும் என்று எதிர்பார்த்த போதிலும் அது அவர்களுக்கு கிடைக்காமல் போகின்றது என்பதும் நிதர்சனமானதே! அப்படியாயின் இப்போட்டி சூதாட்டமாகும். இதில் பங்குபற்றி வெற்றியடைந்த, தோல்வியடைந்த ஒவ்வொருவரும் இஸ்லாத்தில் தடுக்கப்பட்ட ஹராமாக்கப்பட்ட, சூதாட்டத்தில் பங்குபற்றுகின்றார் என்பதுதான் பொருளாகும்.


போட்டியாளர்களிடமிருந்து பெறப்படும் பணம் போட்டியின் நிர்வாக செலவினங்களுக்காக பயன்படுத்தப் பட்டு வெற்றி பெறுபவர்களுக்கான பரிசு வேறு பணத்திலிருந்து வழங்கப்படுமாயின் அது சூதாட்டமாக அமையாது.

எனவே, இதுபோன்ற சூதாட்டமான போட்டிகளில் பங்குபற்றுவதிலிருந்து முற்றுமுழுதாக விலகியிருந்து இறை திருப்தியைப் பெற்றுக் கொள்வோம். அல்லாஹ் அதற்குரிய தெளிவையும் மனப்பக்குவத்தையும் தருவானாக.

(54ஆம் பக்கம் பார்க்க...)

-ஷாரா-

# புரிந்தபோது...



ஒரே அலுப்பாக இருந்தது. கால்கள் வேதனையைச் சொல்லிக் கொள்ள முடியாமல் தடுமாறின. இடுப்பு தன் பாட்டுக்கு வலித்துக் கொண்டிருந்தது. கைகளைத் தூக்கக் கூட முடியவில்லை.

இத்தனை வருத்தங்கள் இருந்தாலும் அவளால் வேலை நிறுத்தம் செய்ய முடியாது.

''உம்மா... டீ!'' அலாரம் ஒலித்தது.

''வாரன் மகன்!'' என்றாள் ஸுலைஹா. கியாஸுக்கு அஸர் தொழுது விட்டு வந்தவுடன் ஆவி பறக்கத் தேநீர் வேண்டும்; அதில் காரமாய் இஞ்சி கலந்திருக்கவும் வேண்டும்.

''கொஞ்ச நேரம் ஏலா என்டு படுக்க வழியே இல்ல!'' என்றபடி எழுந்து சமையலறைக்குப் போனாள்.

வேலைக்கார மனுஷி குல்ஸூம் தாத்தா மற்ற எல்லா வேலைகளையும் செய்யலாம். ஆனால், சமைப்பது, தேநீர் ஊற்றுவது ஸுலைஹாவின் கைகளால் நடந்தாக வேண்டும். இல்லாவிட்டால் ஒருவரும் ஒன்றையும் வாயில் வைக்க மாட்டார்கள். அதை நினைக்கும்போது சிலவேளைகளில் பெருமிதமாகவும் சிலவேளைகளில் எரிச்சலாகவும் இருக்கும் அவளுக்கு.

''குல்ஸூம்... இஞ்சித் துண்டொன்டு சீவித் தாங்கோ!'' சொல்லி விட்டு கேத்தலை அடுப்பில் வைத்தாள் ஸுலைஹா. மாவீரன் போல இருந்த இஞ்சியிலிருந்து வெட்டியெடுத்த துண்டை கத்தியால் சீவத் தொடங்கிய குல்ஸூம், ''மகள் இந்தக் கெழம வரல்ல எனா நோனா!'' என்றாள்.

''மருமகனுக்கு வேலையா இருக்கும்...'' சீனியையும் பால் மாவையும் ஒன்றாய்க் கலந்தவாறு சொன்னாள் ஸுலைஹா.

இஞ்சியை சிறிய மர உரலில் போட்டு டொக்கு.. டொக்கு எனத் தட்டி ஸுலைஹாவிடம் கொடுத்தாள் குல்ஸூம்.

''கலியாணம் முடிஞ்சி மூனு மாதத்துக்கும் எத்தினயோ முற வந்திட்டுப் போனாதானே... மருமகன் என்டா தங்கமான பொடியன்... மகள் சந்தோஷமாக இருக்கிறாதானே நோனா!''

''இல்லாம... நல்ல ஹஸ்பன்ட், வசதியான வாழ்க்க, அவக்கு ஒரு கொறசச்சலுமில்ல..!'' நினைத்தது போலவே அழகான வாழ்க்கை மகளுக்கு அமைந்தது குறித்து பூரித்துப் போனாள் ஸுலைஹா.

மகளது திருமணம் நடந்த முறையை நினைக்கும் போதெல்லாம் சந்தோஷம் பொங்கும் அவளுக்கு. அவளது நண்பிகளது பாராட்டு மழையில் நனைந்தாள் அவள். யாருமே குறை சொல்லக் கூடாது என்று உறவினர், நண்பர் பட்டியலிலிருந்த அத்தனை பேரும் அழைக்கப்பட்டார்கள். ஒவ்வொரு சாப்பாடும் நினைத்ததை விடச் சிறப்பாக அமைந்தது.

நான்கு மகன்களுக்கு செல்லமாய் ஒரேயொரு மகள். அவளது திருமணத்தை இப்படியல்லாமல் வேறு எப்படித் தான் செய்வது!

முற்றத்தில் படர்ந்திருந்த மல்லிகைப் பந்தலிலிருந்து வந்த மல்லிகைப் பூ வாசம் இதயத்தை நிறைத்தது. சாடியிலிருந்த போகன் விலாச் செடிகள் பூத்துக் குலுங்கி தோட்டத்துக்கு அழகு சேர்த்தன. மகளது கல்யாண பிஸியில் இவற்றையெல்லாம் ரசிக்க அவளுக்கு நேரமேயிருக்கவில்லை.

வாசலில் கார் வந்து நின்ற சத்தம் கேட்டு எட்டிப் பார்த்தாள் ஸுலைஹா. காரிலிருந்து மருமகன் அமான் இறங்கிக் கொண்டிருந்தான். மகள் ஸுல்பாவைக் காணவில்லை. அமான் வர இருப்பதாக மகள் சொல்லவுமில்லை. ஆச்சரியமும் சந்தோஷமும் ஒன்றாய்க் கலக்க, மருமகனை வரவேற்றாள் ஸுலைஹா.

''வாங்கோ! வாங்கோ! என்ன மகன்... திடீரென்டு இந்தப்

பக்கம்? மகள் சொல்லவுமில்ல...''

''ஒபீஸ் வேலையா வந்ததோட ஒங்களையும் பாத்திட்டுப் போவோம் என்டு வந்த... நான் இங்க வாரது ஸுல்ஹாக்கும் தெரியா'' கொண்டு வந்த பார்சலை மாமியின் கையில் கொடுத்தான் அமான்.

ஒரு பேக் நிறைய மங்கூஸ். ''மாமிக்கு விருப்பமான பழம் மங்கூஸ் என்டு ஸுல்ஹா அடிக்கடி சொல்லுவா... அதுதான் கண்ட ஒடனே ஒங்கள நெனவு வந்துது...''

அவளுக்கு மனது குளிர்ந்தது. மருமகனுக்கு விருப்பமான சுக்குக் கோப்பியை ஊற்றி, ப்ரீஸரில் தயாராக இருந்த பெட்டீஸைப் பொரித்துப் பரிமாறினாள்.

''கலியாண நேரம் இங்க செஞ்சி வச்சிருந்த ஸ்வீட்ஸெல்லாம் நல்ல டேஸ்டென்டு மாமி எப்பவும் பாராட்டுவா...''

''அப்பிடியா மகன்! வழமையாக இங்க பங்ஷனுகளுக்கு தோசியும் தொதலும் மஸ்கட்டும்தானே! எங்கட ஊட்டுல வித்தியாசமா இருக்க வேணுமென்டு எத்தினயோ நாளாத் தேடித்தான் அந்த ஸ்வீட்ஸ் செய்யிற எடத்தக் கண்டுபிடிச்ச... எல்லாம் சரியான வெலதான்... அதப் பாக்க ஏலாதானே!'' பேச்சில் பெருமிதம் பொங்கி வழிந்தது.

''ஸுல்ஹாக்கு நீங்க வாங்கியிருக்கிற உடுப்புகளும் நல்ல அழகு! நல்ல கொலிட்டியும்தான்!'' பெட்டீஸைச் சுவைத்தபடியே சொன்னான் அமான்.

''இல்லாம மகளையும் கூட்டிக் கொண்டு போய் இந்தியாவில ரெண்டு கெழமையா அலைஞ்சு அலைஞ்சு தேடி வாங்கினதில்லையா! அந்த உடுப்புகள வாங்கப்பட்ட பாடு! அதோட ஹேன்ட் போக்ஸ், ஷூஸ் மத்த சாமான்களெல்லாம் வாங்க டுபாய்க்குப் போன. அதாலதான் அவ்வளவு கொலிட்டியா வாங்கக் கெடச்ச...'' பெருமையோடு சொன்னாள் ஸுலைஹா.

''இன்விடேஷனும் நீங்க டுபாய்ல வாங்கினதுதானே மாமி!''

''ஓ! இன்னம் இங்க ஒருத்தரும் இப்பிடி ஒரு இன்விடேஷனக் கண்டில்ல என்டு எல்லாரும் சொல்றா!'' பேசிப் பேசி அவன் கோப்பியைக் குடித்து முடித்திருந்தான்.

''ம்.. நானும் அப்பிடித்தான் நெனச்ச.. அதுவும் அந்த ரிஸப்ஷன் ஹோல் கெடச்சது பெரிய வேல!''

''கல்யாணம் பேசி முடிவான ஒடனே மொதல் வேலையா ஹோல புக் பண்ணிட்ட.. இல்லாட்டிக் கெடச்சிருக்காது...''

''மாமி, எங்கட ஸீனா ஆண்டி சொன்னா, ஸுல்ஹாவ உடுப்பாட்டின லேடியத்தான் ஆண்டிட மகள்ட கலியாணத்துக்கும் பேச வேணுமென்டு...''

''அதென்டால் சரிக் கஷ்டமான வேல! அவ சரியான டிமான்ட். உடுப்பாட்ட 40,000 எடுக்கிற!''

''கலியாண உடுப்பு எங்க மாமி தச்ச?''

''மகள் சொல்லல்லையா? டுபாய்ல தச்சது. ஒரு லட்சம் மட்டு அதுக்கு முடிஞ்சி''

''எல்லாம் சரி மாமி! இவ்வளவு கஷ்டப்பட்டு நீங்க மகள்ட வெடிங்கச் செஞ்சீங்க. ஆனா, ஒங்கட மகளோட சேந்து வாழ எனக்கு ஏலா! நான் அவவக் கொண்டு வந்து ஒங்களுக்கிட்டயே உடப் போறன்''

சலனமின்றிச் சொன்னான் அமான்.

திடீரென்று விழுந்த இடியால் நிலைகுலைந்து போனாள் ஸுலைஹா.

''மகன்..! மகன்..! நீங்க..''

பேச நா எழவில்லை.

''மாமி! ஸ்வீட்ஸுக்கும் உடுப்புக்கும் செருப்புக்கும் கொடுத்த முக்கியத்துவத்த, நீங்க ஒங்கட மகள்ட குடும்ப வாழ்க்கைக்குக் கொடுக்கல்லையே! ஸுல்ஹாக்கு மனுஷரோட பழகத் தெரியா... ஊட்டு வேலையொன்டும் செய்யத் தெரியா... பிரச்சினைகள சமாளிக்கத் தெரியா...ஹஸ்பன்ட் என்ட முறையில என்னக் கவனிக்கக் கூடத் தெரியமலிருக்கு... இவவோட எப்பிடி மாமி சேந்து வாழ்றது?''

அதுவரை சிலையாகிப் போயிருந்தவள் திடீரென விம்மியழத் தொடங்கி விட்டாள்.

''காலையில குளிச்சி, உடுத்து, மேக்அப் செஞ்சி நாளத் தொடங்கினா போனும் டீவியும்தான்!''

அவன் சொன்னதைக் கேட்டு அவளது அழுகைச் சத்தம் அதிகரித்தது.

''அழ வேணாம் மாமி! எடுத்ததுக்கெல்லாம் தலாக் சொல்றவங்கட லிஸ்ட்ல நான் சேர மாட்டேன்... ஆனா, ஸுல்ஹாவ மூனு மாதத்துக்கு ஒங்களுக்கிட்ட கொண்டு வந்து உடுறன். இனியாவது குடும்ப வாழ்க்கைய எப்பிடிக் கொண்டு போறது என்டு சொல்லிக் கொடுங்கோ... இத்தன வருசம் குடும்பம் நடத்தின ஒங்களுக்கு, இந்த எல்லாக் கூத்துகளும் மகள்ட குடும்ப வாழ்க்கைய விட முக்கியமாகிப் போனதுதான் எனக்கு நம்ப ஏலாமல் இருக்கு... நாளைக்கே நான் கூட்டி வாரன். இன்ஷா அல்லாஹ், கொஞ்சநாள் போன பிறகு வந்து கூட்டிப் போறன்...''

சொல்லி விட்டு காரை நோக்கி வேகமாக நடந்தான் அமான்.

■

# Advertisement Tariff

| Pages | ALHASANATH | | AHARAM | | PROBODAYA | | TREND | | ENGAL THESAM | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **SIZE** | **AMOUNT** | SIZE | AMOUNT | SIZE | AMOUNT | SIZE | AMOUNT | SIZE | AMOUNT |
| FRONT | - | - | - | - | - | - | - | - | (TOP 2" X 4") | 3,000.00 |
| | | | | | | | | | (BOTTOM 2" X 10.5") | 5,000.00 |
| BACK | **(10" X 7")** | **60,000.00** | (10" X 7") | 40,000.00 | (10" X 7") | 20,000.00 | (9.6" X 7") | 30,000.00 | (HALF 8" X 10.5") | 15,000.00 |
| | | | | | | | | | (QUARTER 8" X 5") | 7,500.00 |
| FRONT IN | **(10" X 7")** | **40,000.00** | (10" X 7") | 20,000.00 | (10" X 7") | 15,000.00 | (9.6" X 7") | 20,000.00 | - | - |
| BACK IN | **(10" X 7")** | **40,000.00** | (7" X 7") | 20,000.00 | (10" X 7") | 15,000.00 | (9.6" X 7") | 20,000.00 | | |
| **INNER PAGES** | | | | | | | | | | |
| FULL | **(9.4" X 7")** | **20,000.00** | (9.4" X 6.5") | 12,000.00 | (9.4" X 6.5") | 10,000.00 | (8.6" X 6.2") | 15,000.00 | - | - |
| HALF | **(4.7" X 7")** | **10,000.00** | (4.7" X 6.5") | 6,000.00 | (4.7" X 6.5") | 6,000.00 | (4.3" X 6.2") | 8,000.00 | (8" X 10.5") | 10,000.00 |
| QUARTER | **(4.7" X 3.5")** | **6,000.00** | (4.7" X 3.2") | 3,500.00 | (4.7" X 3.2") | 3,500.00 | (4.3" X3.1") | 4,000.00 | (8" X 5") | 5,000.00 |
| COLUMN | **(2" X 3.5")** | **3,500.00** | (2" X 3.2") | 1,500.00 | (2" X 3.2") | 1,500.00 | (2" X 3.1") | 2,000.00 | (2" X 5") | 2,500.00 |
| COLUMN | **(2" X 7")** | **4,500.00** | (2" X 6.5") | 3,500.00 | (2" X 6.5") | 3,500.00 | (2" X 6.2") | 4,000.00 | (2" X10. 5") | 4,500.00 |

**தொடர்புகளுக்கு:**

*077 89 42 217*

**77, Sri Vajiragnana Mw, Colombo- 00900, Sri lanka**

**Tel: +94112689324 Fax: +94112686030**

(25 ஆம் பக்கத் தொடர்) உங்கள் பிள்ளையின்...

''இவ்வாறு நடப்பது சாத்தியமில்லை'' என்றான். அப்போது அந்த இமாம் ''அவ்வாறென்றால் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கோள்கள் அனைத்தும் இயங்குவதற்கு ஒருவன் தேவைதானே'' என வாதிட்டு வெற்றி பெற்றார்.

05. அல்லாஹ்வை நினைவுகூரல் (திக்ர்)

''அல்லாஹ்வை நினைவுகூருவதன் மூலமாகவே உள்ளங்கள் அமைதியடைகின்றன'' என அல்குர்ஆன் சொல்கிறது. அனைத்து சந்தர்ப்பங்களிலும் அல்லாஹ்வை நினைத்துக் கொள்ள வேண்டுமென பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும். சில திக்ர், அவ்ராதுகளை மனனமிடச் செய்ய வேண்டும். சில சந்தர்ப்ப துஆக்களை பெற்றோர்களாகிய நாம் வீட்டிலே காட்சிப்படுத்த வேண்டும். உதாரணமாக வீட்டிற்குள் வரும்போது, வீட்டிலிருந்து வெளியேறும்போது ஓத வேண்டியவை. சில திக்ர்களை சத்தமாக உச்சரித்து ஓத வேண்டும் உதாரணமாக தும்மினால் 'அல்ஹம்துலில்லாஹ்' என்று கூறுவது.

06. சிந்திக்கத் தூண்டுவது

''சிந்திப்பது இபாதத்தாகும்'' என்பது நபி வாக்காகும். அல்குர்ஆன் சிந்திப்பதை தூண்டுகிறது. நபிமார்கள் சிந்திக்குமாறு வலியுறுத்தினார்கள். இவ்விடயத்தில் பெற்றோர் கவனம் செலுத்தி தமது பிள்ளைகளை சிந்திக்கத் தூண்ட வேண்டும்.

1. அல்லாஹ்வின் படைப்புக்கள் பற்றி

அல்லாஹ்வின் படைப்புக்கள் பற்றி சிந்திப்பதானது மனிதனுக்கு நன்மை பயக்கும் ஒரு செயலாகும். மரங்கள், மிருகங்கள், பறவைகள், சூரியன், சந்திரன், மலைகள், ஆறுகள், வானம், பூமி போன்ற இறைவனின் அற்புதப் படைப்புக்களை சிந்திக்கும்போது ஈமான் அதிகரிக்கின்றது.

2. அல்குர்ஆன் பற்றி

அல்குர்ஆனை ஓதுவதோடு மாத்திரம் நிறுத்தி விடாமல் அது சொல்லும் வரலாறுகள், விஞ்ஞானம், எதிர்வுகூறல்கள் பற்றி சிந்திப்பதால் ஈமான் பலப்படும்.

3. மரணம் பற்றி

மரணத்தைப் பற்றி சிந்திப்பது, ஜனாஸா வீடுகளுக்குச் செல்வது, மண்ணறைகளை தரிசிப்பது போன்றவை எமது ஈமானை அதிகரித்துக் கொள்வதற்கான வழிமுறைகளாகும்.

04. கால நகர்வு பற்றி

தனி மனிதன் பற்றியும் சமூகங்கள் பற்றியும் ஆட்சி, அதிகாரம் போன்றவை காலத்துக்குக் காலம் மாற்றமடைவது பற்றியும் சிந்திப்பதும் தமது பிள்ளைகளுக்கு அவற்றை சொல்லிக் கொடுப்பதும் அகீதாவை பலப்படுத்தும். ■

# இறைவா! என்னை கைத்தொலைபேசியாக மாற்றி விடு

ஓர் ஆசிரியை தன் ஆரம்பப் பள்ளி மாணவர்களிடம் ''நீங்கள் இறைவனிடம் விரும்பியதை கேட்பதாக வைத்துக் கொண்டு அதனை ஒரு கட்டுரையாக எழுதித் தாருங்கள்'' என்று கேட்டுக் கொண்டார். மாணவர்களும் தங்களது விருப்பங்களை கட்டுரையாக எழுதிக் கொடுத்தார்கள்.

அவற்றை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்த ஆசிரியை ஒவ்வொன்றாக வாசிக்க ஆரம்பித்தார். அந்த கட்டுரைகளில் ஒன்று அவருடைய மனதைத் தொட்டு விட்டது. அழ ஆரம்பித்து விட்டார். அந்த நேரம் வீடு வந்த கணவன் இதனைப் பார்த்து விட்டு ''ஏன் அழுகிறாய்?'' என வினவினான்.

''ஒரு மாணவனின் வரிகள் என்னை அழ வைத்து விட்டன'' என்றாள். ''என்ன எழுதியுள்ளான்?'' என அவர் வினவ, ''இதோ எடுத்துப் படித்துப் பாருங்கள்'' என கொடுத்தார். அவர் வாசிக்க ஆரம்பித்தார்...

''இறைவா! என்னை நீ Mobile Phone ஆக ஆக்குவாயாக என்று விசேட பிரார்த்தனை செய்கின்றேன். ஏனெனில்,

வீட்டில் பிரத்தியேக இடம் கிடைக்கும்.

எந்த இடையூறுகளும் இல்லாமல் நான் சொல்வதைக் கேட்பார்கள்.

என் தந்தை களைப்படைந்து வேலையிலிருந்து வரும் வேளைகளில் அவருடைய அருகாமை எனக்கு கிடைக்கும்.

கவலையான நேரங்களில் கூட தாய் என்னோடு நெருங்கி இருப்பாள்.

என்னை கையில் சுமப்பதற்காக எனது சகோதரர்கள் சண்டை இட்டுக் கொள்வார்கள்.

மொத்த குடும்பமும் எனக்காக அனைத்தையும் விட்டு விடுவார்கள்.

இறைவா நான் இறுதியாக கேட்பதெல்லாம் அவர்களை நான் மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான்...

நான் உன்னிடம் அதிகமாய் ஒன்றும் கேட்டு விடவில்லை... ஒரு Mobile Phone னைப் போல வாழ வேண்டும் என்று மட்டுமே கேட்கிறேன்.''

வாசித்து முடித்த கணவன் சொன்னார்... ''பாவம் அந்த குழந்தை... அவனது பெற்றோர் எவ்வளவு மோசமானவர்களாய் இருப்பார்களோ''

இதைக் கேட்டு விட்டு மீண்டும் அழுத ஆசிரியை சொன்னார்.

''அதை எழுதியது எங்கள் குழந்தைதான்''

-சமூக வலைத்தளங்களிலிருந்து-

(49 ஆம் பக்கத் தொடர்) பதாவா...

**கேள்வி: மாமா, மாமி, சாச்சா, சாச்சிமார்களுடைய மகள்மாரைத் திருமணம் முடிப்பதில் இஸ்லாத்தில் தடைகள் இருக்கின்றனவா?**

**பதில்:** திருமணம் முடிப்பதற்குத் தடைசெய்யப்பட்டவர்களை அல்குர்ஆன் மிகத் தெளிவாகக் கூறியுள்ளது.

''அவர்கள் உங்களுடைய தாய்மார்கள், மகள்மார், சகோதரிகள், சாச்சிமார், மாமிமார், சகோதரனின் மகள்மார், சகோதரியின் மகள்மார், பாலூட்டிய தாய்மார்கள், பால்குடி மூலச் சகோதரிகள், மனைவிமாரின் தாய்மார்கள், ஒரு பெண்ணைத் திருமணம் செய்து அவளுடன் நீங்கள் உறவு கொண்டு விட்டால் அவளுடைய முந்தைய கணவனுக்குப் பிறந்த மகள்மார், மகன்மாரின் மனைவிமார், ஏக காலத்தில் இரண்டு சகோதரிகளை திருமணம் முடித்தல், கணவனுள்ள பெண்கள். இவர்களைத் தவிர மற்றப் பெண்களைத் திருமணம் செய்து கொள்வதற்கு அனுமதிக்கப்பட் டுள்ளது; ஆகுமாக்கப்பட்டுள்ளது.'' (4: 23-24)

எனவே, கேள்வியில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களை திருமணம் முடிப்பதில் இஸ்லாத்தின் சட்டதிட்டங்களில் எவ்வித தடைகளும் இல்லை. ■

(27 ஆம் பக்கத் தொடர்) உம்மு ஹராம் பின்த் மில்ஹான்...

அறப்போருக்காக கடலில் முதன் முதலாகப் பயணிப்பவர்களில் ஒருவராக இருப்பீர்'' என்றார்கள்.

அவ்வாறே முஆவியா பின் அபூ ஸுப்யான் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஸைப்ரஸ் தீவின் மீது அறப்போர் புரியச் சென்றவர்களுடன் உம்மு ஹராம் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களும் கடல் பயணம் செய்து கடலிலிருந்து தீவின் ஒரு பகுதிக்கு புறப்பட்டபோது தம் வாகனத்திலிருந்து விழுந்து வீர மரணமடைந்தார். (அல்புகாரி)

உபாதா இப்னு ஸாமித் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் யர்மூக் போரில் தன் உயிரை அர்ப்பணித்தார்கள்.

உம்மு ஹராம் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களான உம்மு ஸுலைம், அனஸ் இப்னு மாலிக், ஹராம் பின் மில்ஹான், உபாதா பின் ஸாமித் (ரழியல்லாஹு அன்ஹும்) ஆகிய அனைவரும் ஹதீஸ் அறிவிப்பாளர்களாகவும் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ■

(33 ஆம் பக்கத் தொடர்) ஆன்மாவை அச்சுறுத்தும்...

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அடிக்கடி பின்வருமாறு பிரார்த்திப்பார்கள் என்று அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அறிவிக்கிறார்:

''அல்லாஹும்ம இன்னி அஊதுபிக மினல் ஹம்மி வல்ஹுஸ்னி வல்அஜ்ஸி வல்கஸலி'' (இறைவா! கவலை, வருந்துதல், இயலாமை, சோம்பல் ஆகியவற்றிடமிருந்து உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்) (அல்புகாரி, முஸ்லிம்)

**05. இலக்கில் குறியாக இருத்தல்:**

இப்னுல் ஜவ்ஸி (ரஹிமஹுல்லாஹ்) குறிப்பிடுகிறார்: ''சோம்பலுக்குப் பரிகாரம் ஒருவர் தனது இலக்கை அடைய முடியாமல் போகலாம் அல்லது கைசேதப்பட வேண்டிய நிலை உருவாகலாம் என்று அஞ்சி தன்னை உற்சாகப்படுத்திக் கொள்வதில் தங்கியுள்ளது. அலட்சியப் போக்குள்ள ஒருவருக்குக் காத்திருக்கின்ற மிகப் பெரிய வேதனை யாதெனில், முயன்று உழைத்தவருக்கு கிடைக்கப் போகும் சன்மானங்களைப் பார்ப்பதாகும். புத்தியுள்ள மனிதன் கவனக் குறைவினால் ஏற்படப் போகும் விளைவுகளை சிந்தித்துணர வேண்டும். அறிவுள்ள மனிதன் தான் வீணுக்காகப் படைக்கப்படவில்லை என்பதையும் இவ்வுலகில் தான் கூலிக்கு அமர்த்தப்பட்டுள்ள ஒரு பணியாள் போன்றவன் என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். அலட்சியப் போக்குக்கு மற்றொரு சிகிச்சை வரலாற்றில் அர்ப்பணிப்புக்கள் புரிந்து வாழ்ந்த உத்தமர்களின் சரிதைகளைக் கற்று படிப்பினை பெறுவதாகும். விதை தூவும் பருவத்தில் எந்த முயற்சியும் எடுக்காமல் அறுவடைக் காலத்தை எதிர்பார்த்திருக்கின்ற மனிதனைப் பற்றி நான் ஆச்சரியமடைகிறேன்.'' (திப்புர் ரூஹானி) ■

(35 ஆம் பக்கத் தொடர்) **பிரார்த்தனையும்...**

இவர்தான் நபியாக வர வேண்டும் என்றோ, இவரை உனது தூதராக அனுப்பு என்றோ அல்லாஹ்விடம் யாரும் விண்ணப்பிக்க முடியாது.

ஆயினும், மனித இன வரலாற்றிலேயே ஒருவருடைய பிரார்த்தனை மூலம் இன்னொருவர் நபியாக அனுப்பப்பட்டார் என்றால் அது ஹாரூன் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் மட்டுமே. தமது சகோதரருக்காக மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் இவ்வாறு துஆ செய்ததாக திருக்குர்ஆன் கூறுகிறது: **''மேலும், என்னுடைய சகோதரர் ஹாரூன் என்னைவிட அதிகமாக நாவன்மை உடையவர். அவரை உதவியாளர் எனும் முறையில் என்னுடன் அனுப்பி வைப்பாயாக! அவர் எனக்குத் துணையிருப்பார்.''** (28: 34)

அடுத்தவருக்காக நாம் செய்யும் பிரார்த்தனைகள் அவர்களுடைய உள்ளங்களை வெல்லும் என்பதற்காகத் தானோ என்னவோ, உம்ராவை நிறைவேற்றுவதற்காக உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் அனுமதி கோரியபோது பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் உமரிடம் வைத்த ஒரேயொரு கோரிக்கை, ''என் சகோதரரே! உமது பிரார்த்தனையில் எம்மை மறந்து விடாதீர்..!'' (திர்மிதி) ■

## மணமகன் தேவை

புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த அரச நிறுவனமொன்றில் முகாமைத்துவ உதவியாளராக பணி புரிந்து கொண்டே முகாமைத்துவ பட்டப் படிப்பைத் தொடரும் மார்க்கப்பற்றுள்ள மணமகளுக்கு (வயது 23, உயரம் 5' 4'') 27 வயதுக்குட்பட்ட படித்த அரச அல்லது தனியார் நிறுவனமொன்றில் பணி புரியும் மார்க்கப்பற்றுள்ள மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு: 0754972482**

கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த ஆங்கில மொழி மூலம் உயர் கல்வி டிப்ளோமா (HND English) முடித்து ஆங்கில ஆசிரியையாக கடமை புரியும் (வயது 23, உயரம் 5' 3'') மணமகளுக்கு தகுந்த மார்க்கப்பற்றுள்ள அரசாங்க அல்லது தனியார் துறையில் தொழில் புரிகின்ற மணகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு: 0777162431**

கண்டி மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட மார்க்கப்பற்றும் நல்லொழுக்கமும் உள்ள B.S.C. IT Degree ஐ பூர்த்தி செய்து Software Engineering கற்று அரசாங்க தொழில் புரியும் மணமகளுக்கு (வயது 27, உயரம் 5') மார்க்கப்பற்றுள்ள பொறியியலாளர், கணக்காளர், Software Engineering கற்ற அல்லது நன்கு கற்று உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ தொழில் புரியும் மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு: 076 6212268**

## மணமகள் தேவை

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த கொழும்பில் வியாபாரம் செய்கின்ற மணமகன் (வயது 50, உயரம் 5' 4'') பொருத்தமான துணையை எதிர்பார்க்கின்றார். கல்வி தகைமையுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

**தொடர்புகளுக்கு: 0777809946**

களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த கௌரவமான குடும்பப் பின்னணியுடைய துறைமுகத்தில் பொறுப்பான பதவியில் பணி புரியும், தகுந்த காரணங்களுக்காக விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு (வயது 29, உயரம் 5' 6'') மார்க்கப்பற்றும் நல்லொழுக்கமுமுள்ள மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். மணமகனுக்கு வீடு, வாகனம் என்பன உண்டு.

**தொடர்புகளுக்கு: 0718889933, 0784667727**

## மணமக்கள் தேவை

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த Autocad Draughtsman ஆக பணியாற்றும் மார்க்கப்பற்றுள்ள மணமகனுக்கும் (வயது 30 உயரம் 5' 5'') Chartered Audit Consultant firm இல் தொழில் புரியும் (Accounts, Tax Executive) மார்க்கப்பற்றுள்ள மணமகளுக்கும் பொருத்தமான துணை தேவை.

**தொடர்புகளுக்கு: 0772296854, 0773646306**

## சத்திர சிகிச்சைக்கு உதவி கோருகிறார்

அளுத்கம, கம்பிரிகஸ்வெவ, அனுராதபுரம் எனும் முகவரியைச் சேர்ந்த ஜமால்தீன் ரஜமதுல்லாஹ்- பாத்திமா றிஸ்மினா தம்பதியினரின் நான்கு வயது புதல்வி பாத்திமா ருஹா, மெனன்ஷைட்டிஸ் எனும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு இரு செவிப்புலன்களையும் இழந்துள்ளார். தற்போது பேசவும் இயலாத நிலைக்கு ஆளாகியுள்ளார்.

செவிப்புலன் சத்திர சிகிச்சை மேற்கொள்வதன் மூலம் இந்நோயைக் குணப்படுத்த முடியும் எனவும் அதற்கு சுமார் 40,50000.00 (நாற்பது இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா) செலவாகுமெனவும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெரும் தொகைப் பணத்தை திரட்டுவதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்ளும் பெற்றோர், நல்லுள்ளம் கொண்டோரிடமிருந்து பொருளாதார உதவிகளை எதிர்பார்க்கின்றனர்.

**Name of Account Holder:**
**R. Fathima Ruha**
**Account No: 8730033643**
**Name of Bank and Branch:**
**Commercial Bank, Peradeniya Branch**

## உங்கள் சந்தாக்களைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்!

நிகாஹ் விளம்பரங்களை தகுந்த ஆவணங்களைப் பெற்று சேவை நோக்கிலேயே பிரசுரம் செய்கின்றோம். இரு தரப்பினரும் விளம்பரங்கள் தொடர்பில் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு வேண்டுகிறோம். (ஆசிரியர்)

அல்ஹஸனாத் இதழுக்கு சந்தாக்கள் அனுப்ப நாடுவோர் **ALHASANATH** என்ற பெயருக்கு **Money Order** எடுத்து தபாலகம் **DEMATAGODA** எனக் குறிப்பிட்டு அனுப்பவும். வங்கியில் வைப்பிலிட நாடுவோர் **Srilanka Jamath - E-Islami AC NO: 1320009182, Commercial Bank, Maradana** அல்லது **Srilanka Jamath - E-Islami AC NO: 372132, B.O.C, Maradana** எனும் வங்கிக் கணக்கில் குறித்த தொகைப் பணத்தை வைப்பிலிட்டு பற்றுச்சீட்டை அனுப்பவும்.



கலாநிதி முஹம்மத் இப்னுல் முஹ்தார் அல்ஷன்கீதி

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மதீனாவை நிருவகிக்கும்போது சகல விதமான பன்மைத்துவங்களையும் அங்கிரித்திருந்தார்கள். உதாரணமாக, அகீதா சார்ந்த உறவையும் மதீனா சாசனத் தினுடாக பாதுகாத்தார்கள். ஏனென்றால், அகீதா சார்ந்த உறவு என்பது முஸ்லிம் சமூகத்தின் தனித்துவங்களில் (Religious Identity) ஒன்றாகும். இரண்டாவது, ஏனைய சமூகங்களை உள்ளடக்கும் அரசியல் பன்மைத்துவத்தினையும் (political pluralism) அங்கீகரித்தார்கள். மதீனாவிலுள்ள சகல மதங்களைச் சோந்தவர்களையும் மதீனாவின் அரசியல் அங்கமாக மதீனா சாசனம் பிரகடனம் செய்கிறது. மதீனா அரசை உருவாக்குவதற்காக உழைத்த மற்றும் மதீனா சாசனத்தில் கையெழுத்திட்ட எல்லா மதீனாவாசி களையும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சமமான குடியுரிமையுள்ள மதீனாவின் பிரஜைகளாகவே கருதினார்கள். எனவே, மதீனாவில் வாழ்ந்த ஏனைய மதங்களைச் சேர்ந்த மக்களிடம் ஜிஸ்யா வரியை நபியவர்கள் அறவிடவில்லை.

"அடிப்படையில் அனைத்து உயிர்களும் கூட்டாக வாழும் பண்பைத்தான் கொண்டுள்ளன. கூட்டு வாழ்க்கையில்தான் மகிழ்ச்சியடைகின்றன. ஆனால், இயற்கைக்கு புறம்பாக நாகரிக மனிதர்களை கூட்டு வாழ்க்கையிலிருந்து அப்புறப்படுத்தி, தனித் தனி தீவுகளாக சித றடித்திருக்கிறது நவீன சமூகம்.

கூட்டுச் சமூக, கூட்டுக் குடும்ப வாழ்வை தொலைக்கும் நிலைக்கு சமூகம் வரக் காரணம் என்ன? முற்றிலும் பணமயமாகிப்போன பதற்றமான வாழ்க்கை, ஒவ்வொரு நிமிடமும் இலாபம் சார்ந்து மட்டுமே இயங்க வேண்டும் என்று சமூகத்தை பழக்கப்படுத்தி இருக்கிறது. பொருட்களை நுகர்ந்து, கொண்டாடி மகிழ்வது மட்டுமே வாழ்வின் சாராம்சம் என்ற நிலமையை நுகர்வுக் கலாச்சாரம் ஏற்படுத்தியிருக்கிறது. பணம், இலாபம், நுகர்வு என்று ஓடும் மனிதர்கள் உறவுகளின் மீதான பற்றை இழக்கிறார்கள். கூட்டு வாழ்க்கையை சுமையாக கருதுகிறார்கள். ஓடி ஓடி பணம் சம்பாதிப்பதில் சற்று நிதானம் ஏற்பட்டாலும் நாம் தோற்றுவிடுவோமோ என்று அஞ்சுகின்றனர்.

ஆகவே ஓடுகின்றனர், குழந்தைகளை ஓடவைக்கின்றனர், முதியோர்களை கழித்துக் கட்டுகின்றனர். வங்கி சேமிப்பை உயர்த்துவதில் மொத்த வாழ்க்கையையும் செலவிட்டு ஜெயித்துவிட்டதாய் கொக்கரிக்கின்றனர்."

- அருண் பகத் -

வாழ்க்கைப் பாதை கடினமானது. மேடு, பள்ளம் நிறைந்தது. இதை முதலில் உணர வேண்டும். அழுத்தந்திருத்தமாய் உணர வேண்டும்.

மரக்கன்று நட்டு அது மெதுமெதுவே வளர்ந்து மரமாவதைப் பார்த்திருக்கிறீர்களா? இன்றைய 'ஃபாஸ்ட் ஃபுட்' உலகில் யாருக்கு அதற்கு அவகாசம் இருக்கிறது? அல்லது மரம் வளர்க்கும் அளவிற்கு இடமொன்று இருந்தால் கூட, அதை அடுக்கி மாடி கட்டி விற்று விடுகிறார்கள். போகட்டும். செடியொன்று வளரும்போது சில இலைகள் பழுத்து உதிரும். ஆனால், அதை விடச் சிறிது அதிகமாய் இலைகள் துளிர்க்கும். இப்படிச் சில இலைகளை இழந்து, இழந்து, அதனிலும் அதிகமாய் இலைகளை ஈன்று ஈன்றுதான் செடியொன்று நெடிய மரமாகிறது.

பல முறைகள் கீழே விழுந்து எழுந்தால்தானே சைக்கிள் ஓட்ட பேலன்ஸ் கிடைக்கிறது! சில சுதந்திரங்களை இழந்தால்தானே நல்லறமாக இல்லறம் அமைகிறது!

இதை நாம் நன்றாக உணர வேண்டும். அதை விட்டு விட்டு, "என் இலட்சியமும் குறிக்கோளும் உலக உன்னதம். அதனால், எனக்கு அனைத்து விஷயங்களும் தங்குதடையின்றி நடைபெற வேண்டும் அதற்கு இணக்கமாய் இல்லையெனில், புவியின் விதியை மாற்றுங்கள் Break the Rules" என்று யாரேனும் நினைத்தால்... சாரி! நாளைக் காலை உங்கள் ஊரிலும் சூரியன் கிழக்கேதான் உதிக்கும்!

-நூருத்தீன்-

In Kandy

TVEC edexcel PEARSON

# TVEC Approved Qualification

# Diploma in Teaching
(Primary)




- More practical oriented teaching/assessing methods.
- Special module on IT to enhance the use of latest technology in teaching and learning process
- Interaction to eminent personalities in the field, who have international exposure.
- Higher education local/abroad.
- Total immersion programme to improve English.
- Soft skills development essential for a good teacher.
- Additional language coaching for who need.

**Edexcel Assured**

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
KANDY

## For more Information

CALL 0777 888 199/0702 010 037

Registered as a News Paper in GPO/QD/99/NEWS/2017 Printed by AJ Prints (Pvt) Ltd. 44, Station Road, Dehiwela.

